


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேராசிரியர் சி. தில்லைநாதன் அவர்கட்கு அன்புடன் ஜீவ.

23/2/95.

University of Peradeniya
04 JAN 2022
LIBRARY

704728

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

391 405

# எவளுக்கும் தாயாக . . .

(சிறுகதைத் தொகுப்பு) 135

எஸ். அகஸ்தியர்

University of Peradeniya
04 JAN 2022
LIBRARY

நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்
41 பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்
சென்னை – 600 098

704728

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

EVALUKKUM THAAYAAKA

(short stories)

by S. Augustiar

முதல் பதிப்பு : டிசம்பர், 1994

நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிமிடெட் வெளியீடு

© நவமணி அகஸ்தியர்

Code No. :A 797

ISBN :81-234-0354-2

விலை : ரூ. 22.00

ஒளி அச்சு : வள்ளுவர் முத்தமிழ் மன்றம் கம்ப்யூட்டர் சென்டர்

சென்னை – 24

அச்சிட்டோர் :

கண்ணப்பா ஆர்ட் பிரிண்டர்ஸ்

60/4, சூரப்ப முதலி தெரு,

திருவல்லிக்கேணி,

சென்னை – 600 005.

தொலைபேசி : 842910

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேருரை

ஐம்பது வருஷ கால எழுத்து எனக்கு நல்ல நண்பர்களை, சிறந்த வாசகர்களை, கலை இலக்கியவாதிகளை, பத்திரிக்கை - சஞ்சிகை ஆசிரியர்களை, கருத்தியற் தோழர்களை, பொது மக்களை மட்டுமன்றி, வெறுப்பாளர்களையும் பல்வேறு தோற்றங்களில் இனங்காட்டியிருக்கிறது. பல்லின மக்கள் மத்தியில் நிபந்தனையின்றி வாழும் பக்குவத்தையும் இந்த எழுத்து எனக்கு அளித்திருக்கிறது. என் கருத்துக்கு மாறுபட்டவர்களும் என் எழுத்தில் வசப்பட்ட கலை இலக்கிய தாசிகளாகத் திகழ்வதையும் இதனூடு காண்கிறேன். கருத்து எதுவெனினும், அவர்களிற் தோன்றும் ஆக்கபூர்வக் கலை இலக்கிய வடிவங்கள் என்னை ஆகர்ஷிக்கின்றன. அது போன்றே அவர்களுக்கும் என் இலக்கியம் ஆகிவிடுகிறது. இவ்வாறு மக்கள், இலக்கியவாதிகள், கலைஞர்கள் என் அபிமானத்துக்குப் பாத்திரவாதிகளாகிவிடுவது போலவே நானும் அவர்கள் மட்டில் ஆகிவிடுகிறேன். இந்த வகையில் மக்களே என் ஆதர்ஷ புருஷர்களாகி விடுகின்றனர். இதனால் அவர்கள் என் மீது உரிமையோடு சினக்கின்றனர்; பாசங் கொள்கின்றனர்; விமர்சிக்கின்றனர். இதுதான் என்னை என்னாகவே என்னுள் கிளர்ந்தார்த்தும் என் எழுத்தின் பிரசவ ஆத்ம நாதம்.

என் எழுத்து எதையும் படிக்காமலே என்னை 'எழுத்தாளன்' என்று சொல்வோரைப் புரிந்து கொள்ள எனக்குச் சிரமமிருப்பதில்லை. எனினும், அவர்கள் ஏதோ ஒரு வகையில் என் இலக்கிய அபிமானிகளாகின்றனர். என் பெயரை விட என் பெயருக்கு எந்த அடைமொழியும் தேவையில்லை. என் எழுத்துக்கு வசமானவர்களிற் சிலர், பின் எழுத்தாளர்களாவதும், 'தெற்போட்ட' எழுத்தாளர்கள் பற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'விசேட அக்கறை' எடுத்து உணர்த்த வெளிக்கிடுவதன் உள்ளார்த்தம் எனக்கு வினோதமாகப் படுவதில்லை. இலக்கிய உலகில் இந்த 'நோய்' எப்போதும் இருந்து வருகிறது. இந்த நோய்வாய்ப்பட்ட எழுத்து ஈற்றில் இல்லாமலே போய்விட்டது. அப்படி நிகழக் கூடாது.

முற்போக்குக் கலை இலக்கிய அரசியற் சித்தாந்தப் பேரியக்கம், கருத்தியலுக்கான போதமூட்டி என்னை வலுவாக்கிய போதும், எனது கருத்துக்குச் சார்பானவர்களின் 'மௌன விரத மறைப்பை' விட, பெரும்பாலும் முரண்பட்டவர்களின் விமர்சனங்களும், கண்டனங்களும், எதிர்ப்புகளுமே, என் எழுத்துக்கு விசித்திரமாக அதிகம் உரம் பாய்ச்சின. எப்போதும் மக்களிடம் ஓயாது கற்றுக் கொள்ளவும், கற்றவற்றைப் புடம் போடவும் இவை எனக்கு உதவுகின்றன. பெரும்பாலும் எனது நூல்களையும் ஆக்கங்களையும் எனது கருத்துக்கு முரண்பட்டவர்களே முன்பு வெளியிட்டார்கள் என்பதிலிருந்து இக் கூற்றினைப் புரிந்து கொள்ளலாம். என்னைப் போலவே அவர்களும் என் எழுத்தில் அபிரித மதிப்பு வைத்திருப்பதை இது புலப்படுத்துகிறதாகவே கருதுகிறேன்.

என் எழுத்தே என் சுழி. பிள்ளையார் சுழி எனக்குக் கிடையாது. அதிதீவிர வாதத்தில் சிக்குண்டு, இடம் பொருள் ஏவல் பாராது, கற்சிலை சாங்கம் ஒரு சுலோகம் போல் வெறுமனே கோஷிக்கப்படுகிற சுரியானது சுழி காற்றாகியதால், அதைப் பொறுத்தவரை அதற்கே என் இலக்கியம் 'தீண்டப்படாத' தாகவும் சிலவேளை ஆகிவிடுகிறது. இதனால் என் கருத்துக்கு மாறுபட்ட என் சமகால எழுத்தாளர்கள் பற்றி 'வில்லங்கமாக' எழுதியே எனக்கு 'மவுசு' தேடுவதும் அத்தகையோர்க்கு ' இலக்கிய சேவை' யாகிவிடுகிறது. நான் மவுசு தேடுவதற்காக எழுதுபவனல்லன்; மக்களுக்காக எழுதுபவன் என்பதை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்கள் மறந்தே விடுகின்றனர். எனது சமூகவியற் பல்கலைக்கழகம் பல்துறை இலக்கியப் படைப்பாளியாக என்னை ஆக்கியிருக்கிறது. 'மக்களிடமிருந்து கற்றுப் புடமிட்டு மக்களுக்கு அளிப்பது' என்ற மக்கள்மயப்படுத்தப்படும் என் ஆத்மார்த்த இலக்கிய உயிர்ப்பையும் அது எனக்கு விளக்கியிருக்கிறது. இத்தாற்பரியத்தை என் ஆரம்ப காலப் படைப்புகளிலிருந்து இன்றுவரை பரிணாமங் கொண்ட இலக்கியங்களுக்கு நெருக்கமான எழுத்தாளர்கள், விமர்சகர்கள், வாசகர்கள்போல் என்னை நேரிற் பார்த்தறியாத பொதுமக்களாகிய வாசகர்களும் நன்கு புரிவர்.

சமூகவியல் இலக்கியக்காறனுக்கு எழுத்து ஒரு தவம்; பரிசோதனை மிக்க உத்தரிப்பிஸ்தலம். ஆனால், அதனின்று மீட்பராகி அனவரத காலமும் ஜீவிக்கும் தன்மை இந்தச் சிருஷ்டிக்கே உண்டு. இவ்வகையாக மக்களின் மனச்சாட்சியையும், தேசங்களின் ஆன்மாவையும், யதார்த்தபூர்வமாகத் தொட்டு நின்ற பாங்கினை டால்ஸ்டாய், தாகூர், கார்க்கி, பாரதி, புதுமைப்பித்தன், வ.ரா., சத்தியஜித்ரே, மாட்டின் விக்கிரமசிங்கா, சிதம்பர ரகுநாதன், தகழி சிவசங்கரன் பிள்ளை, வி.ஸ. காண்டேகர், ஜெயகாந்தன், பொன்னீலன், சு.சமுத்திரம் போன்ற இலக்கியக்காறர்களின் படைப்புகளில் அதிகம் பார்க்கலாம்.

'பிரமுகர்ப்படுத்தப்படும்' ஈழத்து இலக்கிய வளர்ச்சிக்கும் அரச அதிகார ஊர்தியால் 'உற்பத்தி' யாகும் இலக்கியங்களுக்கும் பகீரதப் பிரயத்தனம் செய்து இலக்கியப் பிராப்தந் தேடும் சாதனை என்னிடம் கிடையாது. இந்தச் 'சாதனை' இருந்திருப்பின், பிரபல பத்திரிகை புறக்கணித்த கதைகளுக்கு, அகதியாகப் பிரான்சில் ஜீவிக்கும் எனக்கு 'முட்டாள்தனமாக' இரண்டு அரசுகளின் சாகித்திய மண்டலங்கள் 'பரிசு கொடுத்துப் பரிசு கெட்டிருக்கா' இப்படியான உத்தரிப்பிஸ்தலங்களும் என் இலக்கியங்களுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்து சேர்ந்து விடுகின்றன. இதுவும் என் எழுத்தின் ஜீவன் என்பேன்.

எழுத்துச் சுதந்திரம் என்ற 'புண்ணிய ஸ்தலம்' அது வேண்டி நிற்பதையே சுதந்திரமாகக் கருதும் வரை, என் எழுத்து மட்டுமல்ல, என்போன்ற எழுத்தாளர்களுக்கும் இந்தக் 'கடிவாள இலக்கிய உலகம்' உத்தரிப்பிஸ்தலம்தான். கற்களையும், முட்களையும், முள் முடிகளையும், கட்டுண்ட கயிறுகளையும், சங்கிலி சவுக்குகளையும், தாண்டியே கரடுமுரடான பாதையில் 'சுதந்திரம்' என்ற சுலோகத்துள் மட்டும் நின்று விட வேண்டியிருக்கிறது. 'எடுத்து அடிக்கிற உடுக்கை உரமாக அடி. ஆனால், அப்படி அடிக்கிற உடுக்கை எனக்காக அடி' என்ற தோரணையில் எழுத்துச் சுதந்திரம் 'சட்டம்பி' யாராகின், இலக்கியம் ஒருபோதும் வளராது; வெற்றுச் சுலோகம் உற்பத்தியாக்கும் பிரசார நோட்டீஸ்கள்தாம் விஞ்சும்.

இத்தகைய விபத்துக்களையும் அபத்தங்களையும் தாண்டியே எனது படைப்புகள் அன்று பிரசவமாகின; இன்றும் பிரசவமாகின்றன. இப்பிரசவம் காலத்தால் சாகாத இலக்கியங்களை இனங்கண்டு காலத்திற் சொல்லும் காலம் கட்டாயம் வரும். அவ்வாறுள்ள கதைகளையும் இநிற் தரிசிக்கலாம்.

15 கதைகள் வீதம் 25 சிறுகதைத் தொகுப்புகளை ஒரே எடுப்பில் வெளியிடப் போதுமான என் சிறுகதைகள் இலங்கை, இந்தியப் பத்திரிகை – சஞ்சிகைகளில் பிரசுரமாகியும், 1983 ஜூலை இனக்கலவரத்தின்போது அனைய நூர்ல்களையும் படைப்புகளையும் சொந்த மண்ணில் ராணுவம் சூறையாடியதால் நூல்களாக்கும் சகல வாய்ப்புகளையும் இழக்க நேரிட்டமை ஒரு சோக முடிவு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்கதைகளை அனுப்பியும், தந்தும் உதவிய வாசகர்களும் எழுத்தாளர் செ. யோகநாதனும், அகாலமான எழுத்தாளர் காவலூர் ஜெகநாதனும், என் மருமகளின் தந்தை திரு. ஏ. ஸ்ரீபனும் என்றும் அன்போடு நினைவு கூரப்படுவர்.

இக்கதைகள் பிரசுரமான 'தேசாபிமானி', 'சுதந்திரன்', 'தினகரன்', 'வீரகேசரி', 'தாமரை', 'எழுத்து', 'நான்காவது பரிமாணம்', 'கண்', 'ஓசை', 'பாரிஸ் முரசு', 'தினமணிச் சுடர்' ஆகிய பத்திரிகை – சஞ்சிகை ஆசிரியர்களுக்கும், ஏலவே மூன்று நூல்களை வெளியிட்டு இந்நூலையும் அழகாக வெளியிடும் நியூ செஞ்சரி புத்தக நிறுவனத்தினருக்கும் தொழிலாளர்களுக்கும் என் நன்றி.

8.6.94.

எஸ். அகஸ்தியர்
9,RUE GALLERON,
75020. PARIS,
FRANCE.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணிக்கை

'இக் குழந்தை தப்பாது
இறக்கும்' என ஊர் சலிக்க –
பெத்தாச்சி செல்லாச்சி
பெருந்துயரில் அலைந்தேங்க —
'சூட்டுக்கணை பிடிக்கச்
சில்வேளை சுகமாகும்'
என்ற 'தமிழ்ப் பரியாரி'
சுப்புறுமணியம் வாக்கை
வலுவாய் விஸ் வாசித்துக்
*கோடிச் சணற் சாக்கால்
மூடி அணைத்து வைத்து
முழு இரவும் கண் விழித்து
எனைக்காத்து உயிர் மீட்ட
என் மாதா பிதாவான
அன்னம்மா சவரிமுத்து
பாதார விந்தங்கட்கு . . . . . .
'மருமகனாய் ஒப்பேன் பெற்ற
மைந்தனாய் வரித்தேன்' என்றே
கருத்திலும் நேர்மை போந்து
விருப்பிலும் பாசம் பூண்டு
தாயினும் மேலதாகத்
தனயன் போல் எனைக் காத்த
என் துணைவி அன்னையாய
திரேசா எனும் மாதாவுக்கு . . . . . .

— எஸ். ஏ.

* கோடி – புதுசு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | இரத்த ஞாயிறு | 1 |
| 2. | நித்திய பேரின்பம் . . . ? | 8 |
| 3. | பாவிகளை ரக்ஷிக்க | 20 |
| 4. | ஞானோதயம் | 27 |
| 5. | தீர்ப்பு | 44 |
| 6. | காதல் தத்துவம் | 49 |
| 7. | சிதைவு | 53 |
| 8. | எவளுக்கும் தாயாக . . . | 67 |
| 9. | போர்வை | 81 |
| 10. | சுதந்திரம் | 100 |
| 11. | மொக்குகள் | 115 |
| 12. | வேட்டை | 121 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1. இரத்த ஞாயிறு

குளிர்கால அரண்மனையில் 'குளு குளு' இன்பப் போதையிலிருந்த ஜார் மன்னனுக்கு, இந்த மக்கள் கூட்டம் கண்டு கோபம் கொப்பளித்தது. ஆனால், அவன் அதைக் காட்டிக் கொள்ளாமல் சாது போல் சிரித்தான். தன் உற்ற நண்பன் பாதிரி கேபனைக் கண்டதும், அவன் கோபமும் சிரிப்பும் மறைந்துவிட்டன.

பொங்கி எழும் கடல் அலைகள் போல் ஜனத்திரள் சாரை சாரையாக ஜார் மன்னன் மாளிகையை நோக்கிப் போய்க் கொண்டிருந்தது.

அவர்கள் கண்களில் ஜார் மன்னனின் கோபுர மாளிகை 'பளிச்' சென்று தெரிகிறது.

சகிக்க முடியாத வாழ்க்கையில் உழன்று போன அவர்களின் அழுக்கேறிய சாம்பல் நிற முகங்களில் ஏக்கம் துடித்துக் கொண்டிருந்தது.

சிறு பறவைகளின் கீச்சுக் கூச்சல்களாக அவர்களிடையே வார்த்தைகள் கிளம்பின:

"தாங்க முடியாத உபத்திரவ வாழ்வை அனுபவித்து மாய்வதைவிட, இன்பவாழ்விற்காகப் போராடி மாண்டு விடுவது மேல்"

"ஒன்றா ரண்டா? எத்தனை ஆண்டுகளாக எத்தனை காலங்களாக இப்படிப் பொறுத்துக் கொண்டு மாய்வது?"

"நாங்கள் ஏழைகள்தான். ஆனால், உழைப்பாளர்கள்; ஜார் மன்னனைப் போல் மனிதர்கள்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எங்களிடம் இழப்பதற்கு எதுவுமேயில்லை. அடைவதற்கு உலகமே இருக்கிறது"

"நாங்கள் உருக்குலைந்திருக்கிறோம். ஆனால் உலகத்தை வெல்ல எங்களிடம் 'சக்தி' யுண்டு"

தொழிலாளர்களின் குரல்கள் அந்தகாரித்துக் கமறு கின்றன.

பழைய பஞ்சாலிகள் மட்டும் எதையோ 'முணுமுணு' க் கின்றார்கள். இவர்களுக்கு வாழ்க்கையின் முழுப்பாகமும் கடந்த மோன நிலை.

ஆயிரத்துத் தொளாயிரத்தி ஐந்தாம் ஆண்டு ஜனவரி மாதம் இருபத்திரண்டாம் நாள்.

'செயின்ற் பீட்டர்ஸ் பார்க்' நகரின் ஆண்கள் – பெண்கள் – இளைஞர்கள் – தொழிலாளர்கள் – குழந்தைகள் என்று சுமார் இரண்டு லட்சம் மக்கள் திரள் ஜார் மன்னனின் மாரிகால அரண்மனையை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றனர்.

அவர்களுக்கு உறுதுணையாக நின்று அவர்களுக்காக ஜாரிடம் வாதிட உத்தரவாதம் அளித்த பாதிரி கேபன் அவர்களை வழிநடத்திச் செல்கிறார்.

அவர் மாதா உருவம் தாங்கிய கொடிகளையும் ஏந்திப் பிடித்து வருமாறு கூறி, அவர்களுக்கு வழிகாட்டி, தலைமை தாங்கிச் செல்கின்றார்.

தங்களின் இன்னல்கள் தீர, கோல் பிடித்த ஜார் மன்னனிடம் பாதிரி கேபன் தலைமையில் 'கருணை' வேண்டிப் போய்க் கொண்டிருக்கிறார்கள், மக்கள்.

பாதிரி கேபன் அவர்களின் பிரதிநிதியல்லவா? அவர் இருக்கும்போது இனி அவர்களுக்குக் கவலை இல்லை.

அவர் ஞானக்குரு மாத்திரமல்ல, அவர்களின் வாழ்க்கைக் காவலுமல்லவா, அரசனிடம் அழைத்துச் செல்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'திடீ'ரென்று கம்பீரமான ஒரு குரல் கூட்டத்திலிருந்து கேட்டது; அது மிகத் தெளிவாகக் காதில் விழுந்தது:

"தோழர்களே, ஏமாற்றுப் பேர்வழிகளுக்கு இடங்கொடுக் காதீர்கள். நாங்கள் பல தடவைகள் 'பெரிய' மனிதர்களால் வஞ்சிக்கப்பட்டவர்கள். ஞாபகமிருக்கட்டும்!"

அவன் செஞ்சட்டையும் கிழிந்த தொப்பியும் அணிந்திருந்தான்.

அவன் ஏந்திய கொடியில், 'உலகத் தொழிலாளர்களே ஒன்றுபடுங்கள்' என்ற வாசகம் கம்பீரித்துக் கொண்டிருந்தது.

அவன் முகத்தில் ஏக கேள்விக்குறி.

"ஏய் நீ பேசாமல் சும்மா வாப்பா. பாதிரி கேபன் நம்முடனல்லவா இருக்கிறார்? எங்களுக்கு என்ன பயம்?"

யாரோ ஒரு வயோதிபன் பதிலளித்து விட்டு விரைந்தான்.

பாதிரி கேபன் ஏதோ 'முணுமுணு'த்துக் கொண்டு இன்னும் அவர்களோடு நடந்து கொண்டேயிருந்தார்.

வெற்றியில் முழு நம்பிக்கை வைத்து முன்னேறிக்கொண் டிருந்த அவர்கள் முகங்களில் இப்போது கவலையும் சந்தேக முமான ரேகைகள் லேசாகப் படர்ந்தன.

இந்தக் கட்டத்தில் அவர்கள் தங்களுக்குத் தாங்களே வாயோச்சமாகப் பேசிக் கொண்டனர்:

"நாங்களும் மனிதர்கள். இது ஜார் அரசனுக்குப் புரியும் தானே?"

"ஜார் எப்படியாவது எங்கள் முறைப்பாடுகளுக்குச் செவி சாய்க்கத்தான் வேண்டும். நாங்கள் என்ன பட்டம் பதவி, கோட்டை கோபுரமா கேட்கப்போகிறோம்?"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எங்கள் நீதியான கோரிக்கைகளைத் தட்டிக்கழிக்க, ஜார் அரசன் என்ன அவ்வளவு முட்டாளா? எப்படியாவது அவர் எங்கள் கோரிக்கைகளைத் தருவார்"

"நண்பர்களே, நாம் சுதந்திரம் கூடக் கேட்கவில்லை. பட்டினியின்றி மனிதர்களாக வாழவே கேட்கின்றோம்"

"ஆமாம், பசி, தீராத பசி, எதனையும் வேண்டிக் கொள்ள முடியாத இல்லாக் கொடுமை. இது கூடவா அரசனுக்குப் புரியாது?"

"நிச்சயம் தெரியும். கட்டாயம் எங்களின் சிறு கோரிக்கைகளுக்காவது அனுகூலம் கிடைத்தே தீரும்"

'மளமள' வென்று ஒருவரையொருவர் பார்த்துத் தமக்குள் பேசிக் கொண்டார்கள். ஆனால், அவ்வார்த்தைகளில் ஜீவன் இருக்கவில்லை. ஏழ்மையின் துயரங்களே குழைந்திருந்தன.

அப்போது பாதிரி கேபன் தனக்குள் லேசாகச் சிரித்தார்.

பைத்தியக்கார விடுதியில் உள்ள நோயாளிகளின் பேச்சைக் கேட்டுச் சிரிக்கின்ற டாக்டர்களின் தோரணை, அவர் சிரிப்பில் தேங்கியிருந்தது.

மக்கள் கூட்டம் ஜாரின் அரண்மனையை நெருங்கி விட்டது.

அப்போது அவர்களிடம் தேங்கியிருந்த உற்சாகம் கரை புரண்டு வீறு கொண்டு நின்றது.

குளிர்கால அரண்மனையில் 'குளுகுளு' இன்பப் போதையிலிருந்த ஜார் மன்னனுக்கு - இந்த மக்கள் கூட்டம் கண்டு கோபம் கொப்பளித்தது. ஆனால், அவன் அதைக் காட்டிக் கொள்ளாமல் சாதுபோல் சிரித்தான். தன் உற்ற நண்பன் பாதிரி கேபனைக் கண்டதும் அவன் கோபமும் சிரிப்பும் மறைந்துவிட்டன.

அவனும் மறைந்து விட்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கோ ஏதோ அதிருந்தொலிகள் கேட்டன.

ஏதேதோ சைகைகளால் அவன் தளபதிகள் புரியமுடியாத பாஷையில் என்னவோ வீறாகப் பேசி ஜனக்கூட்டத்தைச் சுட்டிக் காட்டி நின்றான்.

மக்களுக்கு ஒன்றுமே புரியவில்லை. ஒரே ஏக்கம். ஏக திகில்.

இந்த நேரத்தில் தங்கள் அருந்தலைவர் பாதிரி கேபனைத் தேடத் தலைப்பட்டனர். எங்கு முடியுமோ அங்கெல்லாம் நுழைந்து தேடிப்பார்த்தாகிவிட்டது.

'பாதிரி கேபன் எங்கே?'

ஏகமாக ஒரே குரலில், தடுமாறிக் கொண்டு ஒருவரைப் பார்த்து ஒருவராக இப்படிக் கேட்டுக் கொண்டனர்.

யார் பதிலளிப்பது ?

இப்போது அந்தத் தொழிலாளி—அந்த வாலிபன்—அந்தச் செஞ்சட்டைக்காரன் பதிலளித்தான் :

"தோழர்களே, நாம் உழைத்து உழைத்து உருக்குலைந்து போன பாட்டாளி வர்க்கம். உரிமை கேட்ட அத்தனை பாட்டாளி தொழிலாள உழைப்பாள மக்களின் குரலை ஏக காலத்தில் அடக்குவதற்கு ஜார் அரசன் வகுத்த திட்டத்தின் ஒரு சதிக்கருவிதான் பாதிரி கேபன். ஏழைத் தொழிலாளர்களான எங்களை அவன் துப்பாக்கி முனைவரை கொண்டு வந்து சேர்த்துவிட்டு எங்கோ மறைந்துவிட்டான். பாதிரி கேபன் துரோகி! ஆம், அவன் பெரும் கொலைகாரன்!"

உச்சிக் கம்பத்தில் ஏறி நின்று அந்த இளைஞன் மக்கள் கூட்டத்தைப் பார்த்து ஆக்ரோஷமாக எச்சரிக்கை செய்தான்.

அவன் கண்கள் செக்கச்சிவந்து கொண்டன. ஆவேசத்தின் அந்த காரம் கண்களில் பனித்துளிகளாய்க் கக்கியது; மீண்டும் ஏதோ எச்சரிக்கை செய்ய வாயெடுத்தான்.

ஆனால், அதற்குள்,

அந்தோ ஜாரின் படைகள் அரண்மனைத் தளத்தில் நின்று . . . 'டுமீல்! . . . டுமீல்!! . . . டுமீல் !!! . . .'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்று துப்பாக்கிச் சன்னங்கள் அந்த இளைஞன் மார்பை ஊடறுத்துப் பாய்ந்துவிட்டன.

அதோ பாதிரி கேபன் எங்கோ அதிர்ந்து ஓடுகிறான்.

அவன் எங்கே போகிறான் ?

அது யாருக்கும் தெரியாது.

மக்கள் கூட்டம் திகில் கொண்டு திக்கெல்லாம் சிதறி ஓடிக் கொண்டிருக்கிறது.

எங்கிருந்தோ ஒரு பெரும் சிரிப்பொலி அட்டகாசித்துக் கேட்கிறது.

"நாய்களைச் சுட்டுத் தள்ளுங்கள் ! "

'டுமீல் . . . டுமீல் . . . டுமீல் . . . டுமீல் . . . டுமீல்'

காண்டாமிருகம் போல் தளபதி கர்ஜித்துக்கொண்டு கேரிப்போன குரலில், மீண்டும் நாய் போல் கத்தினான் :

"சுட்டுத் தள்ளுங்கள் ; சன்னங்கள் ஒழியும் வரை சுட்டுத் தள்ளுங்கள்"

சகல திக்குகளிலும் ஒரே துப்பாக்கி வெடிச் சத்தம்.

எங்கும் மரண ஒலி.

எல்லாம் பிணமயம்.

அனைத்தும் ரத்தப் பிரளயம்.

ஒரே இரத்த வெள்ளம்.

அந்த மைதானமே ஏக சிவப்பு மண்டலமாகத் தெரிந்தது.

இதோ, ஜாரிடம் தங்கள் குறைகளைக் கூறப்போன மக்களின் பிணக் குவியல்.

ஆயிரத்துக்கு மேற்பட்ட மனிதச் சடலங்கள் இரத்த வெள்ளத்தில் புரண்டு கிடக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'தோழர்களே! உலகம் எங்களுக்கானது! உலகப் பாட்டாளி வர்க்கத்தின் விடுதலைக்காக நாம் இறந்துபடுவோம் . . . !'

இளைஞனின் கடைசிக்குரல் எங்கும் எதிரொலித்துக் கொண்டிருந்தது.

'மிலேச்சனே இன்று இந்த மக்களைக் கொன்று விட்டதால் ஆணவம் கொண்டாய். ஆனால், இந்தப் பிரளயம் உலக மக்களின் விடுதலைப் போரை உத்வேகப்படுத்தும் புரட்சியின் சின்னம். இது எதிர்காலப் புரட்சிக்கு ஓர் ஒத்திகை என்பதை நினைவிற்கொள் . . . இது நெருப்பாக மூண்டு உன் அதிகாரக் கோபுரத்தையே எரித்து நீறாக்குவது உண்மை. உனது மக்களையா நீ கொன்று விட்டாய் . . .'

ஜாரின் மருண்ட கண்களில் இப்போது மகாபுருஷர் லெனின் உருவமும், தொழிலாள வர்க்கப் போர்க்களமும் எதிரடித்து உலகத்தை வேண்டிக்கொண்டிருந்தன:

'உலகத் தொழிலாளர்களே, ஒன்று சேருங்கள்!'

**— சுதந்திரன் — 1951**

**— கண் — மே 1989**

ரஷ்யப் புரட்சிக்கு முன் ஜார் ஆட்சியில் அங்கு நிகழ்ந்த கோரமான நிகழ்ச்சிகள் அனந்தம். அவற்றில் ஒன்று இங்கே சிறுகதையுருவத்தில் விவரணமாகத் தரப்படுகின்றது. இதனையே மகாபுருஷர் லெனின் 'நிகழப் போகும் புரட்சிக்கு ஒத்திகை' என்று தீர்க்கதரிசனமாக வர்ணித்திருந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2. நித்திய பேரின்பம் . . . ?

> சூன்யமான 'நம்பிக்கை' என்னும் மயக்கத்துக்குச் 'சந்தேகம்' என்பது 'தெளிவு' தரும் ஓர் இன்ஜெக்ஷன்? இந்த நம்பிக்கை முற்றி, இது 'தறுக் கணித்து' விட்டால், மனிதகுலம் பின் மலத்தையும் அமுதமாக உண்ணும் மூடாற்றுமாவதில் எவ்வளவு உண்மை உண்டோ, அவ்வளவு உண்மை, சந்தேகம் என்பதும் தெளிவடைய உதவும் ஞான வெளிச்சமாகும்.

அது அநாதி காலம்; ஆதாம் ஏவாள் அவதரிப்பிற்கும் முந்திய காலம்; உலகமே தோன்றாத ஆதியும் அந்தமுமில்லாத சலன காலம்.

ஒரு நாள் . . . . . .

மோக்ஷராஜ்யத்தில் சதா களிகூர்ந்து கொண்டிருந்த கோடானு கோடிச் சம்மனசுகளுக்குள்ளே, ஓரே ஒரு சிறு கூட்டம் தேவதூதர்கள், 'நாங்களும் தேவனைப்போல் இருந்தால் என்ன?' என்று விரும்பின.

'திடீ' ரென்றுதான் அந்த 'விபரீத புத்தி' இந்தக் கூட்டத்துக்கு வந்து தொலைத்தது.

தேவதூதர்கள் அப்படி 'விரும்பி' யது ஒருவித 'ஆசை' என்றும், அந்த ஆசையானது 'அகங்கார' த்தின் வெளிப்பா டென்றும், அது, 'சாவான பாவத்' துக்கு வழியாகுமென்றும் 'அர்த்த' ப்படுத்திய சர்வேசுரன், அப்படி 'ஆசை' ப்பட்ட 'பாவத்' திற்காக, அந்த ஒரு கூட்டம் சம்மனசுகளையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'சபித்து', 'நித்திய மோக்ஷராஜ்யத்'திலிருந்து 'நித்திய நரகத்' துக்குத் துரத்திவிட்டார். அதாவது, விரட்டி ஓட்டிவிட்டார்.

நரகமா . . . . . .?

ஓகோ, அப்போ நரகம் என்ற இழவு ஒன்று கிடையாது. ஆனால், இந்தக் 'கழிக்க' ப்பட்ட சம்மனசுக் கூட்டத்துக்கு 'எப்படியாவது' ஒரு நரகம் தேவையல்லவா ? இல்லாவிடில், 'அதுகளை' எங்கே கொண்டுபோய்த் தள்ளுவது ?

எனவே, 'தற்காலிக' மாக அந்த நரகத்தைப் 'படைத்தே' யானார் சர்வேசுரன்.

'பாவத்தின் வாசல்' என்று அதற்கு நாமகரணம் சூட்டி, அப்பால் அந்த நரகம் நித்திய – நிரந்தர ராஜ்யமாக்கப்பட்டது ஒரு 'பிரைவேட்' விஷயம். அந்த இழவு சவம் நமக்கு எதற்கு?

எப்படியோ சர்வேசுரன் ஒரு திறமான நரகத்தைப் படைத்தே விட்டார்.

இதன் பின் இரண்டு 'நித்திய சாம்ராஜ்யங்கள்' ஆக்கப்பட்டன.

ஒன்று, 'நித்திய பேரின்ப' மோக்ஷம்.

அடுத்து, 'நித்திய ஆக்கினை' க்குள்ளாகும் நரகம்.

இரு வேறு 'நித்திய ராஜ்யங்கள்'

மோக்ஷ ராஜ்யத்தின் தலைவர் பிதாவாகிய சர்வேசுரன்.

நரகத்தின் தலைவர் லூயிஸ் பசாசு.

மோக்ஷ ராஜ்யத்திலிருக்கும்போது எந்த நேரமும் 'எடுபிடி' களாக இருந்து ஓயாமல் சர்வேசுர தோத்திரம் பண்ணி, பிரார்த்தனை செய்து சதாகாலமும் 'அடிமை' யாக இருப்பதை விட, இப்போ ஒரு ராஜ்யத்துக்கே நிர்வாகியாயும் சுதந்திர ஜீவியாகவும் வாழ்கின்றோமே. இது ஒரு சோக்கான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யோகம். 'அச்சா அச்சா' என்று பூரித்துக் கொம்மாளமடித்தன பசாசுகள்.

'கோள்மூட்டி'களான 'பொறாமை' பிடித்த சம்மனசுகளுக்கோ, இது பொறுக்கவில்லை.

பிதாவாகிய சர்வேசுரனுக்கோ இதனால் புதிய ஒரு 'தலையிடி' தொடங்கிவிட்டது.

சாதாரணமாகவே மோக்ஷம் என்பது 'நித்திய பேரின்பம்' என்ற அடிப்படைக் கொள்கை வலு கெட்டியாக உறுதிப்படுத்தப்பட்டிருக்கும்போது, அந்தச் சம்மனசுக் கூட்டத்தின் ஒரு விருப்பம் - இல்லை, 'பேராசை'யால், 'நித்திய பேரின்பம்' மாறுபட்டு, அதற்கு ஒரு பெரிய 'களங்கம்' ஏற்பட்டுவிட்டதே.

இதுதான் அவருக்கு உண்டான புதிய தலையிடி.

ஆசை . . . . , அந்த ஆசையால் மோக்ஷத்துக்கு ஏற்பட்ட வடு, அந்த வடுவை மறைப்பதற்காக அருளப்பட்ட நரகம், அதன் தலைவனான லூயிஸ் பசாசு . . . .

ஆதியோடந்தமாக அனைத்தையும் யோசித்துப் பார்த்தார் பிதாவாகிய சர்வேசுரன்.

'புதுசாக உண்டான தலையிடி இதனால் நித்தியமாகவே பிடித்துவிடுமோ' என்ற மனப்பிராந்தி அவரை மோசமாக உறுத்தியது. அதை வெளிக்காட்டாமல் தனது நெளிந்து சுழித்துச் சுருண்டு நீண்ட வெண்தாடியை மெதுவாகத் தடவிக்கொண்டு ஆழ்ந்த சிந்தனையில் முகிழ்த்தார் சர்வேசுரன்.

'சர்வத்துக்கும் வல்ல பிதாவாகிய சர்வேசுரனாக விளங்கும் நான், மேலே பார்த்து யாரிடம் முறையிட்டு இந்த நெருக்கடியைப் போக்குவது ?' என்று நினைத்த சர்வேசுரன், ஒருவித அசட்டுத் துணிவில், சற்று இறுமாப்போடு, 'வருவது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரட்டும், வாற நேரம் அதுக்குத் தக்க மாதிரிப் பார்த்துக் கொள்வோம்' என்று தன் பாட்டில் 'சும்மா' இருந்து விட்டார்.

ஆனால், அவரை மீறி அவரது உள்ளத்திலிருந்து எழுந்த பெருமூச்சு, பென்னாம்பெரிய அவரின் நீளமான வெண் துகிற் தாடியில் மருவிக் கலைந்து கழிந்தது. அப்போது ஹாயாக உதறி மெல்ல ஆடியது அவர் தாடி.

'மேற்கொண்டு என்ன நடவடிக்கை எடுப்பது ?' என்று லூயிஸ் பசாசைப்பற்றியே சிந்தித்துக் கொண்டிருந்த பிதாவாகிய சர்வேசுரன், 'டக் டக்'கென யாரோ அவசரமாகக் கதவு தட்டும் சத்தம் கேட்டுத் 'துடிதுடி'த்துப்போனார்.

மீண்டும் அதே 'டக் டக்' சத்தம்.

"யாரது?"

திருவாய் மலர்ந்தருளி வினவினார் சர்வேசுரன்.

"எதையும் சந்தேகம் இல்லாமல் தெரிந்து கொள்ள வேண்டிய தாங்கள், இப்படியெல்லாம் பச்சைக் குழந்தை மாதிரி 'யாரது' என்று கேட்பதால் உங்கள் அந்தஸ்துக்கே இழுக்கல்லவா? கொஞ்சம் யோசித்துப் பாருங்கள்" என்று கேலி பண்ணிக் கொண்டே அவர் முன் தோன்றி இளித்தபடி நின்றது லூயிஸ் பசாசு.

'ஹி . . . ஹி . . . ஹி . . .' என்று இளித்துப் பிடித்த வாயை மூடாமல் அப்படியேதான் நின்றது, அது.

இரண்டு நீண்ட பெருங் கோரப் பற்கள், யானைத் தந்தம் போல் இரு பெரிய நீளமான முரட்டுக் கொம்புகள், அக்கினிப் பிழம்பு கக்கும் எரிமலை வாய், தேர்வடக் கயிறுபோல் நீண்ட வால், கன்னங்கரேலேன்ற கறுத்த உடம்பு, மாமேரு போன்ற சர்வாங்கம், அந்தி வானத்துக் கருநீலக்கண்கள், கிறிஸ் கத்தியாக நீண்டு பயங்கரமாகத் துலங்கும் நகங்கள் – இந்த லட்சண உருவங் கொண்டு [illegible]ாக லூயிஸ் பசாசு எங்கும்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இருக்கவே இட வாய்ப்பின்றி அலைந்து அங்கும் இங்குமாகச் சுற்றிக் கொண்டு நின்றது.

அப்பவும், அது, ' ஹி ஹி ' என்ற திறந்த வாயை மூடாமல் அப்படியே இளித்துப் பிடித்தபடிதான் நின்றது.

பிதாவாகிய சர்வேசுரன் பிரமித்துப் போய்விட்டார்.

'உண்மை, முக்காலமும் நான் அறிந்தவன். அப்படியிருந்தும், ஒன்றும் தெரியாதவன்போல் 'யாரது?' என்று கேட்டது பசாசை அவமானப்படுத்திய செயல்தான். சர்வேசுரனாகிய நான் இப்படிக் குற்றம் புரியக்கூடாதென்பது வாஸ்தவமே. இதனால்தான் பசாசு கேலிபண்ணி இளித்துக் கொண்டிருக்கிறது' என்று தனக்குள் உண்மையைப் புரிந்து கொண்டே, " அது சரி, வந்த விஷயம் என்ன ?" என்று கேட்டார் சர்வேசுரன்.

'இந்த சண்டாளப் பசாசு எக்கச்சக்கமாக என்ன சவத்தையாவது கேட்டுக் குடைந்துவிடுமோ ?' என்று தனக்குள் பிரலாபித்த பிதாவின் கண்கள் ஒரு தடவை அங்குமிங்குமாக அங்கலாய்த்துப் பார்த்தன. முகத்தில் ஒருவித சோர்வும் தவிப்பும் படர்ந்து தெறித்தன.

"எனக்கு ஒரு சந்தேகம். அதுதான் . . . . " என்று இளித்துக் கொண்டே வார்த்தையைச் சப்பியது பசாசு.

'சடா' ரென்று பிதாவானவர் நெற்றிப் புருவத்தை மேலே சுருக்கிக்கொண்டார்.

சூன்யமான 'நம்பிக்கை' என்னும் மயக்கத்துக்குச் 'சந்தேகம்' என்பது 'தெளிவு' தரும் ஓர் 'இன்ஜெக்ஷன்' என்று பிதாவுக்குத் தெரியும். இந்த நம்பிக்கை முற்றித் 'தறுக்கணித்து'விட்டால் மனித குலம் மலத்தையும் அமுதமாக உண்ணும் மூடாற்றுமாவதில் எவ்வளவு உண்மை உண்டோ, அவ்வளவு உண்மை, சந்தேகம் என்பதும் தெளிவடைய உதவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞான வெளிச்சமாகும்' என்று அவருடைய ஞான உள்ளம் குமுறியது.

இருந்தும், என்னவோ இது மாதிரியான கேள்விகள் அவருக்குக் கொஞ்சங்கூடப் பிடிக்கவில்லை. ஆனால், வந்திருக்கும் லூயிஸ் பசாசோ சும்மா லேசுப்பட்ட ஆசாமி யல்லவென்று தெரிந்ததால், 'என்ன செய்வது, இன்றையில் பாட்டுக்கு அடித்துக் கொடுக்க வேண்டியதுதான்' என்று நினைத்தவராய், ஒரு பெருமூச்சு விட்டுக்கொண்டே, "அது என்ன சந்தேகம் ?" என்று கேட்டு விஷயத்துக்கு வந்தார் பிதா.

இதுவரையில்லாத எடுப்போடு ஏகமாக முழுப் பற்களையும் காட்டி நைந்துகொண்டிருந்த பசாசு, 'இதுதான் வாசி, இந்த நேரத்தில் ஆசாமியிடமிருந்து முழுதையும் 'கறந்து' விடுவதுதான் புத்தி' என்று குழைந்துகொண்டே பேச்சைத் தொடங்கியது :

"தேவனே, கேட்பதற்கு என்னை மன்னிக்க வேண்டும் – ஆமாம், 'மோக்ஷராஜ்ய ஜீவிகள் எங்கிருந்து வந்தார்கள்?' என்றும், ' தேவனாகிய தாங்கள் எப்படித் தோன்றினீர்கள் ?' என்றும், எமது நரகத்தில் மாத்திரமின்றி, பூலோகத்திலும் பல கதைகள் சந்தேகத்துடன் வினவப்படுகின்றன. இவற்றை நான் அறிய விழைந்தேன்; அதற்காகவே வந்தேன்" என்று அத்திவாரம் போட்டது பசாசு.

'இதன் தலையிலே இடி விழ' என்று பசாசை மனசுக்குள் கறுவிக்கொண்ட பிதாவாகிய சர்வேசுரன், "இவற்றை யெல்லாம் விளக்க ஒரு வாரம் – ஏழு நாட்கள் கழித்து வா, விடையளிக்கிறேன்" என்று சொல்லிவிட்டு அழைப்பு மணியை அழுத்தினார்.

மணிச்சத்தம் கேட்டதும் பசாசு போல் பறந்து வந்தது, சகல தேவதூதர்களுக்கும் தலைவரான மிக்கேல் சம்மனசு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னைக் கண்டதும் பசாசு 'பயந்து ஓடிவிடும்' என்று சம்மனசு தனக்குள் நினைத்துக் கொண்டே பெரும் மிடுக்கோடு நெஞ்சை உயர்த்தி வந்தது.

ஆனால், பசாசு 'ஹி ஹி' என்று இளித்தபடி எவ்வித அச்சமுங் கொள்ளாமலே ஏறெடுத்துப் பார்த்தது.

இதைக் கவனித்த சம்மனசு "காலங் கலிபுரண்டு கத்திரிக்காய்க்கு மூள் பிரண்டுபோச்சு" என்று சொல்லிப் பெருமூச்சு விட்டபடி, தனக்குள் வெக்காளித்துக் கொண்டு சஞ்சலப்பட்டது.

இந்தக் கட்டத்தில் பசாசு மறுபடி வாய் போட்டது:

" தேவரீர், நான் மறு வாரம் வரமுன், இன்னும் ஒரு சந்தேகத்தைக் காதில் போடுகிறேன்."

'வெறும் முட்டாள்களாக இருப்பவர்கள் மத்தியில் எவ்வளவோ நிம்மதியாய் சோக்கான நிர்வாகம் நடத்திவிடலாம். இந்த 'ஆராய்ச்சி, விழிப்பு, சந்தேகம்' என்று மூளையைப் போட்டுக் கசக்கும் புத்திசாலிகளோடு ஒரு வினாடி கூட அமைதியாக இருக்க முடியாது' என்று தனக்குள் எரிந்து கொண்டார் பிதாவாகிய சர்வேசுரன்.

நெற்றி வியர்வையைத் துடைத்துக் கொண்டே, "லூயிஸ், அப்படி என்ன ஆராய்ச்சியில் எழுந்த சந்தேகம் உனக்கு வந்தது ?" என்று துணிவாகவே கேட்டார்.

'வெரிகுட், அப்பன் தூண்டில் இரையில் வாய் வைத்துவிட்டார்' என்ற புளுகத்தில் பசாசு உடனே கணையைத் தொடுத்தது.

" 'மோக்ஷம்' என்றால் 'நித்திய பேரின்ப பாக்கியம்' என்றுதானே அர்த்தம் ?"

சாங்கோபாங்கமாக வெகு களிப்போடு, 'வெறும் மடையன்' போல் பாசாங்கு பண்ணிக் கேட்டது, பசாசு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஆமாம், அதில் என்ன சந்தேகம் ?"

பிதாவாகிய சர்வேசுரன் வெகு அழுத்தமாகவும் மிக அமைதியாகவும் வலு உறுதியோடும் பதிலளித்தார்.

எங்கள் சகபாடிகளான அலகைகள் இருக்கின்றனவே, அவை யாவும் மோக்ஷத்திலிருந்துதானே நரகத்துக்கு வந்தார்கள் ? அப்படியானால், மோக்ஷராஜ்யமும் நித்திய பேரின்ப வாழ்க்கையில்லை என்றாகிறதல்லவா ? அதனால் தான் . . ." என்று லூயிஸ் பசாசு நாசூக்காக வார்த்தையை இழுத்தது.

"லூயிஸ் பசாசே நிறுத்து. உன் நாவை அடக்கி வார்த்தையை அளந்து பேசு" என்று சத்தம் போட்டார் சர்வேசுரன்.

மோக்ஷம் ஒரு தடவை அதிர்ந்து நின்றது.

ஆயினும், பாசாங்காகக் கோபத்தை அடக்கிக் கொண்டு விடை பகர்ந்தார் :

"தேவனாகிய என்னைப் போல் இருப்பதற்குச் சம்மனசுகள் 'பேராசை' கொண்டதால் சபித்தேன்"

விஷயத்தை விளக்கி விட்டதாக அமைதி அடைந்தார் பிதா. ஆனால், பசாசு, 'ஆஹ் ஆஹ்' என்று வாய் கிழியக் கேலியாகச் சிரித்தது.

"மோக்ஷத்திலிருந்தே 'பேராசை' கொண்டார்களா ? மோக்ஷத்திலும் பேராசைப்படுவதற்குத் 'தேவை' இருந்ததா ? கோள் மூட்டு, போட்டி, பொறாமை அங்கும் இருந்தனவா ? நித்திய பேரின்ப ராஜ்யத்திலும் 'ஊழல்' நிலவியதா ?"

'ஐயோ, இந்தச் சண்டாளப் பசாசு இங்கிருந்து தொலைந்து போகாதா?' என்று தனக்குள் கறுவிக்கொண்டார் சர்வேசுரன்.

"லூயிஸ், எதற்கும் ஒரு வாரம் கழித்து ஆறுதலாய் வா. இப்போ, இந்த இடத்தை விட்டுப் போ" என்று சினந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு கடைக்கண்ணால், 'பசாசு என்ன செய்கிறது' என்பதையும் மெதுவாக நோட்டம் விட்டார்.

அது சனியன், போவதாகக் காணோம்.

"போய்விடுகிறேன். ஆனால், இன்னும் ஒரே ஒரு விவகாரம் . . . . ?"

"சரி, என்ன கோதாரியையென்றாலும் கேட்டுத் தொலை"

"அச்சா, அப்படி வாருங்கோ. அதாவது, மனிதன் எப்படி உண்டாகினான் ?"

"மண்ணினால்"

"அந்த மண்ணால் உண்டாகிய மனிதன் பெயர் ?"

"ஆதாம்"

"அதன் பின் ?"

"ஏவாள் - பெண்"

"எப்படி ?"

"ஆதாமின் விலா எலும்பு ஒன்றை எடுத்து அதிலிருந்து ஏவாளை நானே உண்டாக்கினேன்"

"என்ன, கட்டுக்கதையா கதையளப்பா ?"

"இல்லை, வரையறுக்கப்பட்ட வரலாறு"

இத்துடன் நிறுத்திவிட்டு, 'இந்த விளக்கத்தோடு பசாசுப்பிள்ளை படுத்தார்' என்று தன்னுள் நினைத்து இறும்பூதெய்திய பிதா, மீண்டும் தொடர்ந்து, "அது சரி, இதில் என்ன ஆராய்ச்சியும் சந்தேகமும் உனக்கு வேண்டிக் கிடக்கிறது ?" என்று நக்கலாகக் கேட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஆஹா, அச்சா. விஷயத்தை அப்படிக் கேளுங்கள். ஆமா, 'டார்வின்' என்ற மனிதனைத் தெரியுமா ?"

"தெரியுமாவா? அவனைப் படைத்தவனே நான். அடேயப்பா, வலு கெட்டிக்காரனாச்சே ?"

தான் பிதாவாகிய சர்வேசுரன் என்பதையும் மறந்து பசாசுடன் வெகு 'சிம்பிளாக'ப் பேசினார் பிதா.

"இப்பதான் வழிக்கு வந்து எக்கச்சக்கமாக மாட்டிக்கொண்டீர்கள்" என்றது பசாசு.

"நீ என்ன சொல்கிறாய் ?"

"நீங்களோ, 'மண்ணால் மனிதனை உண்டாக்கினேன்' என்கிறீர்கள். ஆனால் டார்வினோ, 'ஜீவ ஜந்துகளின் பரிணாம வளர்ச்சியினால் 'தோன்றி'ய குரங்கிலிருந்து உருவம் பெற்றவனே மனிதன். மனித வர்க்கம் அதன்பின்பே தொடர்ந்து பெருகிற்று' என்கிறானே, இதில் எது சரி ?"

'இந்தக் கேள்வி ஒன்றோடு பிதாவாகிய சர்வேசுரன் முடிந்தார்' என்று தனக்குள் புளகாங்கிதம் அடைந்தது பசாசு.

ஆனால், பிதாவாகிய சர்வேசுரனோ சீறிப் பாயும் புலியானார்.

"அது ஒரு 'டூப்'; அசல் கட்டுக்கதை; பச்சைப்பொய்; விஞ்ஞானிகளின் கண்கட்டி வித்தை. அதை நம்பியா நீ என்னுடன் வாக்குவாதம் புரிய வந்தாய்? அந்தகோ அறியாமை . . . ?"

"அப்படியானால் ககாரின் என்ற ருஷ்யாக்காரன் பூமியைச் சுற்றி வலம் வந்தானே, அந்த விஞ்ஞானம் ?"

" . . . . . . . . . . . . . . . . . ! ?"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஆம்ஸ்ரோம் என்ற அமெரிக்காக்காரன் சந்திரனில் கால் வைத்தானே அந்த விஞ்ஞானம் ?"

". . . . . . . . . . . . . . . . . . ! ?"

பிதாவின் கண்கள் கிறங்கின.

"மனிதன் செங்கொடியையே சந்திர மண்டலத்துக்குச் சென்று நாட்டிவிட்டானே, அந்த மனிதன் - அந்த விஞ்ஞானம் ?"

பிதாவானவர் கண்களை மூடிக் காதுகளையும் பொத்தி மௌனித்துக் கொண்டார்.

"இப்போது மனச்சாக்ஷியைத் தட்டி உண்மையைச் சொல்லுங்கள்: மோக்ஷம் நித்திய பேரின்பம்தானா? மண்ணால் மனிதன் உண்டாக்கப்பட்டவன்தானா ?"

'இல்லை' என்று கூற அவர் மனசு மனசார உன்னியது. வாய் அதை வெளியிட மறுத்தது. 'பொய்காரன் ஆனதை வீணாக ஏற்றுக் கொள்வதா ?'

"லூயிஸ், போதும் நிறுத்து. மேலே இன்னும் கேட்டுக்கொண்டே போகாதே. எல்லாவற்றிற்கும் அடுத்த வாரம் வந்து பார். இப்போ போய் விடு."

அவர் குரல் கேரி இரங்கலாக வந்தது. கண்களில் நீர் மல்கிற்று.

இதைப் பார்த்துச் சகியாத பசாசு மனவருத்தத்தோடு திரும்பிப் போய்விட்டது.

சரியாக ஏழு நாட்கள் கழித்து வந்து பசாசு பிதாவைப் பார்த்தபோது, 'எல்லாம் வல்ல' பிதாவாகிய சர்வேசுரன் அப்படியே மரணித்துப்போய்க் கிடந்தார்.

பசாசுவின் தலை 'கிர்ர் . . . . . .' என்று சுற்றியது.

அங்கலாய்த்துப் பார்த்தது பசாசு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்போது பிதாவின் தலைமாட்டில் கிடந்த 'மரண சாசனம்' ஒன்றில், கீழ்க்கண்டவாறு எழுதியிருந்தது :

"உலக ஜீவராஜிகளும் நரகமும் மோட்சமும் நித்தியமன்று; அநித்தியமுமன்று. யாவுமே மனிதனின் சிருஷ்டிகள். மோட்சம் நித்திய பேரின்ப பாக்கியமாயிருப்பின் அங்கிருந்த சம்மனசுக் கூட்டம் நரக ஆக்கினைக்குப் பாத்திரமாயிருக்குமா? பொய்யைப் பொருந்தச் சொல்லாத மனிதனால் வந்த வினை இது. நித்திய பேரின்பம் என்பது சக ஜீவ சமதர்ம அன்பு திகழும் வாழ்வாகும். அது உலகத்திலேயே இருக்கிறது. இல்லையேல் ஆக்கிக் கொள்ளலாம். எனவே, 'மோக்ஷம் – நரகம்' என்ற இரண்டு 'கற்பனை' உலகங்களும் அநித்தியமானவை என்பதை இதனால் உத்தரவாதப்படுத்துகிறேன். ஈற்றில் எனக்குத் தெளிவை உண்டாக்கி ஞான வெளிச்சத்தை அருளிய லூயிஸ் பசாசுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

– பிதாவாகிய சர்வேசுரன். "

துக்க சாகரம் பசாசின் தொண்டையை அடைத்தது.

'அட நாசமே, ஞானவெளிச்சம் உதித்த பின்பா இந்த மனுஷர் இப்படி மரணத்தைத் தழுவுவது ? '

பசாசு 'ஓ' வென்று அழுது கொண்டே வெளியேறியது.

சம்மனசுகளைக் காணவில்லை.

**– எழுத்து 1960**

**– தாமரை (மறுபிரசுரம்) 1976**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3. பாவிகளை ரக்ஷிக்க

> உடல்களைக் கூனிக் குறுக்கித் தோள்களில் கிடந்த சால்வைகளை எடுத்துக் கக்கத்துக்குள்ளே வைத்துக் கொண்டு, சுவாமிக்குச் சாஸ்டாங்கம் செய்து தங்கள் 'அமைச்சலை' வெளிப்படுத்தும் அவர்களுடைய குரல்களிலே நடுக்கம்.

புத்தாண்டு பிறந்தது.

இன்று பாலனுக்கு 'யேசு' என்று நாமம் சூட்டும் திருநாள்.

மாதா கோயில் மணியோசை ஓங்காரமாக ஒலிக்கின்றது.

சுவாமியின் பிரசங்கம் ஆரம்பித்துவிட்டது.

அவரது பிரசங்கம் அன்று பிரமாதம். உயிர்த் துடிப்பு நிறைந்த அவருடைய வார்த்தைகள் என் இதயத்தை அப்படியே உருக்குகின்றன.

" . . . . . . . . . என் பிள்ளைகளை என்னிடம் வரவிடுங்கள். அவர்களைத் தடைசெய்யாதீர்கள். நான் ஐஸ்வரியவான்களைத் தேடி வரவில்லை. பாவிகளை இரட்சிக்க - அவர்களைத் தேடியே வந்திருக்கிறேன் . . . . . . ."

குருவானவருடைய கண்களிலிருந்து கண்ணீர் ஓடுகின்றது.

'பாவிகளை இரட்சிக்க - அவர்களைத் தேடியே வந்திருக்கிறேன் . . . . . .'

என்னுடலில் உள்ள ரோமங்கள் சிலிர்க்கின்றன.

அவர் கூறிய யேசுவை அவரில் கண்டேன்.

என் இதயத்தில் எழுந்த உணர்ச்சிகள் கண்ணீராக வடிகின்றன. கரம் கூப்பிச் சிரம் தாழ்த்துகின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதன் தேவனாகிவிட்டானா?

சுவாலையின் ஒளிப்பிளம்பில், பாலன் யேசுவின் திருமுகம் - ஜீவகளை பொங்கிவழிய செக்கச் சிவந்து தெரிகின்றது.

"மதுரமான யேசுவே
உமது நேசம் தருகவே
ஆதி அன்பான பாலனே
எனக்கு ஆசி அருள்கவே
ஆதி பிதா ஆனவரின் . . . . "

என் உதடுகள் உச்சரிக்கின்றன.

குரலொலிகளின் ஆரவாரம் ஓயவில்லை.

பூஜை முடிந்துவிட்டதா ?

தன் அறைக்குள்ளே செல்கின்றார் சுவாமி.

அவரைத் தொடர்ந்து விசுவாசிகள் செல்கின்றனர்.

" உங்களுக்கு என்ன குறை ? "

குருவானவர் அன்போடு வினவுகிறார்.

அவர்கள் அவருக்கு ஆசாரம் செய்து குழைந்தவண்ணம் நிற்கிறார்கள். வாய்விட்டு எதையும் சொல்லவில்லை.

"ஏன் பிள்ளைகள் பேசாமல் நிற்கிறீர்கள்; உங்களுக்கு என்ன நேர்ந்தது ? "

"தேவரீர், எங்களைப் பொறுத்தருள வேண்டும். நாங்கள் சொல்ல வந்தது என்னவெண்டால், எங்கட ஊருக்க திருச்சபைக்கு விரோதமானவர்கள் கனக்க இருக்கிறார்கள். அவங்களை . . . . . . "

உடல்களைக் கூனிக் குறுக்கித் தோள்களில் இருந்த சால்வைகளை எடுத்துக் கக்கத்துக்குள்ளே வைத்துக் கொண்டு,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவாமிக்குச் சாஸ்டாங்கம் செய்து தங்கள் 'அமைச்சலை' வெளிப்படுத்தும் அவர்களுடைய குரல்களிலே நடுக்கம்.

குரோதத்தினால் ஏற்படுகின்றதா ?

"திருச்சபைக்கு விரோதமாக என்ன நடந்தது ? ஏன் தயங்குகிறீர்கள் ? "

அவருடைய கண்கள் வியப்பில் விரிகின்றன.

"தேவரீர்! நாங்கள் 'கோள்' மூட்டுறதாக நினைக்கப்படாது ...... போனகிழமை நத்தார்ப் பெருநாள். கடன்திருநாளெண்டும் பாராமல் கொஞ்சப்பேர் உழைப்புக்குப் போயிருந்தவே ..."

"நானும் கேள்விப்பட்டேன்; அதுக்கென்ன?" சிரித்துக் கொண்டே கூறினார் குருவானவர்.

அவர்கள் உள்ளங்களில் பீதி.

"நாங்கள் பிழைப்புக்கெண்டு போகேலச் சுவாமி, பாலன் பிறந்த நாளுக்கெண்டு 'சும்மா' போனனாங்கள். அவங்கதான் பிழைப்புச் செய்தவங்கள் ..... "

இவர்கள் மீது குருவானவருக்கு ஒருவித 'பந்தம்' ஏற்பட்டு விட்டது.

"நீங்கள்தான் உண்மையான விஸ்வாசிகள். எனக்கு வந்து அறிவித்தது மிச்சம் சந்தோஷம். அது சரி, சபைக் கட்டளையை ஆரார் மீறினது ? "

"இந்த வரியம் ஆரோகணத் திருநாளுக்கு நடந்த கூத்தில, காட்டுராசாவுக்குப் படிச்ச சிங்கராசா, சேனாவதிக்குப் படிச்ச துரைராசா, பொலிஸ் அந்தோனியின்ர மச்சான் அழகையா . ..... அவையளோட சேந்து பிழைப்புச் செய்யிற இன்னும் அஞ்சாறுபேர் ..... "

ஒருவர் கூற மற்றவர்கள் ஆமோதிப்பதுபோல் தலைகளை அசைத்துக் கொண்டு மௌனமாக இருந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஓ . . . இப்ப, அதுக்கென்ன ? "

அவர்கள் நெஞ்சுகளில் இடி.

"நாங்கள் சொல்லிப் போட்டம். தேவரீர்தான் முடிவு எடுக்கவேணும் "

" சரி, அவர்களைக் கோயிலாலே கழிப்போமா ? "

அவர்கள் மனம் இப்போதான் ஆறியது.

' அவர்களைக் கோயிலால கழிப்பமா . . . . . ? '

*

சுவாலை விட்டெரியும் மெழுகுவர்த்திகளிலிருந்து கிளம்பும் மிதமிஞ்சிய ஒளிப் பிளம்பில் ஜீவகளை பொங்கிவழியும் செக்கச் சிவந்த திருமுகம் –

புனிதமான குருவானவருடையதா ?

பாலன் யேசுவின் திருமுகமா ?

". . . . . பாவிகளை இரட்சிக்க – அவர்களைத் தேடியே வந்திருக்கிறேன். உண்மையான ஆயன் சிதறிப்போன ஆட்டுக்குட்டிகளைத் தேடியே வருவான். இந்த உலகம் முழுதையும் ஒருவன் தனக்குச் சொந்தமாக்கிக் கொண்டாலும் அவன் ஆத்துமம் கெட்டுப் போனால் அதனால் அவனுக்கு லாபம் என்ன . . . . . ? "

ஆமாம். கிறிஸ்மஸ் தினம். பழக்கதோஷம். குருவானவர் சொல்லிக் கொண்டிருக்கிறார் :

" டாங் . . . . . . "

மாதா கோயில் மணியோசை ' கணீ' ரிக்கிறது.

கன்னியர்கள் கீர்த்தனை ' களை ' கட்டுகிறது :

" பாதிரவில் நீர் எனக்காய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலகன் ஆகினீரோ ?

வான வீட்டை நீர் துறந்து
மனித வேஷம் பூண்டு
ஈனமாட்டுக் கொட்டிலிலே
எனக்காகவே உதித்தீர்.
வீசு குளிர் காற்றினிலே நீர்
வேதனைகள் சகித்தீர்.
நீசன் என்மேல் இவ்வளவு
நேசமோ பாலகனே ? "

ஜோடிகட்டி நெடு முழந்தாட்படியிட்டு, இமைகளை மூடிக்கொண்டு, கன்னியர்கள் ஆரோகணக் குரலெழுப்பிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களின் குரல்களில் இருந்த கம்பீரம் தேய்ந்து வருகின்றது.

களைத்து விட்டார்கள் போலும்.

இளைஞர்கள், முதியவர்கள், அவர்களைத் தொடர்ந்து பாடுகின்றார்கள்.

'முக்தர்' மயமாகியது கோயில்.

பக்தி முத்தினால் முக்தர்கள்தானே.

வயது வந்தவர்கள் முண்டியடித்துக் கொண்டு முன்னேறுகிறார்கள். பாலன் யேசுவின் திருச்சொரூபத்தைத் தாவித் தொட்டு முத்தி செய்வதற்கு அவர்களுக்கு எழுந்த அவசரம், ஆவேசமாக மாறியது.

பக்தியின் நிறைவு.

தூய்மையிலிருந்து பக்தி பிறக்கின்றதா ?

பக்தியிலிருந்து தூய்மை உதிக்கின்றதா ?

பரலோகத் திறவுகோல் இவர்கள் கையில்.

வெற்றி.

*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஞாயிற்றுக் கிழமையிலும் இனி அவங்கள் பிழைப்புக்குப் போகப் போறாங்களாம் தேவரீர்."

விசுவாசிகள் கூறுவதை அவதானித்துக் கேட்கின்றார்; நோக்கமும் புரிகின்றது.

"என்ன, ஞாயிறு கடன் திருநாட்களிலுமா ?"

குருவானவரின் குரலிலே இப்போ கடுகடுப்பு.

"ஓம் தேவரீர், போறதெண்டுதானிருக்கிறாங்கள் "

அடுத்தார் ஓரே அமர்க்களம்.

பக்கத்தில் சிரிப்பொலிகள் கேட்கின்றன; கன்னியர்களின் ஆசாரம்.

மேய்ச்சல் – கண்களில் அக்கினிக் காந்தம்.

"ஆளைப்பார். இஞ்சி திண்ட குரங்கு மாதிரிக் கிடக்கு உமக்கும் ஒரு எண்ணமாக்கும்."

மவுசு தேடப்போய், குட்டு வெளிப்படுகிறது.

'வெடுக்' கென்று ஒருத்தன் கூறுகின்றான் :

"உவதான்ரா மச்சான், கிறிஸ்மஸ் அண்டு நடு ராத்திரி கோயில் வளவுக்க . . . "

"இப்பவல்லோ சங்கதி தெரியுது . . . "

எதனையும் அறியாத நிழல் யுத்தம்.

பக்தர்களின் சுயமா ?

இளைஞர்கள் கெக்கலிகொட்டிச் சிரித்தார்கள்.

புனிதமான கிறிஸ்மஸ் திருநாள் . . . ?

தூய்மை – ?

"தேவரீர், அப்ப என்ன செய்வம் ?"

704728

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கிலித்தாம், மூப்பர், மொடுதாம் வந்து சேரவில்லை.

உபதேசியார் ஏவறை விட்டபடி வருகிறார்.

வயது வந்த விசுவாசி ஒருவர் அக்கறையுடன் வினவுகின்றார் :

"ஏன் நேரத்தை மினைக் கெடுத்துவான் ?"

சுவாமியின் நெற்றியில் சிந்தனைக் கோடுகள். அவருக்கு 'ஞான ஒளி' பிறக்கின்றது.

"அப்பிடியெண்டா, அவர்களை இனிமேல் கோயிலால் கழிப்பம். எவர் வந்தாலும் இனி அவர்களைக் கோயில் நன்மைகளில் சேர்ப்பதில்லை."

ஆவேசமாகக் குருவானவர் கூறினார்.

அவர்களுக்கு வெற்றிக் களிப்பு.

'. . . என் பிள்ளைகளை என்னிடம் வரவிடுங்கள். அவர்களைத் தடை செய்யாதீர்கள் . . . நான் ஐஸ்வரிய வான்களைத் தேடி வரவில்லை . . .'

– தேசாபிமானி – டிசம்பர் 1961.

University of Peradeniya
04 JAN 2022
LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4. ஞானோதயம்

> விபசாரம் செய்த ஒரு கன்னிப் பெண் தலைவிரி கோலத்தோடு தனது மார்பகங்களைக் கேசத்தால் போர்த்தி மறைத்துக் கொள்கிறாள். அவளை அந்தக் கொடிய விலங்குகள் பாய்ந்து கடிக்கின்றன. மேனி எங்கும் இரத்தப் பீச்சல். பாம்புகள் அவளின் வெற்றுடலைச் சுற்றி வளைத்து வால்களை இடுக்கி நுளைந்தித் துவாரங்களின் கெண்டைக் கால்களுக்கூடாக விட்டுத் துளைக்கின்றன. அக்கினியோ 'கோ' வென்று விளாசி எரிகிறது.

"எல்லோரும் எழுந்து, ஞான உபதேசப் புத்தகத்தைக் கையிலே எடுங்கள்."

உபதேசியார் குரலில் இன்று கரகரப்பு இல்லை. கொஞ்சம் 'குளுத்தி' யாயிருக்கிறார்; 'தண்ணி' யும் போடவில்லை; சோறு சாப்பிட்ட கையோடு வந்திருக்கிறார். இன்று அவர்களுக்கு அடி விழாது.

கரப்புக்குள்ளிருந்து குதித்து வெளியேறும் கோழிக் குஞ்சுகள் போல் அவர்கள் அக மகிழ்ந்து எழுந்து நின்றார்கள். அவர்களை வரிசைப்படுத்திப் பார்த்தார்.

"சரி, புத்தகத்தைக் கையில எடுத்திட்டியளோ ?"

"ஆம், உபதேசியார்"

ஒரு நோட்டம் விடுகிறார். எல்லாப் பிள்ளைகளும் 'கப்சிப்' பாக நிற்கிறார்கள். ஆனால், புஷ்பத்தின் முகம் கறுத்துச் சுண்டிக் கொண்டிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவருக்குச் சந்தேகம்.

"புஷ்பம், ஏன் செபப் புத்தகம் இல்லியா ?"

"இல்லை உபதேசியார் !"

அவள் கைகள் பனங்காய் பிணைகின்றன.

'திருதிரு' வென விழித்த புஷ்பத்தின் முகத்தில் வியர்வைத் துளிகள் கோடிட்டு நெய்யாக வழிந்தன. உடலில் ஓநாயைக் கண்ட ஆட்டுக்குட்டியின் நடுக்கம். கிணுகிணுக்கும் இலையான் போல புஷ்பத்தின் குரல் குல்லிட்டுக் கேருகிறது.

"ஏன் கொண்டு வரேல்ல ?"

கப்பம் கேட்கும் அரசனின் மிடுக்கான தொனியில் உபதேசியார் வாக்கியங்களைக் கொலுவிருத்தினார்.

"ம் . . . . . . . . எங்கட அப்பு . . . . . ."

அவள் வாய்க்குள் சொற்கள் சிலம்பின. கண்களைக் கசக்குகிறாள். விக்கலோடு ஊனிய அழுகை நீள்கிறது.

"ஏன் அழுகிறாய் ? இஞ்ச வா"

நடுங்கி, மெல்ல நகர்ந்து, பய பக்தியோடு கிட்டப் போகிறாள். அவர் அவளை அணைத்துக்கொண்டு, கொஞ்சும் பாவனையில் கேட்கிறார் :

"நான் அடிக்கேல, நீ அழாதை. 'அப்பு' வெண்டு என்னவோ சொன்னியே, அப்பு என்ன செய்தவர் ?"

"அப்பு சுவமில்லாமப் படுக்கையில கிடக்கிறார். அம்மாவிட்டக் காசு கேட்டன். அவ அழுது போட்டு . . . ."

"ம், அழுது போட்டு ?"

அவரின் அடித்தொண்டையில் பிசின் போல் துப்பல் ஒட்டிற்று 'முடுக்'கிட்டு மீட்டுக்கொண்டார். அழுகை வருவது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்று சாடையாய் நெஞ்சுக்குள்ளே ஒரு குமைச்சல் புகை மூட்டம் போட்டது.

"பள்ளிக் கூடத்துக்கும் ஞான உபதேசத்துக்கும் இனிமேல் போக வேண்டாமெண்டிட்டுக் கஞ்சி கரைச்சுத் தந்தா. புத்தகத்துக்குக் காசு தரேல்லயெண்ட கோவத்தில் நான் ஒண்டும் தின்னாம வந்திட்டன். இப்ப நல்லாப் பசிக்குது."

உபதேசியார் என்ன செய்ய வந்தோம் என்றதையும் மறந்து ஒருவித ஆவலோடு அவளைப் பார்த்தார்.

"எதுக்குள்ள பசிக்குது; வயித்துக்குள்ளயோ ?"

"ஓம்"

அவளைவிட அவருக்கே முகம் சில்லிட்டது. பசிக் களை அவள் முகத்தில் கோடிட்டது. ஆள்காட்டி விரலால் புஷ்பத்தின் அடிவயிற்றில் மெதுவாகத் தேய்த்துக் குற்றிக் கேட்டுக் கேட்டுக் கேலி செய்ததில் அவருக்கு ஒரு சுக ஆசை கழிந்தது.

"பசிக்கு, நான் சோறு தாறன். இனி அழாதை"

கலைந்து அவிழ்ந்து வழியும் அவளின் கருங்கூந்தலை உணாவிப் பார்த்தார். அது அவள் முதுகுப் புறமாக வழிந்து, கிழிந்த ஊற்றைப் பாவாடை விளிம்பு வரை தொட்டு நின்றது. எண்ணெய்ச் சிக்கலால் காகக் கூடாகத் திரண்ட ஊற்றைச் சரடுகள், கழுத்தின் வட்டவரிகளை மறைத்துக் கீலம் விட்டுத் தெரிந்தன. பசிக்களையின் மிகுதியால் நையித்து அவள் முகத்திலிருந்து சளியும் வியர்வைத் துளிகள், அந்த ஊற்றைச் சல்லடைகளைத் துரட்டிக் கீழே தள்ளி நெஞ்சுச் சட்டைக்குள்ளே சரணாகதியடைந்து கொண்டிருந்தன.

அவர் அதைப் பார்த்தார்.

கந்தலான அழுக்குச் சட்டை வெடில் அடித்தது. சட்டையோடு ஒட்டியிருக்கும் அவளின் வெண்மேனி, குத்திய அலுப்பினாத்தி ஊசிகளையும் விஞ்சிக்கொண்டு, பிய்த்தெறியக் கிளம்புவதாக உபதேசியாருக்கு ஓர் உணர்வு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிடரிப் பக்கம், சிக்கு முடிக்குள் கை விரல்களை விட்டுக் கோதி, ஒத்தடமாகத் தடவிக்கொண்டு சொல்கிறார் :

"நீ அழாதை, சோறு தாறன்; அதுக்குப் பிறகு வேணுமெண்டா 'இனிப்பு'ம் தாறன், தின்னலாம்"

"உபதேசியார் அப்ப, எங்களுக்கும் இனிப்புத் தர வேணும்?"

வரிசையில் நின்ற பிள்ளைகளும் ஏக இரைச்சலிட்டுக் குரலெழுப்பினர். நுணல் தன் வாயால் கெட்ட நிலை; உபதேசியார் அகப்பட்டுப் போனார்.

"பெலமாகக் கத்திச் சத்தம் போடாதேயுங்கோ. எல்லாருக்கும் தருவன்."

'சோக்கான உபதேசியார்'

தங்கள் கணிப்பில் அவர்களுக்கு அக்களிப்பு; கொக்கரிக்கிற தாய்க் கோழியிடம் குஞ்சுகள் காட்டும் பரபரப்பு.

ஆனால் புஷ்பம் உபதேசியாரின் அரவணைப்பில் சமைந்து மனச் சுகம் கண்டு ஒளி பூத்த முகமாக நின்றாள். கதிரையில் கிடக்கும் அவர் தொடை மீது புஷ்பத்தின் இடது முழங்கை வாடிய வெற்றிலைக் கொழுந்தாகச் சோர்ந்து தூங்குகிறது. முகத்தை அசையா வண்ணம் அவர் விழிகள் அவளைத் தின்று பார்த்தன. 'பசிக்குதா ; சோறு தாறன் ' என்ற அவர் வாயையே, அவள் அண்ணாந்து பார்த்தாள். 'சோறும் இனிப்பும் எப்போது கிடைக்கும் ?' என்ற ஏக்கம், அவரின் தேற்றரவுகளிலும், அரவணைத்துத் தழுவிய கரங்களிலும் இதம் கண்ட புஷ்பத்தின் முகம் சிலிர்த்துப் பூ விரிந்தது.

"பொழுது பட்டுப் போச்சு. இதோடை இண்டைக்கு ஞானோபதேசத்தை முடிப்பம், போயிட்டு நாளைக்கு வாருங்கள்"

பொழுது எரிந்துகொண்டிருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'உபதேசியார் ஞானோபதேசத்தை ஏன் நேரத்தோட முடிச்சார் ?'

சந்தேகமும் மகிழ்ச்சியும் அவர்கள் வதனங்களில் அப்பி விழுகின்றன.

" புஷ்பம், வாவனடி போவம் ? "

கிளம்பிய பிள்ளைகள் அழைக்கிறார்கள். அவள் உபதேசியாரைப் பார்த்தாள்.

"புஷ்பம், பாவம். அவவுக்கு பசி. அவ சோறு திண்டிட்டு வருவா. நீங்கள் வீட்டுக்குப் போங்கள். பிறகு நான் கூட்டியந்து விடுகிறன்."

உபதேசியாரது கட்டளையின் வாக்குக்கு அட்டியில்லை; அவர்கள் ஏகினார்கள்.

புஷ்பத்தின் நெஞ்சு இடிக்கிறது.

## (2)

புஷ்பம் வீடு வந்து சேர்ந்து விட்டாள். அவள் நெஞ்சு குமைவது போல் இருள் இருண்டு இரவு வருகிறது. உடலில் வாந்தி கக்கும் உபத்திரவம்.

' கள்ள மூதேசி உபதேசியார் '

நாக்கு அடித்தொண்டை வரை வறண்டு வந்தது. நெஞ்சு 'படக் படக்'கென்று தலை அறுத்த கோழியாகத் துடித்தது.

'அம்மாவுக்குத் தெரிஞ்சால் ? '

' ஐயோ ! '

' எக்கணம் அப்பு அறிஞ்சால் ? '

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

' அந்தோனியாரே செத்தேன் !'

' கடவுள் எங்கும் இருக்கிறார். இந்தப் பாவம் அவருக்குத் தெரியாதோ ? '

' ஐயோ, ஆண்டவரே ! '

குழறி அழத் துருவுகிறது நெஞ்சு. அடக்கிப் பார்க்க அவஸ்தைப்படுகிறாள். அழுகை குமட்டிக் கொண்டு வருகிறது அடித்துப் போட்ட பாம்பாக அவள் நெளிந்தாள்.

' என்ர அம்மோய் !'

' புஷ்பம், ஏன் பிள்ளை நேரஞ் செண்டது ? '

அம்மா கேட்கிறாள். விடை தடுமாறுகிறது. மொத்தி வரும் அழுகையைக் காட்டிக் கொள்ளாமல் சருகாய் ஊர்ந்துபோய் திண்ணையில் விழுந்து படுக்கிறாள்.

"ஏன் பிள்ளை நேரஞ் செண்டது ?"

"பிள்ளையிட்ட என்னத்தை விடுத்து விடுத்துக் கேக்கிறாய்? ஞானோபதேசமெண்டால் என்ன கணக்குப் பாடம் மாதிரியே ? அதை ஊட்டி ஊட்டிச் சொல்லிக்குடுத்தா தானே பக்தி வரும். உபதேசியாருக்குத் தெரியாதே ? "

அப்பு படுத்த படுக்கையில் கிடந்தபடி மகளின் தாமதத்திற்கு 'விளக்கம்' கொடுத்துத் தன் மனைவியைச் சாந்தி செய்து கொண்டார்.

" அப்ப வா பிள்ளை சோறு தின்பம் ? "

" எனக்கு வேண்டாம் !"

" ஏன் பசிக்கேலியோ ? "

" இல்லை உபதேசி ......"

" என்ன உபதேசியார் தந்தவரோ ? "

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" ஓம் !"

'எங்கட கயிட்டம் தெரியுமாக்கும் சீமான்; நல்ல தொண்டன்'

அம்மா தனக்குள் உபதேசியாரை வாழ்த்திக் கொள்கிறாள். நன்றியுணர்வின் கண்ணீர் அவள் விழிகளில் ஊனித்து வழிந்தது.

" சரி, படு "

தலைக்குள் கையை மிண்டு கொடுத்து, கெண்டைக் கால் களை நாடிவரை முடக்கி, உடம்பைச் சங்கு வளையலாக்கி, பாவாடையை இழுத்துக் கால்முட்டப் போர்த்திக் கொண்டாள், புஷ்பம்.

இருளில் சூன்யம்; விளக்கத்தில் பூஜ்யம்.

'அறுந்து போன உபதேசியார்; எளிய சனியன் ' வாய் திறவாத் திட்டுதல் அவள் நெஞ்சுக்குள் பொரிந்து கரைகிறது.

'கடவுளே ; சாவான பாவம் செய்து போட்டனே!'

பயம் உடலை எரிக்கிறது; அழுகை விம்மி விம்மி வருகிறது; நெஞ்சோ பறை கொட்டி மாய்கிறது.

இரவு பத்து மணி.

மனக் கொதிப்பில் நெஞ்சு நெக்கி மாள, அவளின் உடல் உப்பி மயக்க, உறக்கத்திலாழ்ந்து விடுகின்றது.

## (3)

"ஞானோபதேசப் புத்தகத்தைக் கையில எடுத்திட்டி யளோ?"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" ஓம், உபதேசியார் "

"சரி, புண்ணியஞ் செய்த ஆத்துமாக்கள் எங்கே போகிறார்கள் ? "

"மோட்சத்துக்கு !"

"மோட்சத்தில் அவர்கள் என்னத்தை அனுபவிக் கிறார்கள் ? மரியதாஸ் சொல்லு."

" சருவேசுரனை முகமுகமாய்த் தரிசித்து, நித்திய பேரின்ப பாக்கியத்தை அடைகிறார்கள்"

"மடுத்தீன் நீ சொல்லு: பாவம் எத்தினை வகைப்படும்?"

" அற்ப பாவம், சாவான பாவம் என இருவகைப்படும் "

" அற்ப பாவமாவது யாது ? "

" குறைந்த அறிவு அவதானத்துடன், அற்ப காரியங்களில் தேவ கட்டளையை மீறுதல் அற்ப பாவமாகும்"

"ஜோண்மேரி சொல்லு பாப்பம்: சாவான பாவ மென்றால் என்ன ? "

"பூரண அறிவு அவதானத்துடனும், முழுச் சம்மதத்துடனும், கனங்கொண்ட காரியத்தில் தேவ கட்டளையை மீறுவதே சாவான பாவமாம்"

"அச்சா; கெட்டிக்காரி"

புகழ்ச்சியால் ஜோண்மேரியின் முகம் செம்பரத்தம் பூப்போல், குக்குலி இரத்தமாகச் சிவக்கிறது.

"சரி, சாவான பாவம் செய்த ஆத்துமாக்கள் எங்கே போகிறார்கள் ? எங்க அகுஸ்தீன் சொல்லு பாப்பம் ? "

" நரகத்துக்கு !"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நரகத்திலே அவர்கள் அனுபவிக்கும் ஆக்கினை என்ன? எங்க புஷ்பம் சொல்லு பாப்பம் ? "

"அங் . . . . . . . ம் . . . . . . . ம் நித்திய ஆக்கனைக்கு . . . . . நித்திய ஆக்கனைக்கு . . . . . ."

"நித்திய ஆக்கினைக்கோ ? சரியாய்ப் பாடம் பண்ண வில்லை, என்ன ? சரி இரு. சத்திய வேதச்சித்திர விளக்கத்தைப் பற்றி இனிச் சொல்லித் தரப் போறன். மறந்துபோகாமல் நாளைக்கு வந்து பாடம் தரவேணும், என்ன ? "

" ஓம் உபதேசியார் "

உபதேசியார் சத்திய வேதச் சித்திர விளக்கத்தின் படங்களைப் பக்கம் பக்கமாகப் புரட்டிக் காட்டுகிறார். பரலோகத்தைப் புரட்டிக் காட்டுகிறார்.

'பரலோகத்தையும் பூலோகத்தையும் விசுவாசிக்கிறேன்' என்னும் 'விசுவாச மந்திரத்'திற்கு முதலில் அங்கே விளக்கம் வரையப்பட்டிருக்கிறது.

சித்திர விளக்கத்தில், நீண்டு வளர்ந்த வெண் தாடியுடன் மாபெரும் முதுகிழவர் உடல் முழுவதையும் மூடிய ஒரு நீள அங்கியணிந்து வீற்றிருக்கிறார். பக்கத்தே அவரைப் போல் இரு படு கிழவர்கள் சமத்துவமாய் வீற்றிருக்கிறார்கள்.

இம் மூவரும் ஒரே சருவேசுரன்.

அடுத்தது 'நித்திய' ஜீவியத்திற்கு – மோட்சத்திற்கு விளக்கம் வருகிறது.

அங்கே, பஞ்சுத் துணிகளணிந்த சம்மனசுக் கூட்டங்கள், வெண் புறாக்கள் போல் சிறகடித்துப் பறந்து, ஆனந்த சாகரத்தில் மூழ்கி, சருவேஸ்வர ஸ்தோத்திரம் செய்து கொள்கின்றன. வான மண்டலம் நீல வர்ணத்தைப் பரப்பித் துயில் கொள்கிறது ; எங்கும் ஒரே பசுமை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணிக்கையிலடங்காத தேவதூதர்கள் காற்றோடு அலையலையாக அசைந்தாடி மிதந்து வந்து, தேவகீதமிசைத்து 'சமாதானம் உண்டாவதாக' என்று கட்டியம் கூறுகிறார்கள்.

அகுஸ்தீனுக்கு ஒரு சந்தேகம். 'கையோடு அதைக் கேட்டுத் தெரிந்து கொள்வோம்' என்ற அசட்டுத் துணிவு அவனுக்குப் பிறக்கின்றது. இளஞ்சிறுவன் கேட்கிறான்:

"உபதேசியார்; மோட்சத்தில் இருக்கிற ஆத்துமம் மறுக்காலும் நரகத்துக்கு வருமோ?"

"இல்லை!"

"ஏன் வராது?"

"முழுமொக்கா. 'மோட்சம்' நித்தியம்; அழியாத பேரின்பமெண்டு நீ படிக்கேலியே?"

"அப்பிடியெண்டா, 'தேவ தூதர்கள் மோட்சத்திலிருந்து சபிக்கப்பட்டு நரகத்தில் தள்ளப்பட்டதெண்டி'ருக்கே, அதெப்பிடி?"

"அது, தாங்களும் 'சருவேசுரனைப் போல இருக்க வேண்டும்' என்று 'அகங்கார'மடைந்த சம்மனசுக்கூட்டம் தான் சபிக்கப்பட்டது"

"ஆங்காரம் சாவான பாவம் தானே?"

"பின்ன என்ன, சாவான பாவம் தான்."

"அப்ப, மோட்சத்தில் இருந்தாலும் சாவான பாவம் செய்ய மனம் வருமோ?"

"........................?"

"என்ன உபதேசியார், மனம் வருமோ?"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூளையைக் குடையும் கேள்வி ; பதிலுக்குப் பதில், கோபம் தான் வருகிறது.

"மோட்சத்தில் இருந்து நரகத்துக்குச் சபிக்கிறதெண்டால், மோட்சமும் ' நித்தியமில்லை ' த் தானே உபதேசியார் ?"

"பேசாமல் இரடா மொக்கு"

உபதேசியாரின் வெருட்டலோடு அகுஸ்தீன் அதிருப்தியுடன் அமர்கிறான்.

"அது கிடக்கட்டும், நீ விசுவாச மந்திரத்தைச் சொல்றா பாப்பம்"

"பரலோகத்தையும் பூலோகத்தையும் படைத்த சருவத்துக்கும் வல்ல பிதாவாகிய சருவேசுரனை விசுவாசிக்கிறேன். அவருடைய ஏக சுதனாகிய நம்முடைய நாயகன் இயேசுக் கிறிஸ்துவையும் விசுவாசிக்கிறேன். இவர் . . . . . . . "

"நிறுத்து ! 'இவர்' எண்டால் ஆர்ரா ?"

"யேசுக்கிறீஸ்து !"

"சரி, சொல்லு "

"இவர் இஸ்பிரித்துச் சாந்துவினால் கர்ப்பமாய் உற்பவித்துப் பிறந்து . . . . . ?"

உபதேசியார் சொல்லாமலே அகுஸ்தீன் நிறுத்துகிறான்.

உபதேசியாருக்குக் கண்கடை தெரியாமல் கோபம் வருகிறது.

"எட வெறும் பேயா. அது தேவ இரகசியமடா ; மனிதர்களாகிய எங்கள் புத்திக்கு அது எட்டாது "என்கிறார்.

"தேவ இரகசியமெண்டால் . . . . . ?"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உபதேசியாருக்கு இப்போது கோபம் வரவில்லை. சிரமத்தைப் பாராது அக்கேள்விக்கு ஓர் உதாரணக்கதை சொல்கிறார் :

"தேவனைக் கண்ணாரக் காண வேணுமெண்ட புடிவாதத்தில, அச்சசிட்ட அகுஸ்தீன் என்பவர் ஒருநாள் கடற்கரையோரமாக யோசிச்சபடி உலாத்திக் கொண்டு நிக்கேக்க, அங்கே ஒரு சிறுவன் அந்தக் கரை ஓரத்தில நிண்டு சின்னக் குழியைத் தோண்டிப் போட்டு, ஒரு சிப்பியால சமுத்திரத்துத் தண்ணிய அள்ளி அதுக்குள்ள ஊத்திக் கொண்டிருந்தான். அதைக் கண்ட அகுஸ்தீனார், சிறுவனைப் பார்த்து, 'தம்பி, இதென்ன செய்து கொண்டிருக்கிறாயெண்டு' கேட்டார். சிறுவன் அவரைப் பார்த்து, இந்தக் குழிக்குள்ளே சமுத்திரத்தை இறைத்துக் கொண்டிருக்கிறே'னெண்டான். அவர் பரிகாசமாகச் சிரிச்சுப்போட்டு, 'அறிவற்ற சிறுவனே, இந்தப் பெரிய சமுத்திரத்தைச் சின்னஞ்சிறு குழிக்குள்ளே உன்னால் இறைக்கமுடியுமா ?'வெண்டு கேட்டார். உடனே அவன் பதிலுத்தாரமாக, 'மாபெரும் சக்தியுள்ள தேவனை உமது அற்ப மூளையால் அளவிடுவீராயின், நானும் இந்தச் சமுத்திரத்தை இச்சிறு குழிக்குள் இறைத்துவிடுவே'னென்டு பதில் சொன்னான். இதைக் கேட்ட அகுஸ்தீனார், 'தேவ ரகசியத்தை அறியவேணு'மெண்ட முயற்சியை நினைச்சுத் துக்கித்து அந்தச் சிறுவனை நோக்கினார். ஆனால், அவனை அங்கே காணவில்லை. அதைக் கவனித்த அகுஸ்தீனார், 'தேவதூதனே சிறுவனாக வந்து காட்சியளித்துச் சென்றா'ரெண்டதையுணர்ந்து, அவ்விடத்திலேயே முழந்தாட் படியிட்டுத் தேவனை வணங்கினார் . . . . . ."

கதையைச் சொல்லி உபதேசியார் வாய் ஆறவில்லை, "அந்தச் சிறுவன்தான் 'தேவதூத'னெண்டு அச்சசிட்ட அகுஸ்தீனாருக்கு எப்பிடித் தெரிஞ்சுது உபதேசியார் ?" என்று 'சடா'ரெனக் கேட்டான் அகுஸ்தீன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" 'சட்' டெண்டு சிறுவன் மறைஞ்சதால"

"அப்ப, 'சட்' டெண்டு மறையிறதெல்லாம் சம்மனசு களோ ?"

உபதேசியாரால் பொறுக்க முடியவில்லை. 'இதென்ன கேள்வியா, கழுத்தை அறுக்கிற கத்தியா ?'

"டேய் சும்மா இரடா, மொக்குக் கழுதை !" என்றார்.

ஏமாற்றத்தின் சுவடு அகுஸ்தீன் முகத்தில் தெரிகிறது. கடைசியாக உபதேசியார் கையாண்டது தடையுத்தரவு.

அடுத்தது நரகம்.

அங்கே, ஜுவாலை விட்டெரியும் நெருப்புச் சூளைக்கு மத்தியில் குத்தூசிகளாலான நீள ஈட்டி முனைகளோடு பயங்கர மாகப் பிளிறி, 'ஆ' வென்று அகலத் திறந்த வாய்களை இளித்துப் பிடித்தபடி கன்னங்கரேலென்று கண்டங்கரியாகத் தோற்றமளிக்கும் கொள்ளி வால் பிசாசுகள், பிறந்த மேனிகளாகக் கூக்குரலெடுத்து நிற்கின்றன. எங்கும் இருள் மண்டி மின்னலும் இடியுமாய் நரகம் அதிர்கின்றது.

நெளிந்து ஊரும் பாம்புகள், தெற்றிப் பாயும் தவளைகள், மலம் தின்னும் பன்றிகள், நிலங்கிளறும் காண்டாமிருகங்கள், சீறும் புலிகள், கர்ச்சிக்கும் சிங்கங்கள், வாய் விரித்து ஓடி வரும் முதலைகள், கெந்தும் புழுக்கள், கரட்டி ஓணான்கள், சேற்றுடன் கழித்த மலப் பொதிகள், நெரிஞ்சில் முட்கள் – இப்படியாக அந்த நரகக் குழி அருவருப்பாகவும் பெரும் பயங்கரமாகவும் பரிதாபமாகவும் தெரிகின்றன.

கேட்பதெல்லாம் சோக ஒலி – ஓயாத கூச்சல்.

சாவான பாவம் செய்த ஆத்துமாக்கள், நிர்வாணக் கோலத் தோடு, இந்தப் பயங்கர விலங்குகளுக்கும் அக்கினிச் சுவாலைக் குமிடையில் நின்று தத்தளித்துப் பெருங்குரல் எடுத்து 'ஐயோ ஐயோ !' என்று அபயமிட்டுக் கத்திக் கூக்குரலெழுப்புகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விபசாரம் செய்த ஒரு கன்னிப் பெண் தலைவிரி கோலத்தோடு தனது மார்பகங்களைக் கேசத்தால் போர்த்தி மறைத்துக் கொள்கிறாள். அவளை அந்தக் கொடிய விலங்குகள் பாய்ந்து கடிக்கின்றன. மேனி எங்கும் இரத்தப் பீச்சல். பாம்புகள் அவளின் வெற்றுடலைச் சுற்றி வளைத்து வால்களை இடுக்கி நுளுந்தித் துவாரங்களின் கெண்டைக் கால்களுக்கூடாக விட்டுத் துளைக்கின்றன. அக்கினியோ 'கோ' வென்று விளாசி எரிகிறது. இவை யாவும் அங்கேயுள்ள ஆற்றுமாக் களை வேதனைப்படுத்தவேயன்றி ; அழிப்பதற்கல்ல. இதுதான் ' நித்திய ஆக்கினை ' என்னும் நரகம்.

அந்தக் கன்னிப் பெண் வெக்காளக் குரலில் ஓயாமல் 'ஐயோ ஐயோ' என்று அலறி அபயமிடுகிறாள். இந்தப் பரிதாபவேளையில் அவளுக்கு அபயமளிக்க ஓடி வருவது ஆண்டவனல்ல, அகன்ட வாய் திறந்த அலகைகளாகும்.

பெரியதொரு சூலத்தைக் கரங்களில் எடுத்துப் பிடித்துக் கொண்டு, ஆவேசமாய் ஓடி வந்து அவளின் விலாவில் ஒரு கொடிச்சு வால் பிசாசு ஓங்கிக் குத்துகிறது. அப்போது அந்தப் பெண்ணின் நாக்குப் புறப்பட்டு, விழிகள் பிதுங்கி, இரத்தம் ' குபீர் ' என்று பீறிட்டுப் பாய்ந்து அடிக்கிறது. மரணிக்காத அவள் சடலம் திக்கித் திக்கித் துடிக்கிறது.

இதைக் கண்ணுற்ற இன்னொரு பிசாசுக்குப் பெரும் ' குஷி ' கிளர்கிறது. அது தனது கருஞ் சூலத்தை அவள் மீது ஓங்கிக் கண்களைக் குத்தவென்று இளித்துப் பிடித்த வண்ணம் பறந்தோடிப் பாய்ந்து வருகிறது . . . . . . . .

" ஐயோ ! என்ர அம்மோய், பேய் என்னைக் கொல்ல வருகுது . . . . . . என்ர ஐயோ . . . . . . . ! "

நடுச்சாம வேளையில், திண்ணையிலிருந்து செத்தைக் கூடாக உருண்டு, மலாரிட்டு விழுந்து, எழுந்து, வீரிட்டுப் பயந்து புஷ்பம் கதறுவது, சலனமற்ற அவ்வேளையில் அவள் தாயின் செவிகளில் அடித்தாற் போல் கேட்டது.

" புள்ள புஷ்பம் ; என்ன நாச்சியார், என்னடா ? "

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலங்க மலங்க விழுந்தடித்தோடி வரும் அம்மாவை, புஷ்பம் தாவிக் கட்டிப் பிடித்தவண்ணம் கேருந்தொனியில் விம்மி அழலானாள் : " அம்மா, எனக்குப் பயமாயிருக்கு . . . ஐயோ பேய் வருகுது . . . "

' பிள்ளை கெட்ட கனாக் கண்டு பயந்திட்டுதாக்கும் ' என்று யூகித்து, மூன்று தடவை புஷ்பத்தின் முகத்தில் ' துப் துப் துப் ' என்று துப்பித் தடவி அழைத்துக்கொண்டு போய், தன்னுடன் அணைத்து வயிற்றுக்குள் வைத்துப் படுத்துக் கொண்டாள், அம்மா.

புஷ்பத்தின் சொக்கை கண்ணீரால் கசிந்து போயிற்று.

## (4)

விடிந்து திருந்தாதி மணி ' கணீ' ரிட்டது.

" புள்ள புஷ்பம். திருந்தாதி மணி அடிக்குது. எழும்பிக் காலைச் செபத்தைச் சொல்லு, எழும்பு "

அம்மா அவளைத் தட்டி எழுப்பி விட்டு, மேலே பார்த்தாள்.

புஷ்பம் பாயில் தேய்ந்து போய்க் கிடந்தாள்.

' டாங் . . . . டாங் . . . . டாங் '

இப்பொழுது கேட்பது, பூஜை மணி.

' புள்ள புஷ்பம், எழும்பி இஞ்ச வாடா '

அவளின் அப்பு, படுக்கையில் கிடந்துகொண்டு பரிவோடு அவளைப் பார்த்து அழைத்தார். அவள், ' என்னணை அப்பு? ' என்று கேட்காமலே நத்தைபோல் மெல்ல ஊர்ந்து சென்றாள்.

" ஏன் சோந்து போயிருக்கிறாய் ? பூசைக்கு நேரம் போச்சுது. போட்டு வாவன்ரா. போகாட்டி பூசைக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரெல்லயெண்டு ஞானோபதேசப் பாட நேரத்தில் எக்கணம் உபதேசியார் அடிப்பாரல்லே ? '

' உபதேசியார் ? '

' ஐயோ ! '

முகம் குருக்குத்திற்று.

" ஏன் புள்ள பேசாமலிருக்கிறாய் ? "

விவரிக்க முடியாமல் அவள் அடக்கி வைத்திருந்த நெஞ்சுத் தீ கட்டுக்கடங்காமல் விளாசி வெளியே கக்குகிறது.

"என்ர அப்பு ! நான் இனி எந்தக் கோயிலுக்கும் போகமாட்டன்; எனக்கு ஞானோபதேசமும் வேண்டாம் ! "

தன் நெஞ்சு பாரத்தைக் கொட்டி அகற்றி விட்டுத் தன் அப்புவைப் பார்த்து அவள் ' ஓ ' வென்று பெருங் குரலெடுத்து அழுதாள்.

அந்தப் பரிதாபத்தைப் பார்த்து அவர் கண்களும் ஏங்கிக் கலங்கின.

"ஏன் ராசாத்தி அதுக்கு அழுகிறாய்? போக மனமில்லாட்டி விட்டிட்டுப் பேசாமல் இரன் "

கொஞ்சு மொழியில் அவள் நெஞ்சு சுரக்க ஆறுதல் கூறினார்.

நேரங் கழிந்தது.

"புள்ள, ஏன் ராசாத்தி கோயிலுக்குப் போக மாட்டனெண்டனி ? "

" அங்க போய் ஞானோபதேசம் படிச்சா, பேய்தான் வந்து நரகத்தில தள்ளும் . . . . நான் இனிப் போகமாட்டன். கோயிலை நினைக்கப் பயமாயிருக்குதணையப்பு . . . . . " அழுது தேம்பும் அவள் முகம் தகப்பன் நெஞ்சில் சாய்ந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் சிரித்தார்.

" அப்பிடியே நீ போக வேண்டாம், அழாதை "

தனக்குள் சிரித்துப் புஷ்பத்தைச் சாந்தப்படுத்திக் கொண்டு நினைக்கிறார்:

'ராத்திரிக் கெட்ட பேய்க்கனவு கண்ட பயத்திலதான் இப்பவும் புள்ளை அதை நினைச்சு இப்பிடிச் சொல்றாள்; உபதேசியாரிட்டச் சொன்னால் ஞானோபதேசம் படிப்பிக் கேக்க தேற்றிவைப்பார் . . . . '

புஷ்பத்தைப் போகவிட்டுப் பார்த்துச் சிரித்தபடி அவர் தன் மனைவியை அழைத்து 'விஷயம் ' தெரிந்த பாவத்துடன் சொல்கிறார்: "பிள்ளையைக் கூப்பிட்டு இப்ப ஏதேன் நல்லாத் தின்னக் குடு. அவள் கெட்ட கனாக் கண்டு நல்லாப் பயந்து ஏங்கிப் போனாள். மேலைக்குப் பாப்பம் "

அந்த ' விஷயம் ' தெரிந்து புதிய ஞானோதயம் பெற்ற புஷ்பம், அம்மாவைத் தேடி அழுத மூஞ்சியோடு ஒரு வைராக்கியத்துடன் வெளியே வந்தாள்:

' கள்ள உபதேசி. செத்தாலும் இனி ஞானஉபதேசத்துக்குப் போறேல்ல; கோயிலுக்கும்தான் . . . . '

**தினகரன் – 1964**

**மறுபிரசுரம் : தாமரை – 1977**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5. தீர்ப்பு

பாலில் தண்ணீர் கலப்பதும் தண்ணீரில் பால் கலப்பதுமே அந்நாட்டு வியாபாரிகளின் வழக்கம். இந்தப் பாதகனோ, பாலில் தண்ணீரோ தண்ணீரில் பாலோ கலவாமல் சுத்தமாக 'வெறும் பாலை' மட்டுமே விநியோகித்து, சகல வியாபாரிகளின் 'லாபத்தை'யும் கெடுத்துவிடுகிறான் . . . .

மந்திரி பிரதானிகள் பரலோக மண்டலத்தில் வீற்றிருந்தனர்.

யமதர்மராஜனார் கொலுவுக்கு வந்துவிட்டார்.

சித்திரகுப்தனைக் காணவில்லை.

தர்மராஜனுக்குக் கோபம் வந்துவிட்டது.

பலமாகக் கர்ஜிக்கலானார் :

" பிரதானிகளே சித்திரகுப்தன் ஏன் இன்னும் சபைக்கு வரவில்லை ? "

" மகாராஜா, இதோ வந்துவிட்டேன் "

குரல் கேட்டுச் சபை 'கலகல'த்தது.

பூலோகவாசிகள் பட்டியலோடு சித்திரகுப்தனார் சபையில் தோன்றினார்.

தர்மராஜனார் தண்டாயுதத்தை அநாயாசமாகத் தூக்கி வைத்துவிட்டு, வெகு பக்குவமாக – சற்று அழுத்தமாகவே கேட்டார் :

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சித்திரகுப்தனாரே சபைக்கு வர ஏன் இவ்வளவு தாமதம்?"

" அது ஒரு பெரும் சிக்கல். "

" என்ன, சத்தியவான் சாவித்திரி விவகாரத்திலும் பார்க்க இது வில்லங்கமான விஷயமோ ?"

" சின்னக் காரியம் ஆனால், பெரிய அக்கப்பாடு. "

" யார் அந்தப் பொடிப்பயல் ? "

" அவன் ஒரு கம்யூனிஸ்ட் ! "

யமதர்மராஜனார் மெய்யாக உள்ளூரப் பயந்துதான் போனார். அவர் மகுடம் சற்றுக் கடகடத்தது.

" அவன் தொழில் ? "

" விவசாயி – பால் விற்பவன் "

" புரிந்த குற்றம் ? "

சித்திரகுப்தனார் வெகுபதனமாக நாமவரி ஏட்டை விரித்து வரிசைப்படுத்திப் பார்த்துக் கண்டுபிடித்து விட்டார்.

சபையில் கலவர நிசப்தம்.

' சரி, வாசியும் ? "

சித்திரகுப்தனார் வகைப்படுத்தலானார்.

" இவன் ஓர் ஒழுக்கம் கெட்ட கம்யூனிஸ்ட் "

"ஏலவே கூறினீர். கம்யூனிஸ்ட் மகா பயங்கரவாதி. நாசமாய்ப் போகக் கடவன். "

மண்டலம் அதிர்ந்து கொண்டது.

" சரி, மேலே சொல்லும் ? "

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மனிதனே கடவுளைப் படைத்தவன், என்கிறவன் இவன் மா கொடிய மார்க்ஸிஸ்ட்; மாபெரும் முட்டாள்; மகத்தான நாஸ்திகன் "

வாய் விடாச் சாதியான ஒரு பிரதானி குரல் அலகையாக அலறியது.

" சரி, தொடரட்டும் ? "

"கறுப்பு மார்க்கட்காரர்களுக்கு சதா தொல்லை கொடுப்பவன் "

" தனப் பெருமை அறியாத தற்குறி; சுளுவாகப் பணம் பண்ணத் தெரியாத பேயன் "

பக்கத்துப் பிரதானி விமர்சித்தார்.

" அப்புறம் ? "

"முதலாளித்துவத்தை ஒழித்துச் சோசலிசத்தை நிர்மாணிப்பதே இவன் இலட்சியம் "

" இந்த உலகத்தையே நாசப்படுத்துகிற சண்டாளன் "

பிரதானிகள் 'கலகல'ப்பும் 'சலசல'ப்பும் மண்டலத்தில் எதிரொலித்துக் கொண்டிருந்தன.

"போதும், நிறுத்துங்கள். அவன் செய்த பாவம் என்ன ?"

தர்மராஜன் 'விடுத்து'க் கேட்டார்.

" பாவம் மாத்திரமல்ல; பெரிய அக்கிரமம் புரிந்தான் "

" சரி, சொல்லித் தொலையும் "

"சகல பால் விற்பனையாளர்களின் பொதுவான ஜனநாயகரீதியான நாட்டு வழக்கத்தையே மீறியுள்ளான் "

" அப்படியா, அடுத்து ? "

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உலகத்தோடு ஒத்தோடும் பழக்கத்துக்கே சவக்குழி தோண்டுகிறான்"

" அளக்காமல் சற்று விளக்கமாகச் சொல்லும் "

"கவனியுங்கள்: பாலில் தண்ணீர் கலப்பதும் தண்ணீரில் பால் கலப்பதுமே அந்நாட்டு வியாபாரிகளின் வழக்கம். இந்தப் பாதகனோ பாலில் தண்ணீரோ தண்ணீரில் பாலோ கலவாமல் சுத்தமாக 'வெறும் பாலை' மட்டுமே விநியோகித்து, சகல வியாபாரிகளின் லாபத்தையும் கெடுத்துவிடுகிறான் "

"படுபாவி: பச்சைத் துரோகி. இவனை இனி உயிரோடு விடப்படாது."

தண்டாயுதத்தை எடுத்து நிறுத்தி ஒரு பாட்டம் கொலுவில் குத்தினார் தர்மராஜன்.

யமலோக மண்டலம் ஒரு தடவை 'கிடுகிடு' த்து அதிர்ந்தது.

"இதோ உத்தரவிடுகிறேன். இந்த மாகொடிய பாதகங் களை அவன் புரிந்தமையால் மதபோதகர்கள், வியாபாரிகள் முதலாளிகள் வந்தடைகிற மோட்ச லோகத்தில் இவன் சஞ்சரிக்க முடியாது. எனவே, இவனுக்கு நித்திய நரக ஆக்கினை வழங்கத் தீர்ப்பளிக்கிறேன். இன்றே அவன் உயிரை எடுத்து வருவோம். சீக்கிரம் புறப்படும்."

சபை கலைந்தது.

யமதர்மனார் தண்டாயுதத்தைத் தூக்கித் தோளில் சுமந்து கொண்டு, பாசக் கயிறு சகிதம் சித்திரகுப்தனாரோடு பூலோகத்துக்கு எழுந்தருளினார்.

ஒரே ஏமாற்றம்.

ஏக சல்லடை போட்டும் பூலோகத்தில் அவனைக் காணவில்லை.

சதிரம் குல்லிட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்கள் மிரள விழிகுத்திப் பார்த்தார்.

யமதர்மராஜனை முந்திக் கொண்டது இலங்கை அரசபடை:

" உயிர் எடுக்கும் என்னையே இந்த அரசு வென்று விட்டதே சரி, பார்க்கிறேன் ஒரு கை. "

தனக்குள் சபதமிட்டு முழங்கியடித்த யமதர்மராஜன் வெகு ஆத்திரத்தோடு முழிபேந்த யமலோகம் மீளலானார்.

இதற்குப் பின் –

யமதர்மராஜனின் ஒய்யாரமான ஒறணை மீசையையும் ஜூலை எண்பத்தி மூன்றோடு காணவில்லை; யமலோக சபை கூடுவதுமில்லை.

சித்திரகுப்தனார் பூலோகவாசிகளின் நாமவரி ஏட்டோடு பிரதானிகள் சகிதம் 'பரதேசி'யானார்.

**கண் : ஒகஸ்ட் 1988**

**துரைஸ், வண்ணை தெய்வம், திருமதி கௌரி மலன்கோவன் ஆகியோரால் 1988–ல் பாரிஸ் தமிழ் வானொலியில் நாடகமாக ஒலிபரப்பப்பட்டது.**

University of Peradeniya
04 JAN 2022
LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ௬. காதல் தத்துவம்

காதல் புனிதமானது. சதா வாழ வேண்டும் எனவே, நாம் உயிருள்ளவரை திருமணம் புரியவேகூடாது. சம்சார சாகரம் நித்திய சங்கடம். லையிலா மஜ்னு, ரோமியோ யூலியட் திருமணம் புரியாத படியால்தான் அந்தக் காதல்கள் இன்றும் அழியாக் காவியங்களாக வாழ்கின்றன.

**கா**தற் சோடியான யுவதியும் யுவனும் பஸ் நிலையத்தில் மறுநாளும் சந்தித்துக் கொண்டனர்.

"கண்ணே மணியே கனிரசமே கற்கண்டே பெண்ணே பூம்பதமே பேசும் பொற்சித்திரமே " என்று பாமாலை சூட்டி வர்ணித்தான் பையன்.

பொடிச்சியும் கோசு போகவில்லை.

" அன்பே என் ஆரமுதே ஆளவந்த நற்கோவே இன்றே இணைய எணை, வந்தணைந்த காதலரே" என்று பதிற்கவி பாடிப் பதஞ்சலி செய்தாள் பைங்கிளி.

" நீ என் உயிர் " என்றான் காதலன்.

" நான் அதன் நாடி " என்றாள் காதலி.

" நீ மலர் " என்றான் பொடியன்.

" நான் மணம் " என்றாள் பெட்டை.

" காதலுக்குக் கண் இல்லை " என்றான் அவன்.

" அதுக்குக் கரையும் இல்லை " என்றாள் இவள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படியாக, " மலரும் மணமும் போல, நகமும் சதையும் போல " என்று காதலனும் –

" உயிரும் உடலும் போல, இரத்தமும் நிறமும் போல " என்று காதலியும் –

கிழடு தட்டிப் போன செல்லரித்த தமிழ் சினிமாக் காதல் வசனங்களை ஒப்புவிக்கும் நவீன விசிலடிச்சான் குஞ்சுகளாட்டம், வழமைபோல் தங்களுக்குள் புதுமையாகப் பரிமாறிக் கொண்டனர்.

இந்த விதமாகப் பஸ்நிலையத்தில் துளிர்த்த காதல், நாளொரு நந்தவனமும், பொழுதொரு போஜனசாலையும், இடையொரு கோயிலுமாகப் படையெடுத்தது.

ஒரு நாள் –

"இந்த இன்பமே சொந்தமானால் வானுலகம் வேண்டாம்" என்று தியாகராஜ பாகவதர் அம்பிகாபதியாகப் பாடிய பாடலைப் பாடினான் பெடியன்.

மறு நாள் –

"சந்திர சூரிய போங்கதிமாறினும் வீழினும் நமக்கென்ன?" என்று சந்தான லஷ்மி அமராவதியாகப் பாடிய பாடலைப் பதிற் பாட்டாகப் பாடினாள் பொடிச்சி.

அன்றைய காவிய நாயகர்களை இன்றைய தமிழ்ச் சிட்டுக்களான இந்தக் காதலர்களும் விட்டு வைக்கவில்லை என்ற சங்கதி யாருக்குமே தெரியாது.

இருவருக்குள்ளும் உண்டான இந்த ' மாசில்லாக் காதல் ' நாளாவட்டத்தில் கனிந்து ரசமாகி, பின்பு 'தெய்வீகக் காதலாக' மாறியே விட்டது.

கேட்பானேன். திருக்காதலர் இருவருக்கும் தலை கால் தெரியவே இல்லை.

அவவுக்குக் கண் தெரியவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவருக்குக் காது கேட்கவில்லை.

அளப்பானேன். இருவரும் இன்பசாகரத்தில் மூழ்கியே விட்டனர்.

ஒருநாள் பொடிச்சி வஞ்சகமில்லாமல், "என் இனியவரே, இப்படியே எங்கள் காதல் வளர்ந்து கொண்டேயிருந்தால் போதுமா ? எப்போது நாங்கள் திருமணம் புரிவது ?" என்று விடுத்துக் கேட்டாள்.

"என் கண்ணே, காதல் தெய்வீகமானது. அது எங்களுக்குள் சதாகாலமும் நீடூழி வாழ வேண்டும். என்னைப் போல் யூனிவர்சிட்டியில் படித்துப் பட்டம் பெற்ற உமக்குமா இதுகூடப் புரியவில்லை ?" என்று அடுத்துக் கேட்டான் பொடியன்.

இந்தப் பெட்டை ஒன்றும் விளங்காமல் "இதென்ன கோதாரி" என்று 'தறுதறு'த்து முழுசினாள்.

"அன்பரே, அது நூற்றுக்கு நூறு உண்மைதான். அதனால்தான் இருமனமொத்த திருமணம் புரிவோம் என்கிறேன்" என்றாள் பொடிச்சி.

காதலன் வழக்கம் போலவே 'கலகல'த்து நகைத்துக் கொண்டு சொன்னான் :

"அன்பே, உமக்கு என்ன விசரா ? காதலிப்பவர்கள் கைவிட்டுப் பிரியக் கூடாது. காதல் எப்போதும் புனிதமானது. அது சதா வாழவேண்டும். அந்தப் புனிதத்தைத் திருமணம் என்ற சாக்கடைக்குள் மாசுபடுத்தி அதன் ஆயுசைக் குறைத்து எங்கள் இன்பத்தையும் பவுசையும் கெடுத்து விடக் கூடாது. எனவே, நாம் உயிருள்ளவரை திருமணம் புரியவே கூடாது. சம்சாரசாகரம் நித்திய சங்கடம். ஆதலால், அந்தப் பேச்சே இனிவேண்டாம். லையிலா மஜ்னு, றோமியோ யூலியட் திருமணம் புரியாதபடியால்தான் அந்தக் காதல்கள் இன்றும் அழியாக் காவியங்களாக வாழ்கின்றன. இது கூட உமக்குப் புரியவில்லையா ? நேற்றும் அந்தக் காதல்ச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சினிமாப்படங்களைப் பார்த்து எவ்வளவு சந்தோஷப்பட்டோம் தெரியுமா ?"

துள்ளிக் குதித்த காதலி, தன் அடிவயிற்றைப் பிடித்து அலறிக்கொண்டு மூர்ச்சித்து விழுந்தாள்.

அன்று தொட்டு அந்தக் காதலன் இந்தக் காதலியைக் காண்பதே இல்லை.

– கண் 1988

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 7. சிதைவு

நாட்டுப் பிரச்சினையளைப் பற்றி வந்த பழைய பேப்பர்ச் செய்தியளி குந்தாத் தட்டிப் பாத்திட்டு எனக்கும் தா. நானும் இப்ப வாற செய்தியளைப் படிச்சுப் போட்டு உனக்குத் தாறன்.

'இந்த நாளயப் பிரச்சினைகளை வச்சு எழுதின கதை' களெண்டு சில வேளை ரண்டு பேருக்குமே பரிசு கிடைக்கலாம் . . . . . .

"என்ராப்பா உப்பிடிக் களைச்சு விழுந்து ஓடிவாறாய் ?"

"வீடியோக் கடை பூட்டப் போறாங்கள். எடுத்த 'கெசட்' டுகளைக் குடுத்துப்போட்டு, வேற படங்கள் எடுக்கப்போறன் "

" 'வீடியோ' க் கடைக்கெண்டா, நானும் வாறன் "

" கெதியா வா. எக்கணம் எட்டரைக்குப் பூட்டப்போறான்"

"இலங்கைப் பிரச்சினை எப்பிடி, ஏதும் கேள்விப்பட்டியே?"

---

குறிப்பு: 'ஈழத்துச்செல்வன்' என்ற புனைப்பெயரில் 'ஓசை' யில் சிதைந்து வெளியான இக் கதை, இங்கு முழுமையாக வருகிறது.

எஸ். ஏ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அதைப்பற்றிக் கதைச்சா விசர் வரும். வேற கதை இருந்தாப் பறை"

" எத்தின 'கெசட்' எடுத்தனி ? "

" மூண்டு "

" இண்டைக்குக் குடுக்காட்டி என்ன ? "

" ஏன், நீ பாக்கப்போறியே ? "

" 'சும்மா' ஒருக்காப் பாப்பம் "

"மூண்டையும் என்னெண்டு ஒரு நாளில பாக்கப் போறாய்? "

" இது, நான் எடுக்கேல, என்ர பக்கத்து 'றூம் மேட் ' முந்தநாள் பாத்திட்டு நேத்துத் தந்தது. ராத்திரியே நானும் மனிசியும் பாத்திட்டம் . இண்டைக்குக் குடுக்கப்போறன். ஒருநாள் பிந்திக்குடுத்தால் ஒவ்வொண்டுக்கும் அய்வஞ்சு 'பிறாங்' கூடக் குடுக்க வேணும். வேணுமெண்டா நீ எடுத்துக் கொண்டு போயிற்று நாளைக்கு அய்வஞ்சு பிறாங் கூடப் போட்டுக் 'கெசட்'டுகளைத் திருப்பிக் குடு "

"அப்ப, உதில நில்; நான் போய் வேற படக் 'கெசட்' ரண்டு எடுத்தாறன் "

" சிவாஜியோ எம்ஜியாரோ திறம் நடிகன் ? "

" எம்ஜியார்தான் ! "

"எம்ஜியார் சிவாஜியின்ர ஒரு வசனத்துக்குக் காணுமே?"

" உனக்கு விசர். எம்ஜியாற்ர ஒரு கம்பு வீச்சுக்குச் சிவாஜி கிட்ட வருவானே ? "

"சிவாஜியின்ர வாள் வீச்சுக்கு எம்ஜியார் வகை சொல்லுவானே ? "

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அப்பிடிப் பாக்கிறெண்டா, சத்தியராஜைப் போல சண்டைக் காட்சியள்ல 'துவள்" பறக்க அடிக்க ஆரால முடியும் ? "

" ஏன், கமலதாசன் என்ன குறைஞ்சவனே ? "

" கமலதாசன் காதல் காட்சியள்லதான் திறமா நடிப்பான்"

"அதுக்கும் தோதான சோடி கிடைச்சால்தான் நல்லா நடிப்பான்"

"ஏன், சிறீதேவியும் கமலதாசனும் சோக்காத்தானே நடிச்சது ? "

"சிறீதேவியின்ர கதைய விடு. அவள் இப்ப ஹிந்திக்காறரோட நடிக்கிறாள் "

" அப்பிடிப் பாத்தா, ஜெயலலிதா கெட்டிக்காறி "

" ஜெயலலிதா கெட்டிக்காறியெண்டு எனக்கு அப்பவே தெரியும் "

" எதைக் கொண்டு சொல்றாய் ? "

"எம்ஜியாரோடையும் சிவாஜியோடயும் கோசு போகாமல் நடிச்சது ஜெயலலிதாதான் "

"சரியடாப்பா, இதைப் பேந்து பறைவம். இப்ப நேரஞ்செண்டுபோச்சு, படக்கடை பூட்டப்போறான் "

*

"என்ன, போனோடன எடுத்துக் கொண்டுவாறாய் ? "

" அக்காவின்ர புருஷன் கடையில அந்தக் 'கெசட்'டை திருப்பிக் குடுத்துபோட்டு வேற புதுக்'கெசட்' அஞ்சு எடுக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிண்டார். காய், குடுக்கப்போன 'கெசட்'டை நான் அப்பிடியே வேண்டிக் கொண்டந்திட்டன். வேணுமெண்டா நீ இதில ரண்டைக் கொண்டு போ. இப்பிடி ஆளையாள் மாறி எடுத்தமெண்டா, காசு குறையும்; படமும் பாக்கிறதாப் போம்"

"கொத்தார் ஒண்டடியா ஏன் அஞ்சு 'கெசட்" எடுக்கிறார்?"

" காய், அவுட்டப்பரிசில இருக்கிறவர். ஆளுக்காள் மாறி ஒரு நாளைக்குள்ள பாத்து முடிச்சிடுவினம் "

" உன்னாணையெடாப்பா அநியாயம் சொல்லப் படாது, எங்கட சனங்கள் இலங்கையில இருக்கேக்கயும் கலை உள்ளங்கொண்டவைதான்; அகதியளா இஞ்ச வந்தும் கலை உள்ளத்தோடதான் இருக்குதுகள் "

"நாவூறு படக்கூடாது. தமிழன் எங்க - எதில கோசு போனவன்"

" பின்ன என்ன, அதை ஒருக்காச் சொல்ல வேணுமே?"

" அது சரி, தாருந்த கலைச்சங்கம் வைச்சு நடத்திறது ? "

" எட கோதாரி. உனக்கு இன்னும் தெரியாதே ? அவங்கள் கலைச்சேவைக்கெண்டே பிறந்தவங்கள். எங்க போனாலும் அவங்கட கெட்டித்தனத்தைப் பற்றித்தானே சனங்கள் பறையிது. அய்ரோப்பாவில தமிழாக்களின்ர புகழ் கொடி கட்டிப் பறக்கிறதும் அவங்களாலதான் "

"உன்னாணை நீ சொல்றது உண்மைதான். அந்தக்காலத் திலயும் எங்கட ஆக்கள் இந்தியாவிலயிருந்து பெரிய மோளம் சின்ன மோளச் 'செற்'றுகளைக் கொண்டு வந்து கோயில் களில 'சதிர்க்கச்சேரி' நடத்தி யாழ்ப்பாணத்தில கலைச் சேவை செய்தவே. வெளிநாடுகள்ல அகதிகளா வந்திருந்தும், அதுபோல இந்தியாவிலயிருந்து சினிமா நடிக நடிகையளையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாட்டுக்காறரையும் கொண்டு வந்து, சோக்கான ' இன்னிசை இரவும் ' பாட்டுக்குப் பாட்டுப் போட்டியும் நடத்தி, தங்கப் பதக்கப் பரிசும் குடுக்கினம் "

" உதுக்கெல்லாம் காசெங்கால ? "

" என்னெண்டு தெரியேல ; ஆனா, அவங்களிட்ட காசு தூள் பறக்குது "

" கெட்டிக்காறங்கள். தமிழ்த் தொண்டு, கலைத் தொண்டு, கடவுள்த் தொண்டு, கோயில்த் தொண்டெண்டு சேவை செய்யிறவையக் கடவுள் கடைசிவரையிலும் கை விடார் "

" அய்ரோப்பாவில எங்கால தமிழ்க் கடவுள் ? "

" இல்லாட்டி, நாங்கள் ஒரு தமிழ்க் கடவுளை உண்டாக்கலாம்தானே ? இஸ்ரேல்க்காற வேதக் கடவுள் தமிழ்ப் பகுதியில வரலாமெண்டா, ஏன் தமிழ்ப்பகுதியில இருக்கிற எங்கட கடவுள் பிரான்சில வரக்கூடாது ? "

" இதென்ரா மச்சான் இதுகும் ஒரு பகிடியே ? "

" உனக்கு ஒரு இழவும் தெரியாது, இலங்கையிலிருந்து அகதியளா வந்தவேயும், ' இமிக்கிரண்' டாயிருக்கிறவேயும் சேந்து ஒரு தமிழ்க்கடவுள் உண்டாக்கியிருக்கினம். தமிழ்க் கோயில் கட்டி அதுக்கெண்டு ஒரு சங்கம் வைச்சு, காசு சேத்து நாள் தவறாமல் பூசை செய்யினம். லண்டன், அமெரிக்கா விலயும் இப்பிடி முந்தியே கட்டி வைச்சிருக்கினம். இதை அறிஞ்ச சிங்களப்பிள்ளையள், தாங்களும் ஆமுத்துருமாரைக் கூப்பிட்டு விகாரையள் கட்டி எழுப்புகினம். இவையள் இஞ்சால பூசை வைச்சுக் கொண்டாட, அங்கால அவங்களும் இவேக்குக் கோசு போகாமல், ' புத்தஞ்சரணங்கச்சாமி, சங்கஞ்சரணங்கச் சாமி. தம்மஞ்சரணங்கச்சாமி ' யெண்டு பவித்தாரங்கள் சொல்லிப் பூசை செய்யினம் "

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இந்தத் தொண்டு போதாதெண்டு 'கும்பலுக்க கோவிந்தா' வெண்ட கணக்கா இன்னொரு தொண்டும் நடக்குது"

" அதென்னடாப்பா புதுத் தொண்டு ? "

"லண்டன், ஜேமனி, கனடா, நோர்வே, சுவிஸ் இப்படியான வெளிநாடுகளிலயும் கலை இலக்கியச் சேவை செய்தவை வீடு வாசல், கார், ரீவி, றேடியோ வேண்டினதோட களைச்சுப் போட்டினமெண்டு அறிஞ்ச இவேயும் அவேக்குக் கோசு போகாமல் இலக்கியச் சங்கம் உண்டாக்கித் தமிழுக்குத் தொண்டு செய்யினம். கருத்தோ கொள்கையோ இல்லாட்டியும் தமிழுக்குத் தொண்டு செய்யிறதோட தவிச்ச முயலுக்குத் தண்ணி வாக்கிற சாடை அகதியளாயிருக்கிறவேயின்ர நலனைப் பாதுகாக்க நல்லாக் கயிட்டப்படுகினம். இப்பிடியெல்லாம் கலைக்கும், தமிழுக்கும், கடவுளுக்கும், கோயிலுக்கும் தொண்டு செய்யிற 'தியாகி' யளின்ர 'கியாதி' உலகமெல்லாம் பரவுறதைப் பாத்து மற்றவே பொறாமையில, 'உதெல்லாம் விசிலடிச்சான் குஞ்சுக' ளெண்டு கேலி பண்ணித் திரியினம்"

" அதாரது அப்பிடிச் சொல்ற பேயன்கள் ? "

"அவேதான் சமுதாய முன்னேற்றக் கலை இலக்கியகாறர்"

"அவேயின்ர முன்னேற்றமும் மண்ணாங்கட்டியும்"

"ஆனா மச்சான், அவங்கள் சொல்றதிலயும் கன நாயமிருக்கு. நாங்களல்லோ வேணுமெண்டு அவங்கட நாயத்தை மறைக்கிறனாங்கள்"

" அவங்களில என்ன நாயத்தைக் கண்டு போட்டாய் ? "

"நீ கோவியாதை. நான் சும்மா பகிடிக்குச் சொன்னனான்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அதுதான பாத்தன். எடுத்ததுக்கெல்லாம் மாக்ஸியம், லெனிசியம், கம்மூனிசம், அந்த இஸம் இந்த இஸமெண்டு சுத்துறதுதான் அவேக்கு முழு நேர வேலை. சவுந்தரராஜன், யேசுதாசன், அல்லது பாட்டுக்குப் பாட்டுப் படிக்கிற சினிமாப் பாட்டுக்காறரைப் போல சனங்கள் மத்தியில உவையால புகழ் பெற ஏலுமே ? இஞ்ச பார், இண்டைக்கும் 'பொம்மை' யில் கலைத்தொண்டு செய்யிறவேயப்பற்றித் தான் விளம்பரம் போட்டிருக்கு இப்பிடியெல்லாம் வெளி நாடுகளிலயும் தமிழ்க் கலை வளக்கிறது தமிழருக்குப் பெருமைதானே ? இது இந்த மொக்கக்கூழுதையளுக்கு விளங்காது. இந்தமாதிரிக் கலை, கடவுள், கோயிலெண்டு தொண்டு செய்ய இவையெல்லாம் குடுத்துவைக்கவேணும்"

" எனக்கொரு சந்தேகம் மச்சான் "

" என்ராப்பா அது, இருந்தாப் போல . . . . . . . ? "

" அப்புடியில்ல, கொஞ்ச நாளா மனதுக்க குடையிது"

" சரி, விளப்பமாச் சொல்லன் ? "

"இலங்கையில் உப்பிடியான தொண்டு செய்த சனங்கள் தானே பெருவாரியாக அழிஞ்சது. அப்ப இந்தக் கடவுளும் கோயிலும் எங்க போனது ?"

" ம் . . . . . . . . . . ? "

" என்ன மச்சான் முழுசிறாய் ? "

"நான் நினைக்கிறன், அப்பிடியெல்லாம் தொண்டு செய்தவேயில கடவுள் ஆக நேசம் வச்சபடியால் சரியான கஷ்டத்தைக் குடுத்து அவையப் பரலோகத்துக்குக் கூப்பிட்டுத் தன்னோட வைச்சிருக்கிறார் . . . . "

" எட, அப்பிடியே . . . . . ? நீ சரியான விண்ணன் தான்ராப்பா. இந்தப் பெரிய சங்கதியளக் கூட வலு சுளுவாகக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டுபிடிச்சிருக்கிறாய். டார்வின் உன்னட்டப் பிச்சை எடுக்கவேணும். "

" பின்ன, நான் என்ன சும்மா லேசுப்பட்ட ஆளெண்டே நினைச்சனி ? "

" அப்ப, நான் கடன் பட்டெண்டாலும் கலைச்சங்கம் நாளைக்கு நடத்திற இன்னிசையிரவுக்கும், வாற நாயித்துக்கிழமை கோமாளியளின்ர கலை விழாவுக்கும் கட்டாயம் போறனுதான் "

" அப்பிடியெண்டா, எனக்கும் சேத்து 'விடியோ'க் கடையில பத்து 'டிக்கேற்' எடு. அப்பிடி எடுத்தா ஒரு 'டிக்கேற்' காசு கழிவு"

✻

" ஓ ட மச்சான், பாட்டுக்குப் பாட்டுப் போட்டியில் நாங்களும் கலப்பமோ ? "

" இதுவும் ஒரு பகிடியே ? கட்டாயம் கலக்கிறதுதான். வாற படங்கள் ஒண்டும் விடாமல் ஒழுங்காப் பாத்துப் பழகின எங்களுக்கு உதென்ன பெரிய காரியமே ? "

" ஒரு 'றிகேஷல்' பாப்பம். நான் முதல் எழுத்துச் சொல்றன். நீ 'டக்'கெண்டு பாட்டைத் துவக்கு "

" சரி, கேள் ? "

" ஆ . . . . . "

" ஆகா மெல்ல நட மெல்ல நட மேனிஎன்னாகும் ? "

" சரி, நி . . . . "

" நினைத்தேன் வந்தாய் நூறு வயசு "

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" கா . . . . . . "

" கால்கள் ஏறுது மேலே "

" நீ . . . . . . . "

" நீ ஒரு காதல் சங்கீதம் "

" 'வெரிகுட்' உண்ணாணை மச்சான் நீ கட்டாயம் தங்கப்பரிசு தட்டத்தான் போறாய். 'கலைஞ' னெண்ட பேரும் புகழும் எடுக்கப் போறாய் "

"அப்பிடியெண்டா, நாங்களும் ஒரு கலைச்சங்கம் துவங்குவமோ ? "

" ஓம் மச்சான். அச்சா ஐடியா "

"அப்ப, தமிழ்ச் சினிமாப் படங்கள்ல வாற முழுப்பாட்டை யும் ஒழுங்கா மனப்பாடம் பண்ணுவம். அப்பதான் சங்கீத ஞானம் வரும்; மூளையும் விரித்தியடையும். பிறகு பாட்டும் எழுதலாம்; நாடகமும் போடலாம் "

"நாடகமோ ?"

" ஏன், போட ஏலாதோ ? "

" நீ யோசிக்கிறது எனக்குத் தெரியும். ஆயிரக்கணக்கான படங்கள் பாத்துத் தள்ளுறம். அதில ஒரு கதைய அப்பிடியே எடுத்து நாடகமாகப் போடுவம் . . "

"ஏன், இப்பிடிச் செய்தால் என்ன ? "

" என்ராப்பா அது ? "

"எழுத்தாளரிட்ட நல்ல ஒரு கதை எடுத்து நாடகமாக்கினால் நல்லதுதானே ? "

" உண்ணாணை உனக்கு விசர் "

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" ஏன், 'அது சரியில்ல' யெண்டுறியோ ? "

"பின்ன என்ன, நாங்கள் மாயிறது. அவங்கள் பேரெடுக்கிறதே ? "

"அவங்களும் மாய்ச்ல்பட்டுத்தானே எழுதிறவங்கள் ?"

"அவங்களத் தொடுத்தா எங்கட எண்ணம் 'பிளாங்' காய்ப் போயிடும் "

" அதுவும் சரிதான் . . . . "

" நாங்கள் செய்யிறதும் கலைத் தொண்டுதானே. "

" அது சரி "

" அப்ப, நான் போட்டு வாறன். பிறகு ரூமில சந்திப்பம்"

" ஓமோம் படக் 'கெசட்'டுகள் கவனம். பத்திரமாக் கொண்டு வந்து குடுத்துப் போடு "

" 'ஓகே' . . . . இனி இதுகள்தானே எங்கட சீவியம் "

" உதென்ன, கையில சுறுட்டி வச்சிருக்கிறாய் ? "

" பேசும் படம், பொம்மை, தமிழ்ச் சினிமா "

" நீ சரியான ஆள்தான்ராப்பா . . . படிச்சுப் போட்டுத் தா, ஒருக்காப் பாப்பம் "

" இதுகள்ல நான் அவ்வளவு 'இன்ரஸ்ற்' இல்ல. என்ர மனிசிக்காறி படிக்கிறதுக்காக எடுக்குறனான் "

" பறவாயில்ல. அவ படிச்ச பிறகு தாவன். என்ர மனிசிக்காறியும் பாக்கட்டன் "

"அதுக்கென்ன பொம்புளயளும் இதுகளைப் படிச்சாத் தானே 'பொச்சம்' தீரும். அப்ப, நான் பேந்து சந்திக்கிறன்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" மச்சான், கதையோட கதையா ஒரு முக்கிய விஷயம் "

"என்ராப்பா, போகவிட்டுப் புறத்தால கூப்பிடுறாய் என்னெண்டு சொல்லு ?"

"நாங்கள் துவக்கப்போற கலைச்சங்கத்தைப் பற்றி 'நோட்டீஸ்' அடிக்கிறதோட, விளக்கமா இலங்கைப் பத்திரிகையளுக்கும் 'விளம்பரம்' குடு "

"இப்ப என்ன அவசரம்? சங்கத்தைத் துவக்கிப்போட்டு விளம்பரத்தை விளப்பமாக் குடுப்பம்"

"இதின்ர 'உள்ச் சங்கதி' உனக்கு விளங்கேல"

"அதென்ன உள்ச் சங்கதி ? "

"முதல்ல எங்கட குடும்ப ஆக்களை அங்கத்துவமாகச் சேத்துப்போட்டு, பிறகு எங்கட சொல்லைக் கேட்டு நடக்கிற வையப் பாத்துச் சேர்ப்பம். மிச்சத்தைப் பேந்து ஆறுதலாச் சொல்றன். இப்ப நீ விளம்பரத்தைக்குடு"

" சும்மா சொல்லக்கூடாது உண்ணாணை மச்சான் நீ வலு கெட்டிக்காறன்தான் "

"எனக்குந்த 'முகஸ்துதி' யொண்டும் பிடிக்காது. சரி, மறந்து போகாதை இண்டைக்கே விளம்பரத்தைக் குடுத்துப்போடு "

" ஒக் கே "

*

"மச்சான், ஒரு வில்லங்கம், நேத்துக்குடுத்தித் தலை சுத்துது"

" ஏன், ஏதும் வித்தியாசமாய்ப் பாவிச்சனியே ? "

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அதொண்டுமில்ல, நேத்து ஒரு எழுத்தாளர் சங்கத்தால கடிதமொண்டு வந்திருக்கு "

"ஏன்ராப்பா, ஏதும் கொழுவல் கிழுவல் – குடுக்கல் வாங்கலே?"

"அப்பிடியொண்டுமில்ல. 'சிறுகதைப் போட்டி' யொண்டு நடத்துகினமாம். எப்பிடியெண்டாலும் 'தெண்டிச்சு' ஒரு கதை எழுதிக் கூடிய கெதியில அனுப்பட்டாம்"

"அதுக்கேன் தலை சுத்துவான் ? "

"உதுவும் ஒரு கேள்வியே? ஒரு கலை நிகழ்ச்சி நடத்தினோவுடன என்னையும் எழுத்தாளனெண்டு மதிச்சுக் கடிதம் அனுப்பியிருக்கினம். எனக்கோ ஒரு இழவும் தெரியாது. அதுதான் விஷயம் "

"எனக்குக் கதைகிதை எழுதத் தெரியாதெண்டு உடன பதில் எழுதிப் போடன். பேந்தேன் கிடந்து முழுசிறாய் ? "

"சிறுகதைப் போட்டியெண்டா, பொதுவாக அறிவித்தலல்லோ போடுறது; தனிப்பட்டவேக்குக் கடிதம் எழுதிறேல்லயே ? "

"அதுதானே? ஆனா, பத்திரிகையில விளம்பரமும் போட்டிருக்கினம் "

"பேந்தேன் தனிப்பட்டமுறையில கடிதம் போடுவான் ? "

"அந்தச் சங்கத்தில இருக்கிற ஆளொருத்தர் எனக்கு வேண்டியவர். ஏன், அவேயின்ர கூட்டத்துலயும் 'தனிப்பட்டவேக்கும் கடிதம் அனுப்புற' மெண்டு வாய் தடுமாறிச் சொன்னதை நீ கவனிக்கேலயாக்கும் ? "

" நான் வடிவாக் கவனிச்சனான் "

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" அது கிடக்க, பரிசுத் தொகை எவ்வளவு ? "

" மூவாயிரம் பிறாங் "

" எட, "பேய்க்' காசு என்ன ? அப்பிடியெண்டா நானும் கதை எழுதப் போறன் "

" அது கெட்டுது போ. என்ர தலைச் சுத்து ஆறேல்ல. அதுக் கிடையில நீ ஒரு பக்கத்தால .. "

" ஏன், கதை எழுதுறது என்ன பெரிய வேலையே ? இதுவரையில ஒரு தொகைப் படக் கெசட் டுகள் பாத்திட்டம் பிறகு கதைக்கென்ன பஞ்சம்; எழுதித் தள்ளுறதுதானே ? பேந்தேன் மண்டையைப் போட்டு உடைப்பான் ? "

" எட அறுப்பே, நான் இதுகளை இம்மட்டு நேரமா யோசிக்கேல மச்சான் "

" அவே, எழுதிறவேய முன்னுக்குக் கொண்டுவர யோசிக்கினம். எழுத்தாளரைப்பற்றி யோசிச்சிருந்தா, ஏன் உனக்குக் கடிதம் எழுதப்போகினம்? இந்தச் சின்ன விஷயம்கூட உனக்கு விளங்கேல "

" பரிசு கிடைக்காட்டிலும் காரியமில்லை. 'கலைச்சங்கம் நடத்திறவே சரக்குள்ளவங்க' ளெண்டு மதிச்சிட்டாங்களே, அது பெரிய வெற்றிதானே ? "

" அப்ப, இனி நாங்கள் ராப்பகலாகவும் இன்னிசை நிகழ்ச்சிகளை நம்பி நடத்தலாம் . . . "

" நாங்கள் கலைச்சங்கம், நடத்தி பாட்டுக்குப் பாட்டுப் போட்டி வச்சுப் பரிசு குடுக்கேக்க, ' எட, நெடுகலும் கேட்டுச் சவுத்துப் போன பிற்போக்குச் சினிமாப்பாட்டுக்குத் தங்கச் சங்கிலி மோதிரம் குடுக்கிறாங்க ' ளெண்டு எங்களைக் கிண்டல் பண்ணினவேயின்ர வாயளை மூட இதுதான் நல்ல சந்தர்ப்பம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனபடியா, நீயும் கதை எழுதி அனுப்பு; நானும் எழுதி அனுப்புறன். ஆருக்குப் பரிசு கிடைக்குதோ அதை ரண்டாப் புறிச்சு எடுப்பம் "

"நாட்டுப் பிரச்சினையளப்பற்றி வந்த பழைய பேப்பர்ச் செய்தியளிருந்தாத் தட்டிப் பாத்திட்டு எனக்கும் தா. நானும் இப்ப வாற செய்தியளைப் படிச்சுப் பாத்திட்டு உனக்குத் தாறன். 'இந்த நாளயப் பிரச்சினைகளை வச்சு எழுதின கதை' களெண்டு சிலவேளை ரண்டு பேருக்குமே பரிசு கிடைக்கலாம் . . . . . ."

" எனக்குத் தனிப்பட்ட முறையில கடிதம் எழுதினபடியால், நான் நினைக்கிறன், எனக்கு எப்பிடியும் முதல் பரிசு கிடைக்கும். உனக்கு ரண்டாம் மூண்டாம் பரிசு கிடைச்சாலும் பறவாயில்லை, " பேய்க்' காசு. பிறகு, புறிச்சு எடுப்பம் "

"அப்ப, 'பேப்பர் நியூஸ்க் கட்டிங்' குகளை மறக்காமல் தேடி எடுத்துப் படிச்சுப் போட்டு எனக்குத் திருப்பித்தா, என்ன?"

" நாங்கள் ஒரு மோட்டுவேலை செய்துபோட்டம். சினிமாச் செய்தி விளம்பரப் பேப்பர்களைச் சேத்து வச்சமாதிரி நாட்டுப் பிரச்சினையள் வந்த 'பேப்பர்க் கட்டிங்' குகளையும் சேத்து வச்சிருக்கலாம். அதுகள்ல எங்களுக்கு 'இன்ரெஸ்ற்' இல்லாமல் போட்டுது . . . . . "

" போன சவத்தை விட்டிட்டு, இனி வாறதைக் கவனிப்பம். தேடி எடுத்துப் படிச்சாப் போச்சு . . . . "

" ஒக்கே . . . . . . . ஒக்கே . . . . . . ."

ஓசை – **1990**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 8. எவளுக்கும் தாயாக . . .

> நக நுனி சாடை, பிறை நிலா, ஒரு வெண் கீறு பாவி, மேக வெளி நாடி மின் வரி போட, செக்கல் கருகி இருள் அடர்ந்து கவிகிறது. பூமி முற்றாக மயான கோலம். அதிர் வேட்டுக்கள் வானமடங்க வெடித்து, நிலமதிரச் சிதறி, அவள் மனக்கண்ணுள் மின்னித் தெரிகின்றன.

கைம்பெண் போல் தன்னை அவள் காட்டிக் கொள்வதில்லை.

புருஷன் சம்பளம் பென்சனாக வருகிறது. ஒரே ஆண்பிள்ளை. இரண்டு இளங் குமர்கள். பிள்ளைகள் மூவரும் சதா படிப்பில் மூழ்கியபடி.

பிள்ளைகளுக்கான படிப்புச் செலவுக்கே 'பென்சன்' போதாது. ஆக, அவள் மாடு, ஆடு, கோழி, கன்று, காலி, சீட்டு, சித்தாயம் என்றெல்லாம் மாய்ந்தாள்.

எதுக்கும் ஈடு கொடுக்கிற வலிச்சல் தேகம்.

'தம்பியை எப்பிடியும் நல்லாப் படிப்பிச்சு ஒரு கரை காணவேணும்' என்ற ஆசை, நாளாக அவளை எலும்பாக்கியது.

'எலும்புருக்கியாக்கும்' என்று நடைமருந்து பாவிக்கிறாள்.

"உவ்வளவு கஷ்டத்துக்கு பெட்டையளைப் படிப்பிக்க வேணுமோ; பொடியனைப் படிப்பிச்சு ஆளாக்கினால், அவன் உன்னையும் தங்கச்சிமாரையும் பாக்கமாட்டானோ?" என்று அயலட்டை சிலேடையாகச் சொல்லும்.

அசட்டை பண்ணி விடுவாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'பொம்புளப்பிள்ளையள் படிச்சு நாலு காரியம் தெரிஞ்சால்தான் மேலைக்கு ஆம்பிளையள் அடக்கி ஆளாங்கள்' என்று சொல்லுமளவு அனுபவம். 'இந்தப் பிள்ளையள் மூண்டையும் கோசு போகாமல் நல்லாப் படிப்பிக்க வேணும்' என்ற அவள் எண்ணத்துக்கு உரம் பாய்ச்சி வருகிறது.

'தம்பி கட்டாயம் கம்பசுக்கு எடுபடுவான். அதுக்குப் பிறகு துரை சகோதரியளையும் அப்படி ஆக்குவான்' என்ற இவள் நம்பிக்கை வீண்போகவில்லை.

கம்பசுக்கு எடுபட்டான்

'பயோ சயன்ஸ்.'

யாழ்ப்பாணக் கோயில் குளம் ஒன்றும் பாக்கியில்லை. நேர்த்திக்கு வேண்டின 'கைமாத்து'களைக் கடன் பட்டும் தீர்த்துக் கொண்டாள். பாடுபட்டுத் சுமந்து பெற்று வளர்த்ததுக்குத் தக்க பலன் அடைந்ததான பூரிப்பில் ஆழ்ந்து போனாள்.

ஒரு வருஷம் ஆகவில்லை.

கொஞ்ச நாளாக மைந்தனில் ஒரு மாற்றம்.

கவனித்தே வருகிறாள்.

'மேல் படிப்பெண்டா அப்பிடித்தானிருக்கும்' என்று தனியே இருந்து யோசிப்பாள்.

பிடிபடுவதில்லை; புரிகிறதாயுமில்லை.

கடல் நீருள் தாளையாக மனசு தளம்பி என்னவோ செய்கிறது. எப்போதும் 'திக் திக்'கென்று அடித்துக் கொள்கிறது.

'அண்ணையின்ர போக்கு இப்ப ஒரு மாதிரி' என்று தங்கச்சிமாரும் கணித்தே வருகிறார்கள். தாய்க்குச் சொல்வதில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'அம்மா பாவம், ஏங்கிப்போவா' என்று இந்தப் பெண் பிறவிகள் மனம் கரையும்.

'கம்பசுக்குள்ள என்னென்னவோ எல்லாம் நடக்கிறதாக' தாய் கேள்விப்பட்டிருக்கிறாள்.

நம்புவதில்லை.

'பொறுப்பில்லாத சகோதரன்போல, தங்கச்சிமாரை மறந்து அவன் அப்பிடி 'ஏணாகோணமாக' நடக்கான்' என்று திடப்படுத்திக் கொள்வாள்.

எனினும், மனசுள் ஓர் அரிப்பு.

ஊர்க் கடுவன்களுக்கு நலமடித்து, பெட்டை நாய்களுக்கு நெருப்புக் கம்பிச் சூட்டுக் குறி போடுகிற ராட்சத மனுஷ அப்புக் குட்டியப்பா, "யூனிவெசிட்டிக்குப் போற பொடி பொட்டையளுக்கு நலமடிக்காட்டி, காடு கரம்பையெல்லாம் நாய்க்கொழுவலாக இழுபடுங்கள்" என்று வேறு பகிடி விடுவது இவள் மனசில் விஸ்வரூபமெடுத்திருக்கிறது.

'கோதாரி மனுஷன். அந்தாள் தான் செய்யிற கருமத்திலதான் கண்ணும் கருத்தும் கதையும். மலம் தின்ற காகமாட்டம் எந்த நேரமும் இதே கரிசனை. எப்பவும் கிலிசகெட்ட எண்ணம்.'

எரிந்து கொண்டே தன்னுள் புழுங்கிப் போவாள்.

'தம்பி அப்பிடி ஒருக்காலும் கிலிசகேடா நடக்கான்'

மனசுள் தேறினும், மகன் போக்கு, நடை, உடை, பாவனை, பேச்சு யாவும், 'அப்பிடித்தானிருக்குமோ ?' என்றும் அவளை ஐயுறுத்துகின்றன.

'காடேறி சாடை வர வர உவன் ஆன குளிப்பு முழுக்கும் இல்லையே ?'

மனசு நெட்டுருவிற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நேரே கேட்டுவிடுவது' என்று தீர்மானித்துக் கொண்டாள்.

ஒரு நாள் கேட்டாள்.

அவன் சிரித்துவிட்டு, "நான் முந்தியப்போல இல்லையெண்டா, இப்ப ஓய்வில்லாமல் நல்லாப் படிக்கிறனெண்டு தெரியுதுதானே ? பேந்தேன் உப்பிடிக் குடைஞ்சு மடைஞ்சு கேக்கவேணும் ?" என்று இவனே திருப்பிக் கேட்டதோடு புத்தகக்கட்டுகளை எடுத்தவன் சயிக்கிளில் ஏறி வெளியேகினான்.

மனசுள் கிலேசம், சஞ்சலம், ஐயம் விடுபடுகினும் அவன் விறுத்தாப்பிபோல் பதில் சொன்ன விதம் – அதன் விறுத்தம் சற்று வித்தியாசமாகப்படுகிறது.

முருகேசர் வீட்டுக் கடுவன் நாயொன்று பெட்டை வளைச்சலுக்கு வேலி பாய, கல் எடுத்து எறிந்து ஆத்திரமாக நிமிருகையில் மனசு அப்புக் குட்டியப்பாவைக் கறுவிற்று.

மேலைக் கடற்கரை தாண்டிய மண்கும்பான் திட்டி வெளிப்பக்கம் இரவு நேரங்களில் துவக்கு வெடிச் சத்தம் கேட்கிறபோதெல்லாம், "பொடியங்கள் சுட்டுப் பழகிறாங்க ளெண்டு கள்ளுக்குடிக்க வாறவே சொல்லுகினம்" என்று பட்டு விளையாட்டு வாக்கில் சொல்லுவாள். சுசீலா ஒத்து ஊதுவாள்.

இது வேறு நெடுக நெஞ்சை இடிக்கிறது.

மண்டை அதிருகிற ஓயாத வெடிகுண்டுச் சத்தம் எப்பவும் கோடை இடியாகக் கேட்டபடி.

'ஜூலை எண்பத்திமூன்று'*ச் சனியனுக்குப் பின் இள மட்டங்கள் வீடு வாசல், ஊண் உறக்கம், வேலை வெட்டி, கல்வி கூடம் அருந்தலாகி ஊர்தோறும் கந்தறுந்து நாடு விட்டு வெளியேறுவது, இயக்கங்களுக்குப் போவது தாய் தந்தை சகோதரங்களுக்கு ஊமைக்காய நோவு எடுத்திருப்பதுபோல் இவள் நெஞ்சும் கண்டிப் போய்க் கனத்துக் கிடக்கிறது.

* ஜூலை எண்பத்திமூன்று : இலங்கையில் தமிழர்களுக்கெதிராக 1983 ஜூலை 24ல் அரசு கட்டவிழ்த்த பெரும் இனக்கலவரத்தைக் குறிப்பது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யோசிக்க, நெஞ்சில் லயம் பிசகிப் பறை ஓலமாக அடிக்கிறது. மனசு ஓயாமல் நெருடுகிறது.

மண்டைக்குள் இடியப்பச் சிக்கல். சிந்தனையில் - மனசில் தெளிவற்ற வலைவீச்சு பூஞ்சாணித்த அலைப் பாய்ச்சலாகக் குதி போடுகிறது.

சுசீலா - பட்டு மண்கும்பான் சூட்டுச் சம்பவம் சொன்னபின், வானம் பார்த்த பூமி அவள் கண்ணில் சுடுகாடாகத் தெரிகிறது. சவுக்க மரத் தோப்பில் கூவி எழும் காற்றோசை சூறாவளியாக அலைகுமுழ்த்தி ஏகாந்தமான இவள் மனக் குகையில் மண்டுகிறது.

நக நுனி சாடை, பிறை நிலா, ஒரு வெண்கீறு பாவி, மேக வெளி நாடி, மின்வரிபோட, செக்கல் கருகி இருள் அடர்ந்து கவிகிறது. பூமி முற்றாக மயான கோலம். அதிர் வேட்டுக்கள் வானமடங்க வெடித்து நிலமதிரச் சிதறி அவள் மனக் கண்ணுள் மின்னித் தெரிகின்றன.

மைந்தன் இன்னும் வந்து சேரவில்லையாதலால் சடலம் நத்தைச் சதையாக ஊனிக்கிறது.

உடல் சோர்ந்து ஒரு வாட்டி அயர்ந்து போனாள்.

ஆழ்ந்த உறக்கத்திலும், 'தம்பி அப்பிடி நடவான்' என்று அடைக்கோழி அனுங்குகிற சாடை வாய்ப் புசத்தல்.

விடிகாலை அவன் வளாகம் செல்ல ஆயத்தமான போது, 'மனக் கிலேசத்தைத் தீர்த்து விடுவமோ?' என்று யோசித்தாள். ஆனால், அவன் சயிக்கிள் ஏறிய உசார் அவனைக் கிண்ட மனமின்றி ஒய்ந்தது.

*

**தே**றிய தேட்டம் இந்தமாதக் 'கட்டுக்காசு' கொடுக்கப் போதாது. தவணைக்கு நறுவிசாகக் கட்டாட்டி விழுகிற தொகையைத் தரவும் சீட்டுக்காறி ஒஞ்சுவாள். அவள்பாவியோட மல்லுக்கட்ட ஏலாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'கழிவு கூடினாலும் இந்த மாசம் சீட்டைக் கூறி எடுப்பமோ?' என்று புதுசாக ஒரு குழப்பம் மண்டையைப் போட்டு இடித்தது.

பொட்டக லாச்சிகளுக்குள் வைக்க அஞ்சி, கடுதாசிகள், சீலைத்துண்டு ஆவணங்களால் சுருட்டி முகட்டுக்குள் - கிடுகு ஓலைச் செத்தை இடுக்குகளில் சொருகி வைத்த காசு முடிச்சுகளில் ஒன்றைச் சொடுக்கி எடுத்த போது ......

'பொடுக்'கென்று ஒரு போட்டோப்படம் காலில் விழுந்தது.

'அவுக்' கென்று குனிந்து எடுத்து உற்றுப் பார்த்தாள்.

அஞ்செழுத்தும் அச்சொட்டாக இளையவள் போல் நல்ல வடிவான இளம் வாலிபி. களிசான், தொப்பி, புஸ்சேட், பட்டி மாட்டிய கம்பீரம்.

'எடி கோதாரி, தாரடி இந்த ஆண்மூச்சுக்காறி ...?'

'பாலசூரன்!' நாட்டுக் கூத்தில் அப்புக்குட்டியப்பா பயங்கர ராட்சதன் வேஷம் போட்ட காட்சி கண்ணில் திரை விழுத்திற்று.

அவர் பகிடியாகச் சொல்கிறது இவள் காதுள் இப்போ விண் கூவியது. சடலம் உப்பிப் போயிற்று.

'இந்தப் பொடிச்சியைத் தெரியுமோ?' என்று பிள்ளைகளிடம் அறிய வாய் உன்னியவள், இதைப் பற்றிப் பறைஞ்சால், தங்கட பாட்டில படிச்சுக் கொண்டிருக்கிற இதுகளின்ர மனமும் கெட்டுப்போம்' என்று தன்பாட்டில் மௌனித்து விட்டாள்.

படம் திருப்பிப் பார்த்த கண்களில், 'ஓர் இலட்சியத்திற்காக' என்று கிறுக்கி எழுதிக் கிடந்த ஒரு வசனம் அவளை உலுப்பிற்று.

எழுத்துக் கூட்டி வாசித்தாள். ஏதேதோ அர்த்தங்கள் கற்பனையில் முகிழ்த்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேகம் ' பச்சைத்தண்ணி ' யாய்ப் போய்விட்டது. கை கால் அசுப்பிரிவதாயில்லை. கண்களில் சுரந்த நீர் கடை மடல் வழியாக ஊனித்துக் கன்னைகளில் உப்பிற்று. வயிறு பதைக்கிறது. பயோதரங்கள் துடித்தன. மின்னிய கண்கள் இருண்ட பூமியில் கவிந்தன. மனசு குதறி விம்மிப் பீறிட்ட அழுகையை நெஞ்சுள் அடக்கிக் கொண்டாள்.

' ஆரும் அறியாத இந்தப் பெட்டையின்ர போட்டோ இஞ்ச ஏன் வருவான் ? அதென்ன லட்சியம் . . . ?'

அவலச் சிந்தனையில் ஒரு கலகத் திரை பஞ்சாக ஊஞ்சலாடிற்று.

வானத்தில் விமானங்கள் இடிமுழக்கம் போட்டு வட்டமிட்டன.

ஆமி ஊருக்குள் இறங்கி, துவக்குமுனைகளில் இள மட்டங்களை மடக்கி, ' ரக் ' குகளில் போட்டு வதைத்துப்போன அல்லோலம் நடந்து ஆறு மாதம் ஆகவில்லை. இந்த விமான உறுமல் மேலும் இவள் கமண்டலத்தில் குதறுகிறது.

' ஆமி குண்டு போடுகிறான் ' என்ற ஊர்க் களேபரம் காதில் விழுந்தது.

வேலி வாய்க்கால் ஒழுங்கை பிரித்து ஓடுகிற சனக்கூட்டம் தாண்டி ஓர் இளைஞர் பட்டாளம் துவக்குகள் சகிதம் ' மோட்டச்சயிக்கிள் ' களிலும் சிதறி ஓடும் கம்பீர்யத்தில் இவள் தன்னை மறந்து நின்றாள்.

திரைக் கீறு நீங்கிற்று. பூமி வெளிறிற்று.

வெயர்த்துக் கொட்டிப்போன தேகத்தை உசிப்பிக் கொண்டாள்.

'யூனிவேசிட்டியில படிக்கிற இவன் இந்தப் பெட்டையின்ர படத்தை ஏன் இஞ்ச கொண்டு வந்து வைச்சான். . . . ?'

மண்டை குழவிக் கூடாயிற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'இதை அவனிடம் எப்படி விடுத்துக் கேட்பது ?' என்ற அச்சமிருந்தும், 'இதுக்கு ஒரு முற்றுக் காணத்தான் வேணும்' என்று முடிவு செய்தாள்.

இதற்கான விரதம் இருந்த ஒரு வெள்ளிக்கிழமை.

"தம்பி இஞ்ச வா. உதில இரு" என்றாள்.

வாங்குப் பலகையில் குந்தினான்.

தன் குடும்ப விருத்தாந்தங்களை ஆதியோடந்தமாக மீட்டு மகனுக்கு ஒப்புவிக்க அரை மணி நேரமாயிற்று. ஆனால், அவன் எதையும் கரிசனையோடு கேட்பதாகக் காண்பிக்காத போதும், படத்தை எடுத்து நெற்றிக்கு நேரே காட்டி அதட்டிக் கேட்டாள் :

"தார் இந்தப் பெட்டை ?"

எடுத்தவாக்கில் பொட்டிட்டாற்போல் கேட்ட தோரணை, 'என்னோட கம்பசில படிக்கிற பெட்டை' என்று கூறும் துணிவை மறைத்து விரட்டிற்று.

"தமையனோட கம்பசிலதான் படிக்குது"

"பழக்கமோ ?"

"பழக்கமில்ல; தெரியும்"

"அப்ப, இந்தப் படம் எப்பிடி வந்துது ?"

"எனக்குத் தெரியாது"

கூசாமல் அவன் படுபொய் சொன்னவிதம் அவனுக்கே திகிலூட்டிற்று.

'இவன் பொய் சொல்லவும் துணிஞ்சிட்டான்' என்று இவள் சாடையாகக் கறுவியபோதும், அதை மிகைப்படுத்தாத வளாகப் பாசாங்காய்க் காண்பிக்கும் தோரணையில் ஏற இறங்கப் பார்த்து நெட்டுருவிய ஏக்க விழி, அவனை, 'பாவம், என் தாயை ஏமாற்றுகிறேனே' என்ற உணர்வினனாக்கிற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தம்பி, சொல்றனெண்டு கோவிக்காதை. கம்பசுக்குப் போனதுகளைப்பற்றி ஊர் உலகமெல்லாம் என்னென்னமோ கதைக்குது. நீ அப்பிடி நடக்காயெண்டு எனக்குத் தெரியும். 'உதுகள் அதுகள்ல' மினைக்கெடாமல் படிப்பாயெண்ட நம்பிக்கையிருக்கு. என்னைப்பற்றி நீ யோசிக்கத் தேவையில்லை. ரண்டு தங்கச்சிமார் இருக்குதுகளெண்ட பொறுப்போட படிச்சு அதுகளையும் முன்னுக்குக் கொண்டு வந்தால் காணும்"

அவன் மௌனம் அவளுக்கு ஒருவித பீதி – சோர்வை உண்டாக்கியபோதும், 'உன்னை நம்பியே இந்த வீடு இருக்கிறது' என்று தான் நம்புகிற பாவனையில் ஓர் இரங்கற் பார்வை அவன் மீது காந்த, அவன் சற்றுத் தடுமாறினான்.

பாசத்தைவிட வேறு அறியாத தாய்க்கு ஒரு போதும் பொய் சொல்லமுனையாத தன் போக்கு, தன்னிடம் ஏதோ ரூபத்தில் வந்து பொய் புனைய மாட்டி விபரீதமாக்கியிருக்கிறது என்று அவன் யூகித்தபோதும், அதற்காக அவன் பச்சாத்தாப்பட்டானே தவிர, தாயின் மனக் குமுறலை ஆற்றுவதற்கான கரிசனை அவன் கிருத்தியத்தில் இராதது அவனுக்கே வியப்பாயிற்று.

'ஓர் இலட்சியத்திற்காக' என்று அந்தப் படத்தில் குறித்தாளே அந்த ஒன்றிற்காக இப்படி ஓர் அந்தகாரச் சுழற்சி அவனை ஆட்கொண்டு அதுவே எல்லாமாய் ஆகிவிட்ட சூட்சுமம் இவனில் கருக்கொண்டது.

'உதுகள் அதுகள்ல' என்று தாய் அழுத்தி சொன்ன வாக்கின் அடக்கம் 'காதல் – இயக்கம்' இரண்டிலொன்றைக் குறித்தே என்று இவன் புரிந்து கொண்டானாயினும், ஒன்றையேனும் மறுத்துச் சொல்லத் தான் தயக்கம் காட்டிய தோரணை, தாய் தன்னில் வைத்த முழு விசுவாசத்தையே தகர்த்துவிட்டதாகப் புலனாக்கிற்று.

இணை பிரியாப் பந்தத்தில் இணையாத 'இலட்சியத் திற்காக' என்ற ஒரு வீம்புச் சுலோகம் உயிர் துறக்கவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வச்சிரம் பாய்ந்திருக்கையில் அப்படி வரித்ததற்காகவே ' சகல பந்தங்களையும் துறந்தாலென்ன ?' என்ற ஒரு கண நினைவில் கனத்த மனப்போர் அவனில் உக்கிரகித்திருக்க, தாய் விடுத்துக் கேட்டாள்.

" பழக்கமில்லாம ஒருத்தியத் தெரிய வாறதும், தெருஞ்சிருக் கிறவ உன்னோட பழக்கமில்லையெண்டுறதும் என்ன மாதிரியெண்டு விளங்கேல. அதை விளப்பமாச் சொல்லு ?"

"விரிவுரை செய்ய, இதென்ன யூனிவேசிட்டியே ?"

முகத்தில் அறைந்த சாடை குதர்க்கித்த மகனை அவள் சினக்காமல் சாந்தமாகப் பார்த்த போது, 'அப்பிடி ஊதாசினமாக அம்மாவுக்குப் பதில் சொல்லியிருக்கக் கூடாது' என்று வருந்தினானாயினும், 'விளப்பமாகச் சொல்லு' என்ற அவள் 'முட்டுப்பிடி' க்கு ஏதாவது ஈடு கொடுத்தேயாக வேண்டும் என்று யோசித்து அவன் சொன்னான்:

"கம்பசில ஒரு விரிவுரையாளரை எல்லா மாணவர்களும் அறிஞ்சிருப்பினம்; பழகவேணுமெண்டில்லை. அந்த முறையில்தான் தெரியும். சினேகமில்லை."

"இந்தச் சிடுக்குப் பெட்டை விரிவுரையாளரே ?"

"பாக்க அப்பிடித்தான் . . . . ஏன், பெட்டையள் விரிவுரையாளராயிருக்க முடியாதோ ? "

"இந்தப் பெட்டை இயக்ககாறர்மாதிரியல்லோ தெரியுது ?"

"இயக்ககாறரெண்டா என்ன இளப்பமே ?"

"நான் இளப்பமாச் சொல்லேல. உனக்குத் தெரியுமோ வெண்டுதான் கேக்கிறன்".

" அதென்னவோ எனக்குத் தெரியாது."

"அப்ப, இந்தப் பட்டம் எப்பிடி இந்த முகட்டுக்க வந்தது ?"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என்னைப் பிடிச்சுக் கேட்டா . . . ?"

"உன்னை அறியாமல் இந்தப் படம் இஞ்ச வராது."

அவனுக்குப் பொறுக்கவில்லை.

வாங்கிற்பலகையைத் தூக்கி எறிந்த வேகத்தோடு எழுந்து 'விறுக்'கென்று சயிக்கிள் எடுத்து அவன் வெளியேற அடுக்குப் பண்ண, 'இனி நீ கம்பசுக்குப் போனது காணும்' என்று கத்த ஆவேசித்த சன்னதம் அலகு பூட்டி நின்றது.

நெஞ்சு குதறி விம்மிய அழுகையை அடக்கிக் கேருந் தொனியில் தன்னாரவார சொல்கிறாள்:

"கம்பசுக்குப் போனதால புத்தி முத்திப் போச்சு. இனி எல்லாம் முடிஞ்சுது"

வெக்காளம் கெம்ப அவன் கேட்டான்:

"உங்களுக்குத்தான் புத்தி பேதலிச்சுப்போச்சு. இப்ப என்னத்தைக் கண்டு போட்டு உப்பிடியெல்லாம் அலம்பிறியள்?"

"அந்தப் பெட்டையப் பற்றிக் கேக்க உனக்கேன் உப்பிடிக் கோவம் வருது ?"

"சும்மா தேவையில்லாத கதையள் பறைஞ்சா ஆருக்குத் தான் கேந்தி வராது"

"ஒரு 'தொடசலும்' இல்லாம இந்தப் படம் இஞ்ச எப்பிடி வரும் ?"

"ஒரு வேளை தங்கச்சியவளவயோட பழக்கமோ . . . . ?"

"எடி பிள்ளையள்" என்று கூப்பிட்டான்.

'என்னணை ?' என்று கேட்கும் சாங்கத்தில் நின்ற பிள்ளைகளிடம் கேட்டாள் :

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இந்தப் பிள்ளைய உங்களுக்குத் தெரியுமோ ?"

'ஏதோ சில்லெடுப்பாக்கும் . . . . . '

'ஓம்' என்று இருவரும் தலையாட்டியபோது இவள் அசந்தேபோனாள்.

"இந்தப் படம் இறப்புக்குள்ள ஏன் வருவான் ?"

"நான்தான் வச்சிட்டு எடுத்து வைக்க மறந்து போனன்" என்றாள் மூத்தவள்.

தமையனைக் காப்பாற்றியதால் தாய்க்கு வஞ்சகம் செய்கிறேனோ என்று தன்னுள் சஞ்சலித்தாள்.

'என்ர அவசர புத்தி ஒண்டுமறியாததின்ர மனசைக் குழப்பியிட்டுதே' என்று தாய் வேதனை தாங்காது தவித்த போது கண்கள் கசிந்தன.

'இனி எந்தப் பிள்ளையிட்டயும் எதையும் விடுத்துக் கேட்டு மொக்கேனப்படக்கூடாது' என்று தன்னைக் கடிந்து கொண்டாள்.

"வட மாகாணம் கம்பஸ் வந்தால் யாழ்ப்பாணம் உருப்படாது" என்று சொன்னவர்களையும் தன்னாரவாரம் திட்டித் தீர்த்தாள்.

அவள் முகம் இப்போ முகை விரித்த மொட்டு இதழ்போல் சிலிர்த்தது.

'நாசமறுந்த ராட்சதன் அப்புக்குட்டியாலயும், பொறாமை பிடிச்ச ஊரவையாலும் என்ர பிள்ளையில ஐமிச்சப்பட்டேனே'

பொச்சம் தீர ஒரு பாட்டம் அப்புக்குட்டியையும் ஊரையும் முனிந்து பெருமூச்சு விட்டாள்.

போறணையில் பாண் எடுத்து வாடிக்கைக் கடைகளுக்கு விற்றுக் கொண்டிருந்த இவள் பேரன், 'திடீ' ரென்று தோளில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துவக்கோடு செக்கல் நேரம் குச்சொழுங்கையால் மோட்டச்சயிக்கிளில் போன வேகத்தில் ஊர் மறுபடி கிலி கொண்டது.

யாழ்ப்பாண வட்டாரத்தில் பதினாறு பெருங்கிராமங் களைச் சுற்றி வளைத்து, சும்மா கிடந்த முழு மனுமாஞ்சாதி களையும் பயங்கரவாதிகளாக்கி அள்ளி 'றக்' குகளில் போட்டு வதை முகாம்களுள் சித்திரவதை செய்த அரச மிருக ராணுவம் ஊருக்குள் மறுபாட்டம் இறங்கி வேட்டையாட எத்தனிக்கிறதோ என்று இவள் ஏங்கினாள்.

'இந்தப் பிள்ளை எந்த அத்திவாரத்தைப் போட்டு ஆமியோட மோத வெளிக்கிட்டான் . . . . . எடுத்தவாகில ஊருக்கும் தெரியாமக் கொடுக்குக் கட்டினா அழிவுதானே வரும்?'

இப்படியான பேச்சுக்கூட 'தவறணைக் குடிகாறரின் விடிஞ்ச பேச்சு' என்று ஒதுக்கினாலும், அதில் ஒரு சரியான அர்த்தம் இருப்பதாகவே இவளுக்குப் பட்டது.

அன்று இரவு இவள் நித்திரை இல்லை. அந்தப் பேரனே மனசில் - கண்ணில் - சிந்தனையில் வலை பின்னிச் சுழன்றடித்தான்.

கரையோர வான வெளியில் 'ஹெலிக்கொப்டர்'கள் போல் மீன் கொத்தி வல்லூறுகள் குஞ்சுகளை இறாஞ்ச வட்டமிடுகிறதை, "ஐயோ, ஆமி பிளேனில நிண்டு குண்டு போடுறான்"—என்று கிராமம் குய்யோமுறையோக் கூச்சலில் அல்லோலகல்லோலப்படுவதை இவளும் பிள்ளைகளும் கேலியாகக் கருதி மேலே பார்க்க, உண்மையாக ஹெலிக்கொப்டர்களே குண்டு வெடிகளைத் தீர்த்துக் கொண்டிருந்தன.

பதுங்கு குழிகளுக்குள் ஊரே அடங்கிவிட்டது.

இவள் மனம், வாக்கு, கிரிகை, சிந்தனை ஒடுங்கி, "அய்யோ கம்பசுக்குப் போன என்ர பிள்ளை இன்னும் வந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேரவில்லையே ?" என்று தொண்டை வறளக் கேரி ஒப்பாரி வைத்துக் கெந்தகித்துக் கொண்டிருந்த போது . . . . .

"கம்பஸ் பெட்டையொண்டைச் சுட்டுப் போட்டங்கள்" என்று சடுதியாக ஒரு கதை பரவி இவள் காதில் நச்சிரமாய் விழுந்தது.

சரீரித்து விறைத்த மண்டை கூழ் முட்டையாக உலும்பிச் சிலும்பிற்று.

நிலமதிருமாப் போல் வெடிகுண்டுகள் வானமடங்க நெருப்பாய்ச் சீறி, மின்மினிப் பூச்சிகளாக இவள் மனக் கண்ணில் மொய்க்க . . . . . .

'விறுக்' கென்று உன்னி எழுந்து ஆவேசம் பிடித்தவளாக எகிறி நடந்து, செத்தை பிரித்து அந்தப் 'பெட்டை' படத்தை ஆவலோடு தேடினாள்.

புகை கக்கி நாறும் ஒரு துவக்கு . . . . . .

மண்டைக்குள் எரிமலை வெடித்தது.

மின்சாரித்த கண்கள் 'திக்' கிட்டு மின்னின.

சடலத்தில் ஊனம் கும்ம . . . . . .

நெஞ்சில், தொண்டையில், கமண்டலத்தில் ஓங்கி ஓங்கி அடித்து, இந்தத் தாய் 'ஓ' வென்று கதறினாள் :

" ஆ . . . . . . என்ர ராசாத்தி . . . . . . . . ! "

**தினமணி — ஏப்ரல் 1994**

('ஓர் இலட்சியத்திற்காக' என்ற தலைப்பில் வெளியானது.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 9. போர்வை

இவன் தற்காலத்து நாகரிகப் பையன். ஆனால், யாழ்ப்பாண வைதீகப் பிடிப்பு இறுக்கம். சமய ஆசாரங்கள், விளையாட்டு விநோதங்கள், கோயில் திருவிழாக்கள் என்று நிகழ்ந்தால் நாட்டுப் பிரச்சினை தீர்ந்துவிட்டதாக இவன் கண்ட அரசியல் ஞானம். இளம் சந்ததியான இவனுக்கும் பழம் முத்துப் பாட்டியே ஞானக்குரு.

'இந்தா ரண்டரையாகுது ....'

சுரேஷ் மனசுள் லேசான சீத சுகம் நீவிற்று. சோர்ந்த உடல் சுரீரித்து, சடுதி உற்சாகம் கொண்டது. இடது கை விளிம்புச் சட்டை கிளப்பி 'வார்ச்' பார்க்க, முகத்தில் குதூகல மையல் பம்மிய ஆனந்த பரவசம்.

'இன்னும் அஞ்சு நிமிசம் இருக்கு'

'சேவையர் சூட்' அவன் கையில் அவசரகோலமாகியது. 'ஹங்கரில்' கொழுவினான். 'பாத்றூம் பேஷன் பைப்' திறந்து சாடையாக முகம் அலம்பி, துவாய் எடுத்துப் பறதியாகத் துடைத்த பின், 'சிவில் சேட்', 'ஜக்கற்', 'சூஷ்' மாட்டினான்.

'இனி வெளிக்கிடுவம்'

அடுக்குப் பண்ணை, 'பத்ரோன்' இவன் எதிரே ருத்திரசர்மன் மாதிரி 'றெஸ்ரோறன்' சாலைக்கு வெளியே நிற்கிறான்.

அவன் முகத்தில் மலர்ச்சி ததும்பும் சிரிப்புக் கவியவில்லை. கண்களில் அக்கினி கக்கிற மின்னல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாந்தமான முகபாவம் தேங்கிய போதும் 'விறுமசத்தி' சாடை பத்ரோன் முகம் 'சப்'பென்று இருக்கிறது.

தன்னுள் சுரேஷ் 'கறுமுறு'த்தான் :

'உவன் பத்ரோன் நெடுகலும் உப்பிடித்தான்'

பரவச நிலை குலைந்து நிற்கையில் நெஞ்சு நீவி ஒரு பெருமூச்சு, இவனை மீறிக் குதறிப் போயிற்று.

'வெளிக்கிட்டாச்சு, மெல்லமா நடையைக் கட்டுவம்'

மனசு கிளர்த்திற்று : ஓர் இடறல்.

'பொன்ஸ்வா' சொல்லுவமா, விடுவமா?' புருவம் நெருட, கண நேர யோசினை. பத்ரோன் பார்வை 'இதமாக'த் தோணுவதாயில்லை.

'வீண் முகஸ்துதியாக நினைப்பான் . . . . . ?'

மனசு தராசு பிடித்தது.

யோசித்தான்.

'அவன் 'பொன்ஸ்வா' சொல்லாட்டியும் பறவாயில்லை. நாம சொல்லுவம்'.

எழுந்தமான சமாளிப்பு. தன்னுள் திருப்தியாகி, உடம்பு நசியச் சிலுப்பி, பத்ரோனைக் கடந்தான்

"பொன்ஸ்வா மிஸ்ஸூ"

கட் செவியன் போல் சுரேஷ் பதிலுக்காகக் காதைத் தீட்டினான். தலை திருப்பாமல் சிறு கடைக்கண் எறி.

பத்ரோன் வாயில் பதிலேதும் இல்லை.

அவன் கைப் புடங்கைத் திருகி ஊசி முனைப்பாக 'உருளோசை'ப் பார்க்க, இவனும் தன் கடிகாரம் பார்த்தான்.

மணி, ரண்டரை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'அறுதலன் இனி முறையான்'

கண்டம் ஒன்று தப்பினதான ஆசுவாசம்.

அடுத்து, 'மெத்ரோ' வைப் பிடிக்கிற ஆவேசம்.

வெளியேறி வேகமாக நடந்தான்.

சாலையோரங்களில் வித விதமான பட்சணங்கள்.

வாசனை நாசியை நெருடியது. யாழ்ப்பாணத்தில் முத்துப்பாட்டி பலகாரம் சுட்டு விற்கிற கொட்டில் நெடி மூக்கில் அம்மிற்று.

'உந்தப் பிரச்சனையளுக்க முத்துப்பாட்டி இம்மட்டைக்கு . . . . . . '

அவலமாக யோசிக்க மனசு அழுந்தி மறுத்தது.

பாட்டி உருவம் கூனல் விழுந்து ஒரு கனவுபோல் பூஞ்சாணமாகக் கண நேரம் மனக் கண்ணில் அலைகிறது. வெண் துகில் மொட்டாக்கு.

பாட்டி ஊர்க் குமர்களைக் 'கரை' சேர்க்கிறதில் விண்ணி.

அது ஊர் பூராவும் தெரியும்.

'நோர்வேயில மூத்தக்கா புருஷன் புள்ளையோட சீவிக்கிறதே அந்த ஆச்சியாலதான் . . . .'

ஊனிய கண் கசிவு வெளிச்சத்தில் கும்மி மினுங்கிற்று.

'பாட்டி இப்ப இருப்பாவோ . . . . ?'

ஊமிச்சமாக இருக்கிறது.

'தங்கச்சிமார் ரண்டு பேரும் ஆளையாள் மாறிக் கடிதம் போடுவாளவ. கன நாளாக் கடிதமே வாறேல்ல – என்ன சங்கதி. . .?'

தேகமடங்கக் குருதி கொதித்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன வாரம் சமாதானப் பேச்சுவார்த்தை நடந்ததாகக் கேள்வி. இது கடை முதலாளிகளுக்கும் நடுக்கமெடுத்திருக் கிறதை இவனும் கவனித்து வருகிறான். பிறகு 'நியூஸ் பேப்பர்' பார்க்கிற விருப்பம் இவனுக்கும் இல்லை.

'இனி இயக்கக்காறருக்குக் காசு குடுக்கிறது பிசகு'

செய்தி காதில் விழுந்தபின் மனசு சொல்லுது :

'சமாதானமாப் போறெண்டா, பேந்தேன் காசு குடுப்பான் ......?'

ஒரே மனக் குடைச்சல்.

ஆனால், ஒரு வில்லங்கம்.

'பிரச்சனை தீந்தால் வெளிநாடுகளில உள்ள அகதியளத் திருப்பி அனுப்புவாங்கள்தானே ?'

இவனும் அரசியல் தஞ்ச அகதி.

கடும் யோசினை.

உமிழ் நீர் தொண்டைக் குழியுள் 'முடுக்' கிட்டது.

'இலங்கைக்குப் போய் இனி என்னெண்டு சீவிக்கிறது ?'

சாடையாக மூளை நரம்பில் வலி எடுத்தது.

சமாளித்து 'அப்பாட்மெண்ட்' வந்தாயிற்று.

'கடிதம் கிடிதம் வந்திருக்கும் ......?'

'லெற்றர்ப் பொக்ஸ்' திறக்க, பறதியாகப் 'பொக்கற்' றுள் 'கீ'யைத் தடவுகிறபோதுதான், 'றூம் மேட்' ரவி 'கீ'யும் எடுத்தது நினைவில் வருகிறது.

'மறதிக்குச் செருப்பால் அடிக்க வேணும். அறுப்பாரோட ஆத்திரம் அவசரத்துக்கு ஒண்டும் செய்யேலாது. இன்னொரு 'கீ' சரிக்கட்ட வேணும்'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'புறுபுறு' ப்பு ஓயவில்லை. 'பொக்ஸமன்' கை விட்டு ஒரு பாட்டம் தடவினான்.

'கடிதங்கள் இருக்குமாப் போல கிடக்கு . . . . . .?'

இரு விரல் கோதி மெல்ல நுழைத்து, தடக்குப்பட்டதை இடுக்கி எடுத்துப் பார்த்தான்.

'அசெடிக் லைற்றர்', ஒரு 'வெடிங்காட்', 'பாங் ஸ்ரேற்மன்'.

கொஞ்ச நாளாகக் காலில் சிறு அதைப்பு. ஒரு சொறி புண் கசிந்து படர்ந்து வருகிறது. இரவில் சாதுவான 'வின் வின்' வலிப்பு. இருந்திருந்து ஊசி குத்துமாப்போல் கண்டி நோகுது. 'சயிக்கிள்'ல 'கம்பக'க்குப் போகேக்க, கொக்குவில் பாட்டாளிப் பாவலன் சந்தியில், ஆமிக்காறன் வாறானெண்ட பறதியில் ஆள் தடக்கிக் கால் இடறி 'பெடல்' கட்டை மொழியில் அடித்தது. ஒட்டகப்புலத்தான் எண்ணையோட அப்ப சுகமானது.

'அந்தப் பழைய நோவோ . . . . . . .?'

'செக்றூட்டி சோஷல் காட் டேற் நினியூ' பண்ணாமல் 'ஹொஸ்பிற்றல்' ஏற்காது. 'பிறைவேற்' றில காட்டினால் ஒரு மாத சம்பளம் பத்தாது. 'கொமேட்டு'க்குப் போறதானால் லீவு எடுக்க ஏலாது. மூண்டு நாளுக்கு மேல லீவு போட்டால்தான் ஒரு கிழமை மெடிக்கல் தருவான். நசல் பிடிச்ச . . . . .

தஞ்சங் குடுத்த நாடு. திட்டவும் மனசு ஏவுதில்லை.

பசிக்களை. முகம் நெற்றி எங்கும் நெய்யாய்ச் சனித்து மினுங்கிற்று. முகம் உரசிக் கண்ணைச் சோணைகளை அழுத்தினான்.

சப்பாத்துகள் கழற்றி நிமிர, மேசையில் ஒரு 'சிலோன் லெற்றர்' நலங்கிக் கிடக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேகம் சுரீரித்தது. கன நாளாகக் கடிதம் காணாத தவண்டை பரவசமான அக்களிப்பு. உற்றுப்பார்த்தான்.

'றூம் மேட்' ரவி பெயர்.

தொட்ட நத்தைச் சதை சாடை முகம் சூம்பிற்று.

'தான் ஏதோ பெரிய 'பிறைமினிஸ்ர' றெண்டு ரவியனுக்கு எண்ணம். தன்ர கடிதத்தை நான் பாக்கேனெண்டு தெரிஞ்சும், வேணுமெண்டு மேசையில வச்சிட்டுப் போயிருக்கிறான். பறையிறது முற்போக்கு; செய்யிறது பிற்போக்கு . . . . . .'

வெக்காளம் ஆவேசித்து மண்டையுள் புரைந்தது.

கன நாளாக் கடிதம் எழுதாத தங்கச்சிமாரில் சோபை இழந்த ஓர் ஆத்திரம் அருக்கூட்டிற்று.

நாட்டுப் பிரச்சனை - வீட்டுச் சங்கதி அறியவும் முடிவதில்லை.

'பாவம், அதுகள்'

மனசு 'திக்திக்' கென்று அடிக்கிறது.

'உவன் ரவியன்ர கடிதத்தில ஏதும் இருக்கும், பாத்திட்டு வைப்பமோ ?'

விபரீத ஆசை மனசைக் கிளர்த்திச் சலனப் பட்டது.

'எதெண்டாலும் ஒரு ஆளுக்கு வந்த கடிதம் மற்ற ஆள் பாக்கப்படாது'

மனம் அடித்துச் சொல்லி விட்டது.

அசமந்தமாக எழுந்த ஆசை. அடக்கிக்கொண்டான்.

சாப்பாடு சமைத்து வைத்த சிலமனைக் குசினியில் காணவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'தனக்குமட்டாச் சரிக்கட்டித் திண்டிட்டு வெளிக்கிட்டிட்டான். சரியான சுயநலக்காறன். உவனோட பங்குப்பிணைப்புச் சரிவராது'

எரிச்சல் மனசுள் தன்னாரவாரம் புகைந்தது.

'பிறிஜ் சட்டர்' இழுத்துத் திறக்க, உள் தட்டுக் குலுங்கிற்று. அந்தவாகில் காய்கறி, பழவகை, மீன், இறைச்சி, சாப்பாடு கீழே கொட்டுண்ட பின்பே, தனக்குப் போட்டு வைத்த சாப்பாட்டுக் கோப்பை சோறும் கறியுமாகக் கவிழ்ந்திருப்பதைக் கவனித்தான்.

'ஆஞ்சோஞ்சு பாராதவன் கருமம் தான் சாகக் கடவன்.'

பழமொழி நினைவு வர, மனசு நொந்தது.

கண் சாடையாகக் கலங்கி மினுங்கிற்று.

கொட்டுண்டு சிதறியதைப் பக்குவமாக எடுத்துப் பீங்கானில் போட்ட பிறகே சங்கதி வெளித்தது.

'ஒரு சிறங்கை சோறும் தேறாது'

இந்த அவதிக்குள் வெளியே மணி 'ணிங்' கிட்டது.

கதவு குழிப் பேழையூடாகப் பார்த்தான்.

இயக்கக்காறர் போல் நாலு பேர். இவனொத்த வயசுக்காறர். மெத்த அவதிப்படுகிறதாகத் தெரிகிறது. முன் பின் கண்டதில்லை.

'அறை மாறி, ஆள் மாறி, அல்லது ரவியத்தேடி வந்திருக்கலாம் . . . . . .'

கிலேசம், நெஞ்சுள் கிலுக்கட்டி அடித்தது.

கதவு திறந்து உள் விடாமல் விசாரித்தான்.

தங்களைத் தேடியல்ல, தாங்கள் தங்கியுள்ள இந்த 'அப்பாட்மெண்' டுக்கே வந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

ஓடி முழிசலானான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயக்கக்காறர்தான். எந்த இயக்கமென்று தெரிவதாயில்லை. கை கால் ஓடவில்லை.

'குடுத்தால் பழி; குடுக்காட்டி வில்லங்கம்; வாய் துறந்தால் கொழுவல் . . . . . .'

இவன் அழைக்கமுன் அவர்கள் 'டக்' கென்று உள்ளே வந்தபோதுதான் விஷயம் வெளித்தது.

இவே 'தேவசேவை'க்காறர். கூட, ஒரு மொட்டாக்குச் சிஸ்டர். மங்களுக்குள் இவ அவன் கண்ணில் செப்பமாகத் தெரியவில்லை.

இப்பதான் ஆக முழிசாட்டமாகியது.

'இவே வேற வேல வெட்டி இல்லாமல் வந்த நாடுகளியையும் தண்டிக் கொண்டு திரியினம். கறுமம் என்ன சவத்துக்கு உள்ள விட்டன்?'

ரகஸ்யமான பல தில்லுமுல்லுகள் அடிக்கடி திமிலோகப்படுவதை இவன் அறிவான். 'பரலோக பிதா' மீட்டதாக இல்லை.

'அதில இது சேத்தி; அல்லது . . . . . ?'

சினப்பு முகம் காட்டாமல் வந்தவர்கள் போலவே 'நைஸாக'ச் சிரித்தான். தவற விட்ட எதையோ தேடுவதுபோல் பாசாங்கு செய்தான்.

தேவ தொண்டர்களில் ஒருவர் மேரை மரியாதையாக, 'விசுவாசத்தின் ரட்சண்யம்' சஞ்சிகையைக் காட்டிக் கேட்டார் ;

"இதுகளை நீங்கள் படிக்கிறதில்லையோ ?"

இவன் முகம் அருக்குளித்தது.

"நான் சைவம். 'பைபிள்'ல 'இன்றஸ்ற்' இல்லை. படிக்கிறதுமில்லை."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'வெறும் பேயன்' என்று தங்களுக்குள் மட்டுக் கட்டிக் கொண்டனர்.

சிஸ்டர் ஆகவும் மனம் பொரிந்து கொண்டா.

"பரவாயில்லை. வேதாகமங்கள் சனங்களின் ரட்சிப்புக்குத் தொண்டு செய்கின்றன. நீங்களும் இதில பங்கு பற்றலாம் தானே ? இதை ஒருக்கா வாசித்துப் பாருங்கோ "

'தேவ நம்பிக்கையோட அப்பமிட்ட சனங்களும் இலங்கையில ஆமியால அழிஞ்சதுதானே கண்ட பலன் ?'

கணை தொடுக்க நினைத்தான். 'ரவி நிண்டா வடிவாகக் கதைப்பான்' என்று வாய் திறவாமல் இருந்தான்.

ரட்சணியத்தை நீட்டியவர் கை தவண்டையடித்தது.

"குறை நினையாதையுங்கோ. இப்ப வசதியில்லை"

இவன் தட்டிக்கழிக்கிறதை மற்றவர் கவனித்து, மெல்ல எழுந்தார்.

"இதை வச்சிருங்கோ. இப்ப வசதியில்லாட்டி, பிறகு தாருங்கோ, வாறம்"

இவன் இதுக்கு மறுமொழி கூறத் தெரியாமல் முழிசுகிறதை ஒரு 'பிடி' யாக்கிக் கொண்டார், அவர்.

சிஸ்டர் அழுங்குப் பிடியில் நின்றா :

"எப்ப வேண்டாலும் வசதி இருக்கிற நேரம் காசு தாருங்கோ. காசு பெரிசல்ல, மனிசர்தான் பெரிசு. இது வேத வாக்கியம். இது உங்களுக்கும் எங்களுக்கும் இடையில் தொடர்பை உண்டாக்கியிருக்கிறது. இதுக்காகத் தேவனுக்கு ஸ்தோத்திரம் சொல்லவேணும்"

இவனுக்கு இந்த வாக்கியம் அர்த்தப்படவில்லை.

மண்டை வலிக்குமாப் போல் இருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'இதென்ன தேவையில்லாத செல்லெடுப்பு'

வேத ரட்சணியத்தை அவன் கையில் அழுத்தி அக்களித்துச் சிரித்தார்.

'இது பெரிய உத்தரிப்பு; சொல்லித் தப்பேலாமக்கிடக்கு'

வாழைப்பழத்தில் ஊசி ஏற்றின சாடை வேதாகமம் கொடுத்த சாதனையை அடக்கமாகப் பாவனை செய்து, 'எப்பிடியும் புத்தகம் வேண்ட வைச்சிட்டம் தானே' என்ற சிறு இடும்போடு அவர்கள் வெளியேறியதும் நேரத்தைப் பார்த்தான்.

'சிவ சிவா, நாலு மணியாச்சு'

பீங்கானில் வைத்த சோற்றை 'வதக்வதக்'கென்று சாப்பிட்டான். உண்ட களை தேகத்தில் ஆயாசமாகவே 'செற்றி'யில் கால் குத்துண இருந்தான்.

'ரவி வருமட்டும் ரி.வி. பாத்திட்டு ஆறுக்குறங்குவம்'

கிடந்த 'சனல்' முழுக்கத் தட்டிப் பார்க்க, அப்பதான் சனல் ரண்டில் 'லம்படா' முடிந்து எழுத்து ஓடிக்கொண்டிருக்கிறது.

'பறப்பாரால பிரேசியளின்ர நல்ல ஒரு பாட்டுப் 'புரோக்கிராமை' விட்டிட்டன்'.

அறை ஏகலும் கொஞ்சம் மங்கல் தாவிற்று.

ரவி பேரில் வந்த கடிதத்தை மேஜையில் பார்க்க, தங்கச்சிமாரில் வேதனையான ஆத்திரம் கிளர்த்திற்று.

'என்ன திகதியில் 'சீல்' விழுந்திருக்கு?'

விழி குத்தி உற்றுப் பார்த்தான்.

10.12.1989. தெல்லிப்பளை.

'ஊரில பிரச்சினையெண்டா, ரவிக்குக் கடிதம் வந்திருக்காது.' இதுகள்' போட்டிருக்கலாம் தானே'?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனசு கிளர்ந்து அழுந்த, கண் சுரந்து நீர் பொசிந்து மினுங்கிற்று. சுரந்த நீர் கடைக்கண்ணில் கீற்றுக் கோடுகளாக வழிந்தது.

'எல்லாரும் துவக்குகளோட நிண்டா அதுகள்தான் என்ன செய்யும்?'

ஆறுக்கு இருபது நிமிஷம்.

'இனி வெளிக்கிடுவம்' என்று அடுக்குப் பண்ண, 'ரெலிபோன்' அடிக்கிறது.

பேசிமுடிய, முகத்தில் சடுதியான ஒரு சோக வாட்டம்.

நோர்வேயிலிருந்து அத்தார் இவன் தங்கச்சிமார் பற்றிக் கதைத்திருக்கிறார்.

'எங்கட நாட்டில பெண்ணாய்ப் பிறக்கிறதை விட, பெண்ணோட கூடிப் பிறக்கிறவன்தான் கறுமக்காறன்'

கன நாளாக இவனுள் மறுகிக் கொண்டிருந்த ஒரு 'பிளான்', 'போன்கோல்' வந்த பிறகு மனசைப் பிரளயப்படுத்திற்று.

'ரவியிட்ட நேரடியா எப்படி வாய் விடுகிறது?'

கன நாள் தருணம் பார்த்து வருகிறான். ஒரு நாளும் வாய்க்க வில்லை. இன்று மனசு, 'கேள் கேள்' என்று அடித்துக் கொள்கிறது

நெஞ்சு விம்ம ஒரு பெருமூச்சு நீவி எழுந்தது.

ஒரு சங்கடம்.

'ரவி ஒரே தங்கச்சிக்காரன். சகோதரி ஒண்டுக்குக் கேக்க, அவன் தன்ர தங்கச்சிக்கு என்னைக் கேட்டு, அது 'மாத்துச்சடங்கில' வந்து நிண்டா....?'

வயசு மையல் சூல் கொள்ளினும், அச்சம் குடி கொண்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'ஒரு மாத்துக் கலியாணம் ரண்டு குடும்பத்தைச் சீரழிக்கும்' என்று முத்துப்பாட்டி நெடுகலும் சொல்லுறவ.

இவன் தற்காலத்து நாகரிகப் பையன். ஆனால், யாழ்ப்பாண வைதீகப் பிடிப்பு இறுக்கம். சமய ஆசாரங்கள், விளையாட்டு விநோதங்கள், கோயில் திருவிழாக்கள் என்று நிகழ்ந்தால் நாட்டுப் பிரச்சினை தீர்ந்துவிட்டதாக இவன் கண்ட அரசியல் ஞானம். இளம் சந்ததியான இவனுக்கும் பழம் முத்துப்பாட்டியே ஞானக்குரு.

கலியாணம் கட்டவும் ஆசைதான்.

'முத்துப்பாட்டிக்கு எழுதிக் கேட்டு, அவ, 'சரி' யெண்டா, வாய் வைப்பம்'.

ஆதங்கத்தோடு எழுந்தான்.

'மோசமான நாட்டுப் பிரச்சினையளுக்க முத்துப்பாட்டி என்ன ஆனாவோ?'

நெஞ்சு குமுறி, மனசு நெட்டுருவிற்று.

*

'மெத்ரோ' விட்டிறங்கி 'றெஸ்ரோறன்' வாசல் ஏறும்வரை மனசு தங்கச்சிமாரில் மூழ்கியதால் சேர்வீஸ் காறரையோ சிற்றூழியர்களையோ அவதானிக்கவில்லை என்பதை, 'பத்ரோன்' இவன் எதிரே நின்று 'றிச்வார்ச்' பார்த்தபோதுதான் உணர்ந்தான்.

புது 'நியூஸ்' ஒன்று அடிபட்டது.

ஒழுங்கு தவறி, நேரம் பிந்தி, வேலை செய்கிறவர்கள் பட்டியலில் இவன் பெயர் முதலிடம் பெற்றிருக்கிறது.

ஆசை பூர்த்த ஆரவார மகிழ்ச்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'மூன்டு வருஷ சேர்வீசுக்கு, ரண்டு வருசச் 'சோமாஸ்' கிடைக்கும்'

அச்சா. வலு புளுகம். கோயிலுக்கும் நேர்த்தி வைத்தான்.:

'கடவுளே, எப்பிடியாவது 'பத்ரோன்' என்னை வேலையால நிப்பாட்ட வேணும்'.

இலங்கையிலே கடவுளிடம் அபயங் கேட்டவர்களில் பெரும்பாலும் ஒருவரும் தப்பவில்லை என்று இவன் அறிவான். என்றாலும், பய தோஷம் முழு நம்பிக்கையோடு மன்றாடியும் இவன் எதிர்பார்ப்புக்கு மாறாக, பத்ரோனின் மறு அறிவிப்பு, 'கிசுகிசு' வென்று பரவிவிட்டது.

'சுரேஷுக்கு ஜனவரியோடு சம்பளம் கூட்டியிருக்கிறது'.

இது ஆவணி. ஜனவரிக்கு ஐந்து மாசம் பொறுக்க வேணும்.

'மாதம் இருநூறு 'பிறாங்' கூடுகிற சம்பளம் வருஷத்தில் எவ்வளவு தேறும் ?'

மனசுள் கணக்கிட்டான்.

'இலங்கைக் காசு ஆயிரத்துக்கு மேல வரும். பேய்க் காசு. இனி அல்லத்தட்டாமல் ஒழுங்கா வேலைக்குப் போறதுதான்'.

தீர்மானம் எடுத்தாயிற்று.

'சோமாஸ்' எடுத்தால் பத்ரோனுக்குள்ள நட்ட நயம் என்னைப் பாதிக்காதபோது, எனது சம்பள உயர்வு எந்த வகையிலும் எனக்கே 'லாபம்'.

மார்க்ஸின் 'கூலி விலை லாபம்' நூலோ, சுரண்டல் முறையோ படிக்கவில்லை என்ற கவலை இவனுக்குக் கிடையாது. எனினும், ஒரு கணித மேதைத் தனத்தில் இறுமாந்து கொண்டு வெளியே தலை நீட்டினான்.

பத்ரோன் முகம் மலர்ந்து வரவேற்கிற சாடை சிரித்தபோது, இவன் வியந்தேபோனான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பொன்ஸ்வா மிஸ்ஸூ..."

'தான் பத்ரோன், பெரிய கோடீஸ்வரன் என்ற அகம்பாவமே இல்லாமல் எப்பவும் 'சிம்பிளா' கப் பழகுவதை இப்பதான் கண்டுபிடிக்க முடிஞ்சுது'.

தனக்குள் சுரேஷ் 'லொஜிக்' கலாக யோசிக்கலானான்.

இதுகளைத் தெரியாமல் 'முதலாளியள் சுரண்டுறவங்' களெண்டு கம்யூனிஸ்ட்காறர் போல் எடுத்ததுக்கெல்லாம் ஓயாமல் 'நொட்டை' சொல்லுகிற ரவியைப் 'பிடித்துத்தின்கிற' ஆத்திரம் வந்தது.

தங்கச்சிமாரை நினைக்க ரவி மீது எழுந்த வெறுப்பு அடங்கிற்று.

'எண்டாலும் சீக்கிரம் ரவிக்குப் பதிலடி குடுக்க வேணும்' என்ற அங்கலாய்ப்பு அருக்கூட்டிற்று.

*

வேலை முடிந்து சுரேஷ் 'ஆததுப்பறந்து' வந்தான்.

'சோத்தி' க்கு வெளியே ஏக சோட்டுக்குக் காடையர் கூட்டம் – குருவித்தலையன்கள்.

இவன் சந்தேகம் குல்லிட்டது.

'எங்கையெண்டாலும் மறைஞ்சு நிண்டிட்டு, உவங்கள் போன பிறகு போவமோ ?'

'வார்ச்' சைப் பார்க்க, மணி 'பன்ரண்டே முக்கால்' கடக்கிறது – நடுச் சாமம் தாண்டுது.

'ஒரு மணியோட 'மெத்ரோ' ஓட்டமும் இல்லை'.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைக்க, முகம் சூம்பி விகாரித்துக்கொண்டது. பதட்டம் மேனியடங்கப் புரைந்தது.

அவங்கள் 'கலைஞ்ச' பாடாயில்லை; இவனும் 'போற' பாடாயில்லை; யோசிக்க நேரமும் இல்லை.

புத்தி பேதலித்துக் கொண்டது.

'கடவுளே காப்பாத்து' என்று மனசுள் ஒரு சாஷ்டாங்கம்.

திரும்பிப் பார்த்தான். ஒரு 'சனத்தை' யும் காணவில்லை.

'எந்த ஆறுதலுமில்லை' என்று வள்ளீசாகத் தெரிந்த பின், மனம் பதகளித்து ஆசுவாசப்பட்டது.

வலுவில் சப்பாத்தைக் கழற்றி, 'ஜக்கற் பொக்கற்' றுள் கிடந்த 'விஸா' வை எடுத்துக் கால் மேசுக்குள் செருகினான்.

'முண்டினாங்களெண்டா, இதைக் குடுப்பம்'

பத்துப் பதினைஞ்சு 'பிறாங்' கை 'றடி' யாக எடுத்து வைத்துக் கொண்டு எட்டி நாலு கவடு வைக்க, மின்னலடித்த சாடை ஒரு குருவித்தலையன் குறுக்கே பாய்ந்து 'விறுக்' கென்று சடுதியாக எதையோ உருவி எடுத்தான்.

கிறிஸ் கத்தி!

'ஐயோ, நான் இண்டைக்குச் செத்தேன்'

தேகம் 'பச்சதண்ணி' யாகிவிட்டது. இவன் அங்கலாய்த்து முழுசி நிற்கிற அவல கோலத்தை வாசியாக்கி, காடையன்கள், 'பொன்ஸ்வா மிஸ்ஸூ, சவா?' என்று நகிடமாகக் கேட்டு வாய் மூடவில்லை, இவன், 'அவுக்' கென்று 'பொக்கற்' றுள் வைத்த கை சில்லறைப் 'பிறாங்' முழுவதையும் அள்ளிக் கொடுத்த பின்தான் குருவித்தலையன் இவனைக் கை விட்டான்.

'எப்படி' றூம்' வந்து சேர்ந்தேன்?'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வியப்போடு கால் மேஸ் கழற்றிப் பார்த்த போது நடுங்கிற கையில் 'விஸா' நலங்கிப் போயிருந்தது.

'நடந்த சங்கதி தெரிஞ்சால் ரவி எக்கணம் கேலி பண்ணிச் சிரிப்பான் . . . . . '

அவனுக்குப் பறையாமல் இவன் படுத்து விட்டான். கண்டம் ஒன்று நீங்கியதான நிர் விசாரணத்தோடு உணவு கொள்ளாத சடலமானான்.

ரா முழுக்க அவன் கனவில் காடையர்களான குருவித்தலையன்களே மோசமாக அட்டகாசித்திருக்கின்கள்.

உடம்பு நொய்து போய் விட்டது.

விடியக் கண் விழித்தபிறகும் 'பெட்' டில் தீய்ந்து போய்க் கிடந்ததை ரவி கவனித்தான்.

"என்ன சங்கதி, உன் `பாட்டில முழுசிக் கொண்டு கிடக்கிறாய்; ஏதுங் கரைச்சல் கிரைச்சலோ ?"

அவன் கேட்ட பிறகே தான் 'தப்பியொட்டி' அந்த சம்பவம் மிகப் பயங்கரமாக இவனுக்குப் புலர்ந்தது.

காட்டிக் கொள்ளவில்லை.

"அப்பிடி ஒண்டுமில்லை."

'சமாளிக்கிறது கெட்டித்தனம்' என்று இவன் நினைப்பு. போர்வை நீக்கி, ரவியைப் பார்த்தான்.

"சங்கதி அறிஞ்சியோ ?"

"என்னது ?"

"எனக்கொரு 'லக்' அடிச்சிருக்கு"

"அப்ப, உன் பாடு வாசிதான்."

ரவி நக்கல் பண்ண, இவனுக்குக் 'கேந்தி' யாயிற்று. தன் 'உசத்தி' யைப் பறை சாற்றலானான் :

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பத்ரோன் சம்பளம் கூட்டிப் போட்டான்."

ரவி நமட்டிச் சிரித்தான்.

"தலை குத்திப் பிரண்டாலும் சம்பளம் கூட்டாத பத்ரோன், தனக்கு லாபமில்லாம எதையும் செய்யமாட்டான். இப்ப ஏன் கூட்டினானெண்டு தெரியுமா ? அவன் உன்னை வேலையால நிப்பாட்டி, 'சோமாஸ்' குடுக்கிறது வாசியெண்டா, அந்த வாசி வேலையால நிப்பாட்டாமல் சம்பளம் கூட்டுதால எப்பிடி வரும்? சோமாஸில நிண்டாலும் சம்பளம் கூட்டினாலும் பத்ரோனுக்குத் தான் வாசி"

"அதெப்பிடி ?"

"ஒரு ஆளை வேலையால நிப்பாட்டினா புதுசா ஆள் போட்டுச் சம்பளத்துக்கு அதிக நேரம் வேலை வாங்கிக் கொள்வான். அல்லாட்டி 'சோமாஸ்' எடுத்தவனுக்குப் பதிலாப் பழைய ஆக்களிட்ட 'அவசரவேலை' வாங்கி ஈடு செய்வான். எப்பிடிப் பார்த்தாலும் முதலாளிக்குத்தான் லாபம். முதலாளிமார் எப்பவும் எங்கையும் வேலைக்காறரைச் சுரண்டி வஞ்சிக்காமல் எதுவும் செய்யமாட்டாங்கள் . . . . . ."

சுரேஷுக்கு அரியண்டமாக இருந்தது. 'ரவியின் பேச்சைக் கேட்டால் என் வாசி கெடும்' என்று நினைத்தான். 'இவன்மட்டில் பேசிப் பயன் இல்லை. உவனுக்கு மண்டைக்க ஒண்டு பூராது' என்று ரவியும் கதையை மாற்றினான்.

'மேசையில கடிதம் வைச்சன். நீ எடுத்துப் பார்க்கேலப் போல'

ரவி கேட்டதே இவனுக்கு 'சுருக்' கென்று தைத்தது.

"கவரில உன்ர பேரல்லோ இருந்தது ?"

"உடைச்ச 'கவர்' தானே - பார்த்திருக்கலாம்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எண்டாலும் ஒராளின்ர பேரில வாற கடிதம் இன்னொராள் பார்க்கப் படாதுதானே ?"

"அதுவும் சரிதான்; ஆனா, கடிதம் உனக்கும் சேத்திதான்"

கடிதத்தை எடுத்துக் குடுத்த கையோடு ரவி 'பாத்றூம்' பக்கம் போக, இவன் இருந்தவாகில் படித்து விட்டுச் சிரித்தவனாக வலு 'குஷி' யில் துள்ளி எழுந்தான்.

"ரவி, ஒரு 'குட்' நியூஸ்"

'என்னது?' என்று ரவி கேட்கமுதலே சுரேஷ் சொன்னான்:

"இலங்கையில இப்ப சரியான பிரச்சினையாம். ரண்டு பகுதியாலயும் சூடுபட்டு நாள் வீதம் அம்பது அறுவதெண்டு சனம் சாகுதாம். யாழ்ப்பாணத்துக்கு பெரிய அழிவு வரப்போகுது. அதுக்கிடையில தங்கச்சியவைய 'ஏஜன்ஸி' மூலம் மூத்த மாமா ஜேமனிக்கு அனுப்பி வைச்சிட்டார். அவே சுகமா வந்து சேந்திட்டினம்."

ரவி 'நமட்டி' ச் சிரித்தான்.

"உதே 'குட் நியூஸ் ?', சனங்கள் சாகிறதும் உனக்குக் 'குட் நியூஸ்', என்ன? இந்தப் போர்வையில வேஷங்கட்டி நிக்கிறவையாலதான் பிரச்சினை முத்துது."

"நான் அதைச் சொல்லேல . . . "

"பின்ன, எதைச் சொன்னனி ?"

பேச்சு வரவில்லை.

'தங்கச்சியவே பிரான்சுக்கு வாற சங்கதிய முக்கியப் படுத்தாமல், 'பாவம், அப்பாவிச் சனங்கள்தான் வீணாச் சாகுதுக' ளெண்டு 'இரக்கமா' ச் சொல்லி ரவியை மெல்லமா வளைச்சிருக்கலாம். பறவாயில்லை, அதுகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரைச்சலில்லாமல் வந்து சேருமட்டும் ஒண்டும் பறையாம லிருந்திட்டுப் பிறகு பாப்பம்'

கன நேரமாகியும் சுரேஷ் பதிலேதும் சொல்லாமல் யோசித்தபடி இருந்தவன், கடைசி வரியைப் படித்தபோது – ?

முத்துப்பாட்டி . . . . . . . . . . . .

அறை மயான அமைதியில் . . . . . . . . . .

**தினகரன் – 1992**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10. சுதந்திரம்

முதலாளி வீட்டில் எந்தப் பாத்தியதையோ உரிமையோ தனக்கு இல்லாத ஒரு வெறுமையையும், அவர் விரும்புவதே தனது சுதந்திரமாகவும், சொந்த வீட்டில் தான் விரும்பிய சுதந்திரத்தை அனுபவிக்கமுடியாத தனது வாழ்வு, கூலிக்குள் அடிமையானதையும் அவன் கவனித்தான்.

"கண்ணாரே கடையாரே
காக்கை வண்ணப் பூச்சியாரே
ஈயாரே எறும்பாரே
எங்கே நாம் சென்றாலும்
எத்தி அணாப்பினியோ
மூண்டு தட்டும் முழங்கால் வெட்டும்"

கண்கள் பொத்தி ஈர்க்கில் குத்திய மண் கும்பம் கையில் ஏந்தி விளையாடுகிற சிறுவர் சிறுமி கூட்டம், பொழுதுறையும்வரை மூங்கில் பற்றையோடு சங்கமாகிவிடும்.

இது ஓய, தத்தம் விவேகம் துலக்க நொடி போடும் பரீட்சையில் இறங்கும்.

"ஓரான் ஓரேரியிலே
ஓராயிரம் தென்னைமரம்
காயுமில்லைப் பூவுமில்லை,
காக்கை குந்த நிழலுமில்லை,

அது என்ன . . . . ? "

"நெல் வயல்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அச்சா"

"இனி இதை அவிழ் பாப்பம்?"

"சொல்லு?"

"செக்கச் சிவந்திருப்பார் - சிறு
செட்டிகளைப் போலிருப்பார்
வாந்து வடிந்திருப்பார்
வந்திருப்பார் சந்தையிலே

இது என்ன . . . ?"

"ம் . . . . வாழைப்பழம்"

"இல்ல"

"ம் . . . . பனங்கிழங்கு"

"ம் கூ, இல்ல. ஆனா, கிட்ட வந்திட்டாய்"

"ம் . . . ."

"சரி, ஆத்துமோ ஆத்தாதோ?"

"ஆத்தாது"

"சொல்லட்டோ . . சொல்லிப்போடுவன் . . சொ. . ல் . . ற . . ன் . . . இந்தா சொல்லுறன்- பினாட்டுத் தட்டு"

"எடடே . . . ."

"எட கோதாரி, எனக்கும் மனசுக்க கிடந்தது. 'டக்' கெண்டு வாயில வரேல்ல"

"சொல்லாததுக்குப் பந்தயம் இல்ல. ஏன் வீண் வாய் சப்புறீர்?"

ஹீரோவான அவன் விளையாடி முடிய வெயர்த்து விறுவிறுத்து வருவான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆச்சி போட்டுக் குடுத்தால் உண்பான். தகப்பன் ஆனவாகில கவனிப்பதில்லை. சடலம் ஆற அயருவார்.

'இவன் வீட்டுக்கு ஆகாதவனாக வந்திடுவானோ?'

சதாபோதும் அந்தரப்படுகிறார்.

அவனுக்குப் படிப்பு ஏற மறுத்தது.

பள்ளிக்குக் கள்ளம் போடத் துவங்கினான்.

'கடுக்கண்டு'ம் படியாமல் வெளியே திரிய ஒரு சாதி வெக்கம் தலை புடுங்குது.

'அரிவரியோட நிப்பமோ?'

நினைக்கவே பயம். தகப்பன் சன்னதமாடுவார். எக்கணம் விக்கிர தாண்டவம்தான்.

சட்டம்பி பள்ளிக்கூட வாசலண்டை போயிலை துவைச்சுத் துப்பிக்கொண்டு பிரம்பு விசுக்கி அடிக்கிற விறுத்தம் . . . .

சில வேளை இவன் அரைச் சவுக்கம் உரிஞ்சு தண்டியால வழுக்கி விழும்.

'பள்ளிக்கு நேரஞ்செண்டுபோச்சு' தெண்ட சாட்டு. ஒரே கண்ட சீருக்கு அடி.

ஆத்தாக் கடைசியில் 'கொடிச்சுவால்' என்று சட்டம்பியைப் பேசிவிட்டுக் கை திருகிப் பறித்து ஓடுவான்.

மறுநாள் பள்ளிக்கூடம் நினைக்க முதுகு சுள்ளிடும். குடல் கலங்கும்.

காலைதோறும் ஆனவாகில அன்ன ஆகாரம் கொள்ளான். பழஞ்சோறு பானையில் எஞ்சினால் வயிறு வீங்கக் குடிப்பான்.

'பள்ளிக்கூடம்' என்றாலே அடி வளவு போய் 'நாயுருவிப்பத்தை'க்குள் குந்தியிடுவான்– கன நேரமாக.

"ஏன்ரா நேரத்தோட பள்ளிக்குப் போகாம நிண்டு முழுசிறாய்?" என்று கேட்டார் தகப்பன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நேரஞ்செண்டுபோச்சு' என்று சாட்டு விடலாம். விடுவதில்லை.

'பொய்' சொல்ல வாய் ஏலாது.

"களவெடு, பொய் சொல்லாதே" என்ற 'பெரியோர்' முழக்கம் காதில் இறுகிவிட்டிருக்கிறது.

'இனிமேல் பள்ளிக்கூடம் போகமாட்டன்' என்று அறுதியாகச் சொல்லவா?

கன நேரம் யோசித்தான்.

முடிவு சொன்னால் தகப்பன் ஒரு சேனை பூவரசங்கம்பு முறித்துச் 'சாத்துவார்' என்று இவனுக்குத் தெரியும்.

பள்ளியில பிரம்படி, வீட்டில கம்படி.

'என்ன உத்தரிப்பு . . . . ?'

ஒரே முழிசாட்டம்.

ஒரு வருஷமாகியும் 'வதைபடலம்' முற்றில்லை.

"இந்த வருஷம் வகுப்பு ஏற்றவில்லை"

சட்டம்பி சொன்னதே அவன் குதூகலம் சொல்லி மாளாது.

'பள்ளிக்கூடம் போகாம நிக்க இதுதான் வாசி'.

அவன் மட்டப் பொடி பெட்டையள் முதலாம் வகுப்புக்குப் போயாச்சு.

அம்மா கொழுத்த சதிரம் ஆடி அசைந்து வந்து முதலாம் வகுப்புக் கதிரையில் இருக்கவே மூச்செறிவா. அவரைக் கண்டால் மனசு பதகளித்து யம கண்டப் பயம் எழும்.

முதலாம் வகுப்புக்குப் போனால் அம்மா குத்து முதுகில் விழும். அட்டியில்லை.

மூசி மூசிக் குத்துவா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'அவ வகுப்பைத் தாண்டி ரண்டுக்குப் போகேலாதா?' என்றும் ஏங்குவான்.

தகப்பன் சட்டம்பி காலில் விழாக் குறை. மற்றதெல்லாம் செய்த பலன், 'ரண்டாம் வகுப்பு' க்கு ஏறினான்.

'கொக்கு மொக்கன்' என்று மண்டை வெடிக்க அடி விழும். அங்கும் அதே.

'படிப்பே ஏறாத மர மண்டையோ?'

நிலவரம் பூராவையும் ஆச்சி யோசிச்சுப் பாத்தா.

'அவன் இதோட போகாமல் நிக்கிறதும் நல்லதுதான். அரிவரியிலயே படிப்பு ஓடல்லயே'

யோசிச்சுப் போட்டுக் கடைசியில ஆச்சி சொன்னா:

"உன்னால படிக்க ஏலாட்டிச் சொல்லு. கொப்பரிட்டச் சொல்றன். அவர் சம்மதிச்சாப் பேசாம நில்"

துள்ளிக்குதித்தான். காடுகரம்பை வயல் வாய்க்கால் எங்கும் ஏகாந்த வெளியாகத் தெரிந்தது.

சீனத்தான், எட்டுமூலை, பிராந்து, கொக்கு, நகரமீன் – என்று கொடிகள் பாக்கியில்லை. வெளியேகலும் கொடிகள் வின்ன கூவ ரசித்து அலைவான்.

சுத்த சுதந்திர ஜீவி.

'அவன் சும்மா திரிஞ்சு சுகம் காணப்பாக்கிறான். சுத்த சோம்பேறி'.

தகப்பன் சித்தம் வேறாக இருந்தது.

'இவனை வீட்டில வச்சுத் தாக்காட்ட ஏலாது. விடுகாலியாய்ப் போயிடுவான். கொட்டில்ல விட்டால் நாளுக்கு ரண்டு படி அரிசிக்கு உழைக்கானா?'

கொஞ்ச நாளையால அப்பர் சொன்னார்:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"டேய், நீ பள்ளிக்குப் போகாதை, என்னோட கொட்டிலுக்குச் சுருட்டுச் சுத்திப் பழக வா".

எட்டு வயதுதான். பத்துப் பதினொரு வருஷ தோற்றம். குளுவன்சாடை மேனி முறுகி நின்றான் பையன்.

*

முதலாளிக்குப் பிடித்து விட்டது.

"பயலே, பள்ளிக்கூடத்துக்குக் 'கள்ளம் ஒளிச்ச' மாதிரி இஞ்ச நடக்கப்படாது. ஒழுங்கா வேலைக்கு வந்து போகவேணும். கை நிறையக் காசு வரும். தெரிஞ்சுதா?"

தலையாட்டினான்.

புகையிலை பாடம் போட, கிடாரம் கழுவ, பெட்டி அடுக்க, இலை தெரிய, காம்பு ஒடிக்க, சோணை வார, தலை வால் நறுக்க, நூல் கட்ட – கெதியில் பழகிவிட்டான்.

என்ன 'கெச்சிதம்'.

முதலாளிக்கு ஒரு சந்தேகம்.

கூடவே அவனில் வாஞ்சை எடுத்தது.

'கேட்டுப் பாப்பமோ?'

ஒரு சமயம் தானாகவே கூப்பிட்டுச் சொல்கிறார்: "சுட்டிப் பயலே, நீ விரும்பினா இனி என் வீட்டிலயே இரு. உன் விருப்பம்போல நடந்து கொள்ளலாம்".

ஏதோ என்னவோ என ஓர் அங்கலாய்ப்பு. 'திக்' கிட்டவனாக நின்றான்.

அவன் மனக் கோலம், 'தகப்பன் என்ன சொல்வாரோ ?' என்று யோசிக்கிறான் போலிருக்கு' என நினைத்தார் முதலாளி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோலம், 'தகப்பன் என்ன சொல்வாரோ ?' என்று யோசிக்கிறான் போலிருக்கு' என நினைத்தார் முதலாளி.

"கொப்பரோட கதைச்சு முடிவு எடுத்திட்டுத் தான் சொல்றன். பேந்தேன் பின்னடிக்கிறாய் ? "

' சரி முதலாளி ' என்று ஒப்புவான் என நம்பினார்.

அவன் அப்படியேதும் கூறவில்லை. 'ஆம், அல்ல' என்றும் சொல்லவில்லை.

"எப்பவாவது நீ உன்ர வீட்டில ஆனவாகில சாப்பிட்டிருப்பியா ? "

'இல்லை, சாப்பாடு தின்னாமல் பட்டினியும் கிடந்திருக்கிறன்' என்ற உண்மை சொல்வானா '

வாய் திறக்கவில்லை.

இப்போது அவன் மனசு வேண்டி நிற்பதை முதலாளி புரிந்துகொண்டார்.

"என்ன இருந்தாலும் உன்ர எண்ணத்துக்கு நடக்க உனக்கு வீட்டில 'சுதந்திரம்' இல்லை. அப்பிடித்தானே?"

'சுதந்திரம்' என்ற சொல் இவனுக்கு முழுசாக விளங்கவில்லை என்றாலும், தான் நினைப்பதன் அர்த்தம் அதில் புதைந்திருப்பதாக உணர்ந்தான்.

அப்பவும் மௌனமாகவே நின்றான்.

"இஞ்ச அப்பிடியில்லை. எந்த நேரமும் நீ விரும்பியதை வயிறுமுட்டச் சாப்பிடலாம். கோயில், திருவிழா, சதிர்க் கச்சேரி, கோலாட்டம் பார்க்கலாம். கொடி ஏத்தி விளையாடலாம். உல்லாசமாய்ப் படுத்து உறங்கலாம். வேணுமெண்டாப் பள்ளிக்கூடமும் போகலாம். விருப்பமில்லாட்டி விடலாம். அதோட மாசா மாசம் நான் தாற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூலிய உன்ர விருப்பம் போல வச்சிருக்கலாம். இப்படியான சுதந்திரங்களை உன்ர வீட்டில நீ அனுபவிச்சிருக்கிறியா? "

இப்பதான் சுதந்திர அர்த்தம் சாடையாய்ப் புரிந்தது.

"ஆனா, பள்ளிக்கூடம் போகமாட்டன்" என்றான்.

"ஏன்?" "அங்கயும் வீட்டில மாதிரிக் கட்டுப்பாடு"

தூண்டலை மீன் விழுங்கிவிட்டது. இனி எதுவும் செய்யலாம் – சுதந்திரமாக.

சடுதியில் முதலாளி மனங் குளிர்ந்துபோனார்.

"அச்சா, அதுதான் நல்லது. நீ இஞ்ச இருந்தே படிக்கலாம்."

ஒரு சந்தேகம்.

"சுருட்டுக் கொட்டிலுக்க இதுக்கெல்லாம் வசதி எங்கால?"

ஒரு வயது வந்த கிழவன் போல் கேட்டான்.

முதலாளி சொன்னார்.

"பாடம் படிக்கிறதுக்கே ஒரு ஆளுக்கு முழுக்கூலி குடுத்து வச்சிருக்கிறன். அவர் உரத்துப் படிப்பார். நீ காதால கேட்டுக்கொண்டு 'தொட்டாண்டி' வேலை செய்தால் போதும். படிப்பு, தானாக ஏறும்."

"சட்டம்பியார் தேவையில்லயோ?"

"இல்லை"

"என்ன பாடம்?"

"மகா பாரதம்"

"பாரதமெண்டா...?"

"சுதந்திரத்துக்கும் சர்வாதிகாரத்துக்கும் நடக்கிற போர்"

"அப்பிடியெண்டா...?"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொஞ்ச வாக்கியத்தில், ஐந்து நிமிஷம், கதை சுருக்கி விளக்கினார்.

அன்று தொட்டு அவன் வீடு செல்வதில்லை.

*

"ஓ சுட்டிப் பயலே, நீ இன்னும் எழும்பேலயா?"

அனந்த சயனம் முறித்து எழுந்து கண் கசக்கி விழித்தான்.

கண்ணில் முதலாளி, கையில் முருக தண்டம்.

'என்ன இது, விடிய முந்தி' . . . . ?

சின மூஞ்சி காட்டவில்லை.

ஏறிட்டுப் பார்த்தான்.

"பொழுது காலிக்கமுன் சாமான் சக்கட்டை எடுத்து ஒழுங்குபடுத்து. சுத்துக்காறர் வந்து வேலை துவங்க முந்தி அடுக்குப் பண்ண வேணும் – சுறுக்கா"

ஏக்க விழி குத்திட்டு நின்றது.

"என்ன, உப்பிடிப் பாக்கிறாய்? இந்தா பால் தேத்தண்ணி. சுடச்சுடக் குடிச்சுப் போட்டுப் பிறகு அலுவலைப் பார்".

"பால் தேத்தண்ணி."

முதலாளியே தலை மாட்டில் கொண்டு வந்து தருகிறார்.

'எப்பவாவது வீட்டில பால் தேத்தண்ணி குடிச்சிருப்பனா?'

ஏங்கிப் போனான்.

சோம்பல் தானாக முறிந்தது. நெட்டுருவிய கை கொட்டாவி தொட்டு நின்றது. அலுப்புத் தெரியவில்லை.

புதிய உற்சாகம் கிளர்ந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுப்பில் முடா வைத்துத் தண்ணீர் இறைத்தான். கிடங்குப் பாடம் புகையிலைப் புகையாய் மண்டியது. காலை எட்டு மணிக்குள் கொட்டிற்பாய் விரித்து முடிந்தபின் முற்றம் கூட்டினான்.

கூலியாட்கள் வரமுன் எல்லாம் முடிந்தன.

"அப்பிடியே குசினித் தாவாரத்தையும் துப்பரவாக்கிப் போட்டு வா. பொரிச்ச மீனோ முட்டையோ விரும்பினதை அம்மா போட்டுத் தருவா. போய், தின்"

'இப்பிடி என்ர வீட்டில தின்பனா? புட்டு, பொரிச்ச மீன், முட்டையக் கண்டிருப்பனா?'

முதலாளினி குரல் மும்முரமாகக் கேட்டது: "நாசமறுந்த கள்ளப் பூனை சட்டியத்தட்டிக் கொட்டி, மீன் முட்டையையும் தின்டிட்டுப் போட்டுது. உந்தக் கள்ளச் சவத்தை விடப்படாது."

அவன் குசினி வாசலில் நின்று கொண்டான்.

"டேய், பொடியா, பெட்டியத் துறந்து கிடக்கிற புட்டைத் தின்டிட்டு வா".

பூனை கவலேட இவனுக்குத் தெரியவில்லை.

'அடுத்த வீட்டுப் பூனையோ?'

முதலாளி சாப்பிடக் குந்துகிறபோது மனைவியிடம் மெல்லக் கேட்டார்.

"ஏன் பொய் சொன்னனி? வாய்க்கு ருசியாய்க் குடுத்தாத்தானே பொடியன் வேலை வெட்டி செய்வான். எல்லாப் பிரச்சினையும் சாப்பாடு ஒண்டுக்கதான் கிடக்கு. உலகத்திலை நடக்கிற சண்டை சச்சரவு எல்லாம் சுதந்திரத்துக்காக இல்ல, பொருள் பண்டத்துக்காக. ."

"அதையே அள்ளிப் போட்டுப் பழக்கினா, பிறகு அண்டலிக்க ஏலுமா?"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நீ சும்மா கிட. எல்லாம் எனக்குத் தெரியும். நால் போட்டுத்தானே சுறாப் பிடிக்கிறது. சீமைக்காறன் அதைத் தானே செய்யிறது".

முதலாளினி சிரித்தா.

*

முதலாளினி திட்டின 'கொடிய கள்ள'ப் பூனை ஒரு நாளும் இவன் கண்ணில் படவில்லை.

ஐயா சொன்ன முட்டை மீன் சாப்பாடும் கிடைப்பதில்லை.

தான் புகையிலைக் காம்பு கணியம் சூம்பி, நரம்பு தளர்ந்து, தேகம் குளுவுகிற சங்கதி, நாட் செல்லத்தான் இவனுக்குப் பிடிபட்டது.

முதலாளினி சுத்த சைவம். வெள்ளி செவ்வாய் விரதகாறி. விரதமிராத இவனுக்கும் இரு நாள் ஒரு வேளைச் சாப்பாடு.

கேட்பானேன், இவன் வயிறு ஒட்டித் தேக வாகே குன்றிவிட்டது.

நிலம் வெளிக்க முன் எழுந்து பொழுது உறையில் போன பிறகும் குவிந்த வேலை பாதியில் நின்று போகும்.

சோர்ந்து சவண்டிப் போனான்.

சில நாள் பொறுத்துப் பார்த்தான். 'போதும்' என்றாகியது.

முடிவுக்கு வந்தான்.

"முதலாளி, நான் வீட்டை போகப் போறன்"

அவர் இதை எதிர்பார்த்ததுதான்.

'போகப் போறானா, போயிட்டு வருவானா?'

முற்றுக்காண விரும்பினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நாளைக்குக் கூலி. கையோட எடுத்துக் கொண்டுபோய் கோச்சியிட்டக் குடுத்திட்டு வா. இந்த மாசம் கூலி கூடியிருக்கு. ஆறு மாசத்தால இன்னும் கூடும்".

'தம்' விட்டுப் போனான்.

'அஞ்சு ரூவா கூட்டித்தானிருக்கிறார்'.

"உப்பிடியே போறியோ, போட்டு வருவியோ?"

"வருவன்".

"அலுவல் கிடந்தா நாளைக்குச் செய்யலாம். போட்டு வா".

சண்டிக்கட்டும் பழகிவிட்டான்.

பொடி நடை. வீடு வந்து சேர்ந்தான்.

❋

பகலாகியும் அவன் எழும்பவில்லை.

'பாவம், வேலைக்களை, தேக அலுப்பு'

தகப்பன் கேட்டார்.

"டே, தம்பி, நீ இண்டைக்குச் சுருட்டுக் கொட்டிலுக்குப் போகலியா?"

முனகி எழுந்தான்.

குதூகலத்தில் ஆழ்ந்திருந்த முகம் திகிலில் குல்லிட்டது.

'இண்டைக்கு இவனுக்கு என்ன பிடிச்சிருக்கு?'

"சந்தோஷமாகவும் சுதந்திரமாகவும் இருந்து வேலை செய்யிறாய்தானே? உனக்கு அங்க என்ன குறை?"

'ஒரு குறையும் இல்லை என்று பொய் சொல்கின், அந்தப் பொய்யை நிரூபிக்க முழு உண்மைகளை வெளியிட வேண்டும்.'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொய் மெய் இரண்டும் இடத்துக்கு இடம் கிரிகைக்கு, பேச்சுக்கு, கருத்துக்கு, வெவ்வேறு அர்த்தப்படுவதை அவனால் புலப்படுத்த முடியவில்லை.

சந்தோஷம், சுதந்திரம் – முதலாளி தரும் கூலியில் தொங்கிக் கொண்டிருக்கின்றன.

கூலிக்காகவே ஓய்வில்லாமல் வேலை செய்கிற போடுதடி வாழ்வில் அதுவே சுதந்திரமானால் அந்தச் சுதந்திரம் அவனுக்கு நீதி வாக்கியமாக இருக்கிறதே தவிர, எதுவும் அர்த்தமுள்ளதாகத் தெரியவில்லை – அது புரியவும் இல்லை.

'எதிலும் உரிமை இல்லாத முதலாளி வீட்டில் நெடுக அடைஞ்சு கிடக்க ஏலாது' என்று சொல்லி விட்டவா? என்று யோசித்தான்.

'அப்ப, 'வாறே'னெண்டு முதலாளிக்கு ஏன் பொய் சொன்னனி?' என்று விடுத்துக் கேட்டால் என்ன மறுமொழி சொல்றது?' என்றும் மறுவாட்டி தன்னுள் தர்க்கித்தான்.

'ஏமாத்திற முதலாளிக்கு ஏன் உண்மை சொல்ல வேணும்?' என்று கேட்டால் தகப்பன் ஏற்றுக்கொள்வாரா என்று தடுமாறினான்.

"முதலாளி கொஞ்சமும் ஒஞ்சியாமல் கூலி தாறார். அடுத்த மாதமிருந்து கூலி கூட்டியுமிருக்கிறார். அல்பெத்தட்டாமல் போய் வேலை செய்"

அதட்டல் ஒரு வார்த்தை. அது சுதந்திரத்தைப் பறிப்பதில்லை. ஆனால், அந்த மிரட்டலே தனது சுதந்திரத்தில் தலையிடுவதாக அவனுக்குத் தோன்றியது.

முதலாளி வீட்டில் எந்தப் பாத்தியதையோ உரிமையோ தனக்கு இல்லாத ஒரு வெறுமையையும், அவர் விரும்புவதே தனது சுதந்திரமாகவும், சொந்த வீட்டில் தான் விரும்பிய சுதந்திரத்தை அனுபவிக்க முடியாத தனது வாழ்வு, கூலிக்குள் அடிமையானதையும் அவன் கவனித்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகார் பற்றி விடிய முன் அவன் சுறுட்டுக் கொட்டில் முற்றத்தில் நின்றான்.

"வா, இரு. முதல் இந்த முட்டைக் கோப்பியக் குடி"

சட்டி, பெட்டி, பானை, சருவம், அரிதட்டு, புட்டுக்குழல், செம்பு, சருவச்சட்டி, பீங்கான், கடகம், திருவலை, குண்டுக் கோப்பை, சுளகு, நீத்துப் பெட்டி . . . .

குசினி அடங்க அம்பாரமாகக் கிடந்தன.

முதலாளினி கனிவாகச் சொல்றா:

"மோன, இதுகளைக் கிணத்து வக்கில போட்டுக் கழுவிப் போட்டு வந்து புட்டைத் தின்"

முதலாளி இடைமறித்தார்.

"அவன் விரும்பாட்டி, குசினி வேலை செய்விக்காதை. சுறுட்டுக் கொட்டிலுக்க கன வேலை கிடக்கு".

"பொடியா, நான் அதுகளைப் பாக்கிறன். உறியில பொரிச்ச மீனும் குளம்பும் கிடக்கு எடுத்துப் புட்டோட தின்டிட்டுப் போ"

அலை கிளர்கிற கேணிப் பாசிமாதிரி அவன் மனசு தளம்பிற்று.

ஒரு முடிவுக்கு வந்தான்

"நாளையோட வேலைக்கு வரமாட்டன்."

முதலாளி நெஞ்சுள் முட்டை நொறுங்கிற்று.

"இஞ்ச உனக்கு என்ன குறை? கூலி கூட்டித் தந்திருக்கிறன். மக்க மாசத்திலயிருந்தும் கூட்டுறன். உடுபுடவை தாறன்.வேளா வேளைக்குச் சாப்பாடு இருக்கு. படுக்க, இருக்க, படிக்க, பாட, ஆட, விளையாட, கோயில் குளம் போக எல்லாச் சுதந்திரமும் இருக்கேக்க, உனக்கு ஏன் இந்தக் 'கெட்ட புத்தி' வந்தது ?"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அப்பிடியெண்டா, நான் ஒவ்வொரு நாளும் அப்புவோட வந்து அப்புவோட போறன். கொட்டில்ல சுருட்டு வேலையவிட வேற 'தொட்டாண்டி' யள் செய்யமாட்டன்."

ஆமோ, நாளையோட நீ வேலைக்கே வரவேண்டாம்".

"அப்ப, 'கூலிக்குழப்பம்' செய்வன்"

"நீ களவெடுத்த காசு எடுக்கப் பொலிசு வரும்".

வெகு சுதந்திரமாக ஒரு வெடிகுண்டைத் தூக்கி வீசினார் முதலாளி.

அவன் கெலிக்கவில்லை.

'எத்தி அணாப்பினியோ
மூண்டு தட்டும்
முழங்கால் வெட்டும்'

அவன் மனசு குமுறி ஆவேசித்தான்.

சுதந்திரத்தின் முழு அர்த்தம் இப்பதான் வள்ளீசாகப் புரிந்தது.

கொட்டிலில் மகாபாரதம் முழங்கிக் கேட்டது.

பஞ்சபாண்டவர் வனவாசம் போய் மீண்ட பின்னும் பாரதப்போர் உக்ரமடைந்தது.

பொலிசை அவன் எதிர்கொள்ளச் சித்தங் கொண்டான்.

*

**நான்காவது பரிமாணம் - 1991**

**தாமரை - மறுபிரசுரம் - 1992.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 11. மொக்குகள்

அறுவத்திநாலு கலைக் கியானங் களையும் கரைச்சுக் குடிச்ச எனக்கு நேத்து முளைச்ச காளான் கரடி விடுறான். 'நான்கு பதினெட்டுச் சாதி'க் கலாச்சாரங்கள்ல பழமும் தின்டு கொட்டையும் போட்ட எனக்கே காதல் ரசனையச் சொல்றான். காதலெண்டது பூவுக்க தலை நீட்டுற நச்சு முள்ளு....

"மீசை முளைக்க முன்னம் உவருக்குப் பெண் பிடி ஆசை முட்டி மோதுது. நெடுகச் சொல்லிக்கொண்டு வாறன், நீ கவனிக்கிறாயில்லை. உவன் அவளை நினைச்சானெண்டா, இப்பவே வீட்டை விட்டு வெளிக்கிடச் சொல்லு. இல்ல, இதால எக்கணம் 'மேடர்' தான் நடக்கும் – சொல்லிப் போட்டன்".

எனக்குத் தெரியும். அப்பா மனசுக்க வேற புழு நுளைந்துது. நான் இப்பவும் கைக்குழந்தையெண்டு அவற்ர நினைப்பு. போன வரியம், 'கடுக்கண்ட மாட்டு முடுக்க' ரெண்டு அவரே பேசினார். இப்ப நான் அவற்ர கந்தறுந்த கண்ணுக்குக் கடுக் காணாதவனாம். 'காதலுக்குக் கண் இல்லை' யெண்ட அரிவரிப் பாடமே தெரியாதவர். ஆனா, எல்லாம் தெரிஞ்சதாக வீம்பு. காதலுக்குக் குறுக்கே நிக்கிற மடத்தனம் எங்க வேண்டது; எப்ப அது தோத்தது? சங்கதி அறிஞ்சவுடன முந்தியெல்லாம், 'என்ர பிணம்தான் முகட்டில தொங்கு' மெண்டவர், இப்ப படியிறங்கி வந்து, 'மேடர்தான் நடக்கு' மெண்டு வெருட்டுறார். என் பிடி ஒரு படி இறுகிவிட்டது. மனம் பிடிச்சவளைக் காதலிக்கக் கூடாதெண்டு எந்தச் சட்டத்தில கிடக்கு? அவர் பாஷையில சொல்றெண்டா, சரியான 'ஓரவாங்கிஷ' க்காறன் –'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'முத்துச்சர வடமே
முல்லை மலர்ப் பேரழகே
பத்தரை மாற்றுத் தங்கப்
பதுமையே பொற்கிளியே
எத்தனை சோதனைகள்
எனை வந்து சூழ்ந்திடினும்
அத்தனையும் நான் வெல்வேன்
சத்தியமாய் நம்பியிரு'

"ஒரு நாள் நானும் கண்டனான். நல்ல வாப்பு மூப்பான பெட்டை. மேனகைசாடை வடிவு. ரண்டும் ஆளையாள் விரும்புதுகள். மறைக்காமல் சொல்றான். அதுக்கேன் உந்தக் கூத்து? இளந்தாரியெண்டும் பாராமல் மட்டு மரியாதை இல்லாமக் கதைச்சா, உங்கட ரோஷம் அவனுக்கும் வரும்தானே? முந்தி உந்த எடுபிடியில் நீங்கள் கோசு போன ஆளே?"

அம்மா சத்தியவதி. 'பெத்த மனம் பித்' தெண்டு சும்மாவா சொல்றது? அப்பர் ஒரு அரக்கர்; அழுங்குப் பிடியர். அவர் உதிரம்தானே என் பிறப்பு? அவர் ஓரடி பாய நான் ஆறடி பாய்வன். 'அப்பற்ர குணம் முழுக்க அவனில கிடக்' கெண்டு அயலட்டை சொல்ல, அவர் என்னைத் தூக்கி வைச்சுக் கொஞ்சுவாரே. இப்ப அதையெல்லாம் மறந்தாச்சு. இந்தக் காதல் விஷயமும் தனது சுபாவம் தானெண்டு அவர் ஏன் யோசிக்கக் கூடாது? சரியான சுயநலக்காறன். அம்மா 'இறுக்கி' ச் சொன்னால்தான் அவற்ர ஹிட்லர் மண்டையில ஏறும் –

'ஆணவம் அழியும் ஹிட்லர்
அதற்கொரு சான்று – மேலாம்
சமத்துவம் வெல்லும் அறிவியல்
தத்துவ சித்தாந்தம் காண்க'

"நான் என்ன மரியாதைக் குறைவாக் கதைச்சுப் போட்டன்? வெள்ளம் வரமுந்தி அணை கட்ட வேணும். உனக்கு ஒரு வெள்ளிடியும் விளங்கேல. அவனுக்கேத்த ஒரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்ல இடத்தைக் கோலுறது என்ர கடமை. இது தெரியாமல் இவன், ' கண்டதே காதல் கொண்டதே கோல' மெண்டா, இதால பிறகு இனஞ்சனம் அயலட்டையால வாற வில்லங்கத்துக்கு ஆர் வகை சொல்றது? இவன் பெட்டையின்ர வடிவில மயங்கி நிக்கிறான். எனக்குத் தெரியாத காதலையே இவன் கண்டுபிடிச்சிட்டான்? காதலும் கத்தரிக்காயும். கலியாணத்துக்குப் பிறகு வானவில்லைப் போல காதல் மறைஞ்சு போகும் . . . "

– உந்தச் சூத்திரத்தை உவர் எந்த நிகண்டில படிச்சார்? உவர், 'பட்டினத்துப் பிள்ளையா' ரெண்டு என்னை நினைச்சிட்டார் போல. போர் முனை போன வீரனே 'பொம்' மெணப் புடைத்து விம்மின அழகியில மயங்கின கதை உவருக்குத் தெரியாது. காதல் வசமாகிற ரஸ ஞான மனோ பாவமே இவருக்குத் துப்பரவாக இல்லை. சரஸம் செய்ய ஏலாது வயசு. காதற் பூவை மிதிக்க முனைகிறார். உவருக்குக் கத்தரிக்காய்தான் தெரியும். காதலின் அருமை தெரியாது –

'காதலில் வசப்படாத
மானிடர் யாருளரோ?
காமத்தால் தீயாத
கல்நெஞ்சர் இருந்தனரோ?'

"உந்தப் போக்கைப் பாத்தா ஏதேன் ஏதண்டையில நான் முடியும் போல கிடக்கு. உங்கட பாட்டுக்கு எப்பன் பேசாமல் கிடவுங்கோ. என்ன நடக்குதெண்டு பாப்பம். துள்ளித் திரியிற காளைமாடு கடைசியில கட்டில உறையும்தானே?"

" அப்புடியோ ? உவன் என்னை ஏக்கிபோக்கியான ஆளெண்டு நினைச்சிட்டான். அதுதான் உந்த எழுப்பம். அறுவத்துநாலு கலைக்கியானங்களையும் கரைச்சுக் குடிச்ச எனக்கு நேத்து முளைச்ச காளான் கரடி விடுறான். 'நான்கு பதினெட்டுச் சாதி'க் கலாச்சாரங்களில் பழமும் திண்டு கொட்டையும் போட்ட எனக்கே காதல் ரசனையச் சொல்றான்? காதலெண்டது பூவுக்க தலை நீட்டுற நச்சு முள்ளு. உது உவனுக்குத் தெரியுமே?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உவர் ஒரு அசல் மொக்கர். எல்லாம் தெரிஞ்ச இவருக்கு இக்கால நடை உடை பாவனை நாகரிகம் எதுவுமே தெரியாது. இவரைப் போல ஊருக்க நாலு பேர் இருந்தால் காதலிக்கிறவே நஞ்சு குடிச்சே சாக வரும். உவர் விழி கண்ணில் மிளகாய்த்தூள் வீசுற தறுதலை மனுஷன் –

'காதலைத் தடை செய்யும் கயவர் வீழ்க
காதலைப் புகழாத மனிதர் மாள்க
காதலே உலகமதாய் ஆகிவிட்ட
காந்தத்தை அறியாத மூடர் வீழ்க !'

"எல்லாம் படிச்ச உலக நடபடி தெரிஞ்ச நீங்கள் வீட்டுப்பிள்ளையின்ர மனசைப் புரியிறியளில்லை. அவன் இப்ப என்ன செய்து போட்டான்? ஒரு பெட்டைய விரும்பினான். அதுக்கு 'நச்சு முண்'டெண்டு முனியிறியள். எதிர்காலத்தைப் பற்றி நெடுகலும் பறையிற நீங்கள் அவன் விருப்பத்தை அனுசரிச்சுத்தானே நடக்க வேணும்? அதைவிட்டு எப்பவும் பழஞ்சீலை கிழியிற மாதிரிப் 'புறு புறு'த்துக் கொண்டிருந்தா, குடும்பம் நல்ல அமைஞ்சிடுமே? அவன் விரும்பின பிள்ளைய, நாங்களும் பாத்து நேர்சீராக் கட்டி வைக்கிறது தானே எங்கட கடமை?"

– முட்டையில மயிர் புடுங்கிற உவற்ற மர மண்டையில உது ஏறாது. கொதியர்; வீண் கொழுவல்காறர். காரியகாறர் அல்ல. முதல்ல அவற்ர பிடிவாதப் போக்கை மாத்து. அதுக்குப் பிறகுதான் இந்தக் காதல் விஷயம் சுளுவாக எடுபடும். உவர் காலத்துக் கேத்த மாதிரி யோசிக்கிறதும் இல்லை. உந்தாள் புத்தகப் பூச்சி. உவற்ர ஏட்டுச் சுரக்காய்ப் படிப்பு நாட்டுக்கோ வீட்டுக்கோ உதவாது. சொந்த வாழ்க்கையில கோட்டை விடுறவைய, 'படிச்சவை'யெண்டு எப்பிடிச் சொல்றது? கணக்கப் படிச்சவேதான் கணக்கப் பிழை விடுறவே. அவையளாலதான் நாடுகளும் குட்டிச்சுவராகிறது. உப்பிடியானவர் நேர்சீர் வழிக்கு எங்க வரப்போறார்?'

'வாழ்வைப் புரியாதோர்
வாழ்க்கையைப் பேசுவரோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காதல் புரியாதோர்
　　காதலைப் போற்றுவரோ?'

"என்னது, நேர்சீராக் கட்டி வைக்கிறதோ? நாலு காரியம் தெரிஞ்சதாலதான் எதையும் ஆஞ்சோஞ்சு பாக்கிறன். உனக்கு ஒரு இழவும் தெரியாதபடியால் மோட்டுத்தனமாகக் கதைக்கிறாய். நான் 'புத்தகப் பூச்சி'யெண்டு நக்கல் பண்ணுறவர், சும்மா ஒரு பெட்டையக் காதலிக்கிறதுக்கே இம்மட்டுக் காலம் படிச்சுக்கிழிச்சவர்? தேவையில்லாத உந்த 'உத்தியோகம்' பாக்க உவருக்கு ஆர் சொன்னது? உவன் உதுக்குள்ள மொக்குத்தனமா மாட்டுப் பட்டுத் 'தெய் தெய்'யெண்டு கூத்தாடினா, அதுக்குத் தாளம் போடுறதோ?"

'உந்தப் பழங் கிழட்டு வேதாந்தம் இந்தக்காலம் செத்த வீட்டிலயும் எடுபடாது. எந்த நேரமும் பழமை பேசிக் கொண்டு, காலத்தை வீணடிக்கிற மொக்குகள் துலைஞ்சால்தான், நம்மதரவளி நிம்மதியாச் சீவிக்கலாம். –'

'பழங் கதைகள் பேசியே
　　வாழ்வதனைப் பாழடிப்போர்
விழலுக்கு இறைப்பதுபோல்
　　வீணான வார்த்தை சொல்வார்'

"ஆமோ, உவர் பெரிய மேதை. நிம்மதியாச் சீவிக்க வழி கண்டுபிடிச்சிட்டாரோ?"

"ஆ . . . . . தேப்பனும் மோனும் ஏட்டிக்குப் போட்டியாக நிண்டு கொழுத்தாடு பிடிக்கப் போறியளே?"

"உனக்குச் சங்கதி தெரிஞ்சா, விளக்குமாத்தால அடிச்சு உவனை இப்பவே வீட்டை விட்டுத் துரத்துவாய்"

"அப்பிடி என்ன தலைபோற விஷயமே?"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஊரில தலை காட்டேலாத சங்கதி. உவருக்கு ஊரில ஒரு பெட்டையும் வாய்க்கேல. வேற சாதிப் பெட்டைதான் கிடைச்சுது"

"அ . . . . . அதாரவள், கொழிஞ்சு போவாள்?"

"அந்தப் பெட்டைய ஏன் திட்டுறாய்? முதல்ல உன்ர மோனைத் திருத்து"

"என்ன திருத்திறது? வீடு வாசலுக்கே இவனை அண்ட விடப்படாது. பத்தி எரிவான் எங்கட வங்கிஷத்தில பிறந்து இப்பிடி இங்கிசைப் படுத்துவானெண்டு நான் கனவிலும் நினைக்கேலயே . . . "

"பூங்க வாறார், கேள்"

"டே தம்பி, இஞ்ச வா. நீ விரும்பின பெட்டை இளக்கச் சாதியாம் - மெய்யே?"

"இளக்கச் சாதியெண்டா . . . . . ?"

"என்ன, கிரந்தம் விடுறியே? உது சரிவராது. உந்த எண்ணத்தை இண்டைக்கே கை விடு"

"விடமாட்டன்"

"அவளைத்தான் கட்டப் போறீரோ?"

"ஓம்"

"ஆமோ . . . . . டே விறுத்தாப்பி, நீ இப்பவே வீட்டை விட்டுப் போயிடு"

"போகமாட்டன்".

**நான்காவது பரிமாணம் - 1992.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 12. வேட்டை . . .

> 'பெண்ணோடு பெண்ணாகப் பெண் சகோதரி பிறந்தாலும், பெண்ணோடு கூடி ஒரு ஆண் சகோதரன் பிறக்கக்கூடாது' என்ற 'ஞானம்' தங்கச்சியால் புதிதாக இவனுக்கு உதித்தது.

வேலையால் வந்து காலாறவில்லை. அஞ்சு நிமிஷத்துக் கொருவாட்டி இரவு நடுநிசி தொட்டு மனோ 'போன்' பண்ணியும் தங்கச்சியோடு பேசமுடியவில்லை.

அவள் 'போன்' இவனுக்கும் வரவில்லை.

'என்ன நடந்திருக்கும் . . . . . ?'

'எண்ணியபடி எல்லாம் நடக்காது' என்று இவனுக்குத் தெரியும். மனசு அந்தரப்படுகிறது.

'எங்க போய் ஆரிட்டக் கேக்கிறது . . . ?'

'கோல்' போகுது. கதைப்பாரில்லை.

விடிகிற நேரம் முடுகிறது.

கண்ணயராது துடித்து எழுகிறதும், சோம்பிச் சரிகிறதுமாய் சுடு மணலில் விழுந்த நாக்கிளிப் புழுசாடை கட்டிலில் கிடந்து நுளுந்தினான்.

அறை ஏகம் பனிமூடம் அப்பிய குளிரிலும் தேகமடங்க ஒரே புழுக்கம்.

தலை அம்மிக் கனத்தது.

தவ கோலத்தை மீறி, பிரபஞ்சத்தில் உற்பவித்துப் பிறந்த பாவத்திற்காக எப்பவும் உத்தரிக்கவேணுமென்ற வலிய எழுத்து, இவன் மீதும் தலையெழுத்தாக விழுந்திருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'சவம் விழுந்த பிரச்சினையால, முழுச் சுத்து மாத்துக் காறங்களையும் 'நீதான் ராசா தஞ்ச' மெண்டு கும்பிட வேண்டிக் கிடக்கு'.

யேசுநாதராக வேஷித்த யூதாஸ்களால் நாற்பது வருஷப் பலஸ்தீனப் போராட்டத்தை முழு இழப்போடும் இஸ்ரேலி யருக்குக் காட்டிக் கொடுத்த பாஸ் நேற்று ரி.வி.யில் பார்த்த பின் இவனுக்கு எழுந்த வெப்பிசாரம் இன்னும் தீரவில்லை.

'போராடுகிறவன் நீதி கிடைக்கிறவரை சரணாகதி யடையக் கூடாது' என்று தன்னாரவாரம் கமறினவன் தங்கச்சியாா விஷயத்தில் அரபாத் போலவே தளம்பினான்.

'என்ன செய்ய ....?'

பனங்காய் பிணைகிறசாடை நாலு சாமமாக யோசித்தும் மூளையில் ஒரு 'வெள்ளிடி' யும் தடக்குப் படவில்லை. நரம்புகள் தறுக்கணித்து மண்ஷ்ட கூழாகினதுதான் மிச்சம்.

அழாக் குறையாக மனசு குழந்தை வெம்பல் போல் தேம்பிக் கேவ, கண்கள் பளிங்குச் சிமிழாக மினுங்கிக் குதம்பின.

கண்களுள் நீர் கரிந்து குமுழ்த்தது.

விவரிக்க முடியாத பிறவித் துயரம் நெரிஞ்சிமுள் சாடை நெருடி நெஞ்சுள் குதறிற்று.

'பெண்ணோடு பெண்ணாகப் பெண் சகோதரி பிறந்தாலும், பெண்ணோடு கூடி ஒரு ஆண் சகோதரன் பிறக்கக் கூடாது' என்ற 'ஞானம்' தங்கச்சியால் புதிதாக இவனுக்கு உதித்தது.

'இப்ப இருக்கிற நிலையில் துவக்கைப் படைச்சவனே வந்து கும்பிட்டாலும் அதை நம்பி எடுத்தவே கடைசி வரை விடாயினம். ஆனபடியா, இனி ஒருக்காலும் இலங்கையில சமாதானம் வராது' ....

ஒற்றை ஆட்சி, சமஷ்டி, சுயநிர்ணய உரிமை, பிரதேச சுயாட்சி, பிரிவினை - ஒன்றுக்கொன்று கோசுபோகாத

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வினைப்பாடு உயிர்ப் பிரச்சினையாகியதால் தன்னாதிக்க வர்க்கம் எதனையும் தீர்க்காமல் ராட்டினம் ஆட்டுகிற விறுத்தம், ஈற்றில் அவன் தங்கச்சியை எடுப்பிக்க முடிவு கட்டிற்று. அவன் கருதியதே இலங்கையில் நிகழ்ந்தும் வருகிறது.

கண்டியிலிருந்து கனகு வேறு போன கிழமை எழுதிய கடிதமும் இவன் வைரித்த முடிவை உறுதிப்படுத்திற்று.

'. . . இப்ப தரைப் பாதை துண்டா இல்லை. கப்பலில் திரிகோணமலையால் கே.கே.எஸ்.ஸில் இறங்கி, பருத்தித்துறை மார்க்கம் யாழ்ப்பாணம் அடைந்தேன். இது போராளிகள் வச மிருப்பதால் அரச பிடியில் உள்ள கப்பல் ஊர்காவற் துறைக்குச் செல்கிறது. யாழ் வர, 'ரிக்கற்' நூறு ரூபா. ஜே.ஆர். போல் சனங்களைப் பேய்க்காட்டி மேளம் அடித்த பிரேமதாச கொலையால் தெற்கிலேயே சீன வெடி. இது ஒரு புது விநோதம். கிளாலிப் படகில் வந்த சனத்தை ராணுவம் சுட்டதால் யாழ்ப்பாணம் கெலிமண்டிப் போய்க்கிடக்கு . . . ஊரைப் பார்க்கச் சென்றேன். பிரயாணம் ' சிமேன்ற் பக்டரி' ஊடாக உள்ளது. தெல்லிப்பழைச் சந்தி திரும்பிக் கட்டுவன் முடக்குக் கழிந்து, குரும்பசிட்டி ரசிகமணி கனக செந்தில்நாதன் வீடு தாண்டினால் பலாலி 'ஆமி காம்ப்' பூதம் போல் தெரிகிறது. 'பக்டரிக்'குக் கிட்டவாகத் தப்பியுள்ள வீடுகளில் உரிமையாளர்கள் இல்லை. ஒரு காலம் சனங்களை உள்ளே விடாமல் பூட்டிய 'மாவிட்ட' புரக் கோயிலுக்கருகில் சில வீடுகள் உருப்படியாக உள்ளன. பெண் புரசு கிடையாது. கட்டுவன் முழுசாகத் தரை மட்டம். எங்கள் ஊரில் பாதிவீடுகள் அழிந்து விட்டன. கீரிமலை ஏகண்ட வெளி; அந்த ஊரே இல்லை. 'ஷெல்' அடிகளாலும் 'புல்டோஷர்' இடிகளாலும் எல்லா வீடுகளும் நாசமாயுள்ளன. 'றெயில்வே ஸ்ரேஷன்' பக்கம் ரண்டு நாள் நடமாடியே காங்கேசன் 'டவுனை'க் கண்டுபிடித்தேன். பார்க்கிற இடமெல்லாம் ஒரே சவக் காடு . . . .'

புகை கக்கி நீறான மூன்று 'பைக்கற் சிகரட்' கட்டைகள் குவிந்த தட்டையும், வெறுசான 'வயின்' போத்தலையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்துக் குசினிப்* 'பூவல்' வாளியில் போட்டவன், மறுபடி 'ஸ்ரூல்' விளிம்பில் வைத்தான். புகை நச்சிரமாக அறை ஏகலும் பரவி நாசியில் புரைந்தது.

தேகம் ஊனி மனசு நிலை கொள்ளாது அந்தரப்பட்டுக் கொண்டிருக்க, சொல்லி வைத்த மாதிரி வந்த போனை, இவன் ஓடிப் போய் 'அவுக்' கென்று எடுத்தான். அது 'டக்' கென்று 'கட்' டாகியது.

'ஆ . . . . . . '

அழுகை வெடித்து வருமாப் போல் நெஞ்சு குமுறிற்று.

வெப்பிசாரம் ஓய க்ஷண நேரம் எடுத்தது.

'குமர்ப்பிள்ளை . . . . . . என்ன பாடோ . . . ?'

நினைக்க, மனசு உருகி நெஞ்சு பதறுகிறது. 'கதைச்சமாதிரிப் பாத்தா, தங்கச்சி இம்மட்டைக்கு ஜேமனிக்கு வந்திருக்கும் . . . . '

திடமாக இவன் நம்பியிருக்கிறான்.

ஒரு சங்கடம். விடிய எட்டு மணிக்கு வேலைக்கு 'றங்க' வேணும்.

'போன் கோல்' வரவில்லை; குடுத்த நம்பருக்கு இவன் எடுத்தபோதும் பதில் இல்லை.

'சிங்கப்பூருக்கு ஒருக்கா எடுத்துப் பாப்பமோ . . . . ?'

உலை கொதிக்கிற மாதிரி நெஞ்சு, மனசு, தேகம், 'கதகத' த்தன.

கூப்பிட நினைத்த நாள் தொட்டு இதுவரை 'போனு' க்கே அரை லட்சம் செலவு. வந்து சேர்ந்தால் அவனுக்குப் போதும்.

* குப்பை வாளியில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கச்சி கொழும்பு நிலையத்திலிருந்து 'பிளேன்' எடுக்கிறபோது கதைச்சாளே, அந்தக் கீச்சுக் குரல்தான் இப்ப இவன் 'பிடி' யாக இருக்கிறது.

அவள் குரல்தான் ஓயாமல் காதில் மறுகியது.

"அண்ணா, இரவு பத்து மணிக்குப் 'பிளேன்' எடுக்கிறன். அது பன்ரண்டு மணிக்கு முன் சிங்கப்பூர் வந்திடும். அந்தடியலா ஜேமனிக்கு வந்ததும் 'போன்' பண்ணுவன். முடிஞ்சா, 'ஏஜென்சி' தந்த நம்பருக்கு நீங்கள் கதையுங்கோ .."

சுழி கடல் நீர் சமமான நிலைக்கு அவன் மனசு வந்தது.

'இந்தறுதியில 'பிளேன்' ஜேமனிக்கு வந்து சேந்திருக்கும் . . . . '

தேகம் குறாவி இமை சுருங்கிக் கண் சுயர்க் கட்டுகிறபோது, 'போன்' மறுபாட்டம் அலறிற்று.

போர்வைக்குள் சவமாகக் கிடந்த சடலம் வீர பாண்டிய கட்டப் பொம்மன் சாடை உஷார் கொண்டு திமிர்த்தது.

நகங்கள் விரித்த புலிப்பாய்ச்சல்.

"ஹலோ . . . . . , "

"ஹலோ, தார், மனோவே ?"

"ஓமோம்"

"நான் வீரசிங்கம். . . சிங்கப்பூர் 'ஏஜென்சி ஒவ்வீஸி' லயிருந்து பேசுறன்"

"இன்னும் ஜேமனிக்கு வரேல்லியே ?"

"இல்ல "

"ஏன்"

"பிசகு முடிய வருவம்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என்னது . . . ?"

"காசு விஷயம்தான் . . அது உங்கட முடிவிலதான் கிடக்கு. முடிச்சா இண்டைக்கெண்டாலும் வரலாம்"

பிரிவதுபோல் தத்தளித்த உயிர் திரும்பி வந்தது.

"அதெல்லாம் ஊரில தீத்திருப்பினம். இல்லாட்டியும் தீர்க்கலாம்தானே ?"

" தீர்க்காதபடியாத்தான் சொல்றன்"

"இப்ப தங்கச்சி எங்க நிக்கிறா?"

"அவ இஞ்ச 'ஹோட்டல்' ல பத்திரமா இருக்கிறா"

"அவவோட ஒருக்காக் கதைக்க வேணும் . . . .

"பிரயாணக் களை . . . . நித்திரையாக் கிடக்கிறா" தொண்டைக் குழி 'முடுக்' கிட்டது.

'பத்திரமா இருக்கிறா' வெண்டுற கருத்தென்ன?'

"ஏன், ஏதும் வில்லங்கமே?"

"சா, அப்பிடியொண்டுமில்ல. நானும் பெண் சகோதரத்தோட பிறந்தனான்தான்"

'என்ர சகோதரிக்கு உவன் சகோதரனில்ல. நல்ல பகிடி விடுறான்'

"பேந்தேன் மினைக்கெடுவான். அடுத்த பிளேன்ல அனுப்பி வையன்"

"அனுப்புறதோ?"

கோடை இடி ஒன்று முழங்கி மின்ன, உடல் அதிர்ந்தது.

"ஏன், என்ன சங்கதி?"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நாலு லட்சம் பேசி ரண்டுதான் கொழும்பில தந்தினம். மிச்சம் சிங்கப்பூர்ல தாறதாப் பேச்சு. உங்கட சொல்லை நம்பிக் கூட்டியந்து இஞ்ச நிண்டு பாத்தா, அவே சொன்ன ஆக்களும் வரேல்ல, காசும் தரேல்ல . . . எல்லாமா இப்பவே எனக்கு நாலு முடிஞ்சுது."

நெய்யாக உருகிய நெற்றி வெயர்வையை மனோ விரலால் அழுத்தி எறிந்தான்.

'ஐயையோ, வஞ்சகமில்லாத இந்தப் பாவிப் பிள்ளைய இவன் எக்கணம் இடை நடுவில் விட்டிட்டு ஏமாத்தப்போறானோ . . . . . '

"உதொண்டும் எனக்கு வடிவா விளங்கேல "

"என்ன பகிடியே விடுறாய். . . . நீயெண்டாலும் காசு அனுப்பியிருக்கலாம் தானே ? "

'இப்ப நீதி நியாயம் கதைச்சால் காரியம் ஒப்பேறாது" என்று இவனுக்குத் தெரிந்தது. அவசரப் படாமல் நிதானமாகச் சொன்னான் :

"அண்ணை . . . . . . . சிங்கப்பூரால ஜேமனிக்கு வந்து, பிரான்சில விடுறதெண்டுதானே பேச்சு . . . . ? "

"ஓ . . . . அதுக்கு அட்டி இல்ல "

"அப்ப, பேந்தேன் பின்னடிக்கிறாய் ? "

"முழுக் கணக்கும் சிங்கப்பூர்ல தீக்கிறதாத்தான் வாக்கு"

"இனி நானே சிங்கப்பூருக்கு வாறது?"

"அது என்னவோ, எனக்குத் தெரியாது. பிசகு தீத்தாத்தான் இஞ்சயிருந்து கிளம்புவேன்"

"தங்கச்சிய ஒருக்காக் கதைக்க விடுங்கோ . . . "

"அவ இன்னும் எழும்பேல"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'போன்' – 'கட்' டாகியது.

'ஐயோ கடவுளே . . . '

ராணுவம் – காடையர்களிடம் அம்பிட்ட சனம் 'கடவுளே காப்பாற்று' என்று அபயமிட்டும் ஒருவரும் தப்பாமல் செத்தே போச்சுது என்ற உண்மை தெரிந்தும் பழக்க தோஷத்தில் இவன் அபயமிட்டான். மூளை கலங்கியதே பலன்.

போன மாதம் வாசித்த கதை ஒன்று ஞாபகம் வந்தது.

சிங்களப் பொலீஸ் இன்ஸ்பெக்டரிடம் சிக்கிய தமிழ் இளைஞனைக் காப்பாற்ற, பழைய கல்லூரி நண்பரான இன்னோர் சிங்களப் பொலீஸ் அதிகாரியைத் தேடிப் பிடித்து 'விடுதலை' யாக்கிய தமிழரின் சிறு புராணம். இவன் நம்பிக்கையை இது சிதைத்தது. சட்டத்தை மீறும் பொலிசே பாதகனாயிருக்க, பணம் வறுகும் வேட்டை நாயான ஏஜென்சி விடுவானா? இவனுக்கு இசைவான ஒரு வேடனை அந்தக் கதாசிரியர் போல் எங்கே தேடிப் பிடிப்பது?

'முயற்சி திருவினையாகும்' என்ற ஆன்றோர் வாக்கு இவனை உசார்ப்படுத்தியது.

இவனே சிங்கப்பூருக்குப் 'போன்' எடுத்தான்.

"ஹலோ . . . நான் மனோ பேசுறேன் – வீரசிங்கம் அல்லது தங்கச்சி ராதா நிக்கினமா . . . ?"

"ஓமோம் . . . நான் வீரசிங்கம்தான் பேசுறன்"

"தங்கச்சிய ஜேமனியில கொண்டு வந்து விட்டால் நான் அங்க வந்து நேரில எல்லாப் பிசகும் தீர்க்கிறன் – என்னை நம்புங்கோ . . . "

"வாய்ச் சொல்லில எனக்கு நம்பிக்கையில்ல"

"அப்பிடியெண்டா, தங்கச்சியின்ர முழு நகையளையும் வேண்டிக் கொண்டு அவவைப் பத்திரமாக் கொண்டு வந்து விடுங்கோ. நீங்களும் பெண் சகோதரத்தோட கூடிப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறந்தனீங்கள் . . . . கணக்குப் பாத்துப் பிசகு தீர்க்கிறன் . . . ஒருக்கா, தங்கச்சிய என்னோட பேசச் சொல்லுங்கோ . . . "

"இப்ப, அவ இஞ்ச இல்லை"

"எங்க போட்டா?"

"தெரியாது"

'டங்'

'போன்', 'கட்' டாகியது.

எரி நட்சத்திரங்கள் வானமடங்க இடியுண்டு சிதறி, ஒரு மின்கதிர்ச் சூறாவளிபோல் தாறுமாறாகச் சீறிச்சுழன்று அவன் கமண்டலத்துள் வெடிகுண்டுகளாக அதிர்ந்தன.

'என்னுடன்பிறப்பே' என்று அவன் வாய் பிதற்றி மனம் உழன்று கதறுகிறபோது . . .

'போன்' கணீரித்தது.

"ஹலோ . . . "

"ஹலோ, அண்ணா . . . மனோ அண்ணா . . . "

"தார் தங்கச்சியே?"

"நான் தங்கச்சி ராதாதான் பேசுறன் . . . நீங்க பதறாதையுங்கோ . . . "

"ராசாத்தி . . . என்னடா நடந்தது?"

"அண்ணா கலங்காதையுங்கோ . . . ஏஜன்சி வீரசிங்கம் 'பாட்டி' மாறியிட்டுது. உங்களோட கதைச்சது அவற்ர சின்ன . . . எங்க பணம் வறுக மறுகினமோ தெரியாது. . . நீங்க ஒண்டுக்கும் யோசியாதையுங்கோ . . . என்னைப் போல லட்சக் கணக்கா இழந்து அந்தரப்படுற வேற பிள்ளைகளும் இஞ்ச நிக்குதுகள். அவையும் என்னைப் போலத் துணிச்சிட்டினம். அவையளோட நாளைக்கு ஜேர்மனிக்கு வந்து 'போன்'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்ணுவன். தச்சேலாப் பிடிபட்டா ... அப்பிடி நடவாதெண்டு நம்புறன் - அப்பிடித் திருப்பி அனுப்பினா, கொழும்பில நிண்டு 'போன்' எடுப்பன். அதுக்குப் பிறகு அடுத்த காரியம் பாப்பம் - கவலைப்படாதையுங்கோ ... "

"தங் .........."

வீரகேசரி - 1993.

University of Peradeniya
04 JAN 2022
LIBRARY

704728

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

A propos de l'Auteur



Ecrivain et poête, M. Agasthiar est l'auteur de 360 contes, 40 petits contes, 10 nouvelles et 9 romans. Il a écrit plus de cent articles, des commentaires ainsi que des critiques littéraires. Il a également à son compte 20 théatres radio diffusés, des théatres de plein air ainsi que des récits imaginaires. Il écrit sous une vingtaine de pseudonymes. Il connaît la musique carnatique et sait jouer au mirdangam (instrument à percussion).

Membre du Comité Exécutif de l'Association des Ecrivains Progressistes au Sri Lanka, il a écrit dans la quasi totalité des journaux et magazines srilankais, dans le "Tamilosai" de B.B.C. (Londres), ainsi que dans les magazines indiens "Tâmarai", "Ejouttou", "Kalaimagal", "Tîbam", "Djîvâ", "Cannadâssane"...

Après 50 ans d'activités littéraïres, il continue à écrire dans "Tâmarai" magazine. Ses oeuvres littéraires ont été traduites en Cinghalais, Malayalam et Russe.

Il est né le 29 août 1926; il est le troisième enfant du couple Savarimouttou et Annamma de Anaicottai près de Jaffna au SRI LANKA. Victime des émeutes raciales de 1983, il s'est réfugié en France en 1986 avec sa famille. Il a trois filles et un garçon.

Grâce à l'Equipe médicale de l'Hôpital Dieu de Pâris, il a été sauvé d'une grave maladie. Il a toujours reconnaissance au docteur James et aux autres professeurs, infirmières et membres de l'Equipe.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org